இலவச வெளியீடு: GERMANY , ENGLAND வைகாசி.May. 2016

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 66

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
மாபெரும்
தொடர் மலிவு விற்பனை!
விபரம் பக்கம் 10
தரமான தங்க நகைகளுக்கு
உத்தரவாதமிக்க நகைமாளிகை
Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836



## யேர்மனியில் பூனைக்கு செல்போன் விளையாட்டு !

# பயணிக்கு உயிர் போச்சு!



## ஈ சிகரெட் பாதுகாப்பானதா?

## வேலை மட்டுமே வாழ்க்கை அல்ல!

work / life / balance

திரை உலகம்

MAY DAY!
Page 07

## யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 09

கனீன் எலக்ரோனிக்ஸ்
சகல Alarmanlage, Überwachung
Kamera,பொருத்துதல்..
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 24

டோட்மூண்ட் நகரில் எட்டாவது ஆண்டில் எமது சேவை!
Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
விபரம்
Vetti+1

Frankfurt:Tel:069 97 693 374
SARAVANAA BHAVAN

Lucky Fly
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise
மாபெரும் ராஜமுத்திரை
என்றும் புதியது அழகின் இரகசியம் அது.
திருமண பட்டுப்புடவைகள்
பாட்டி சாறிகள்,பஞ்சாபிகள் அனைத்தும் ,
தரமும், தாராளமான தேர்வும்
நம்வசம்!
Tel:0231 9501 647
Mr.P.Sritharan.
Proprietor
Adler str 33 - 44137 Dortmund












# வேகத்தைக் கட்டுப்படுத்தும் தெருப்பாடகன்

நாம் வீட்டில் பாடல் கேட்பதை விட வாகனத்தில் தெருவில் செல்லும் போது அதிகமாகக் கேட்போம். வா கனத்தில் பாடல் கேட்பது ஒரு வகை சுகம்.
இப்போ வாகனம் போகும் போது தெருக்களே பாட ஆரம்பித்துவிட்டன. தெருக்களில் ஒரு வழிப்பாதை, வேகக்கட்டுப்பாடு, சைன்போட்டுகள், என்று பல வகையான சைன்போட்டுக்கள் தெருக்களில் இருக்கும்.
தற்போது ஒரு சைன்போட் அதிகரித்துள்ளது. அதுதான் எதிரே இசைத்தெரு ஆரம்பமாகிறது என்ற சைன் போட்டாகும் (**Musical Road)** இது யப்பானில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.




தெருக்களில் வாகனங்கள் செல்லும்போது அதன் வேகம் மணிக்கு 45 மைல் வேகமாக இருந்தால் மட்டுமே அழகான இசையைக் கேட்க முடியும். தெருக்களில் ஒரு ஒழுங்கான அதிர் வலைகளை எழுப்பக்கூடிய ஒரு தளம் அமைக்கப்பட்டு இருக்கும். அதற்கு மேலால் வாகனத்தின் ரயர் செல்லம்போது ஏற்படும் ஊராய்வில் அந்த இசை தோன்றும். இந்த இசையைக் கேட்பதற்கென்றே சாரதிகள் வேகத்தை கட்டுப்படுத்தி 45 மைல் வேகத்திலேயே பயணிப்பர்.

சாரதிகளுக்கு இசைவாக ஒரு இசைத்திட்டத்தை யப்பான் மேற்கொண்டு உள்ளது. இதுபேன்று கலிபோனியாவிலும் உள்ளது. எங்கு எப்படி இருந்தாலும் இதனை உலகிற்கு முதல் அறிமுகப்படுத்திய நாடு டென்மார்க்காகும். 1995 ஆண்டு இந்த இசைவடிவான தெருவை உருவாக்கியிருந்தனர்.

தென் கொரியாவில் அமைக்கப்பட்ட இதுபோன்ற தெருவில் நீங்கள் சரியான வேகத்தில் சென்றால் பாடும் பாட்டு எது தெரியமா? நீங்கள் சிறுவயதில் பாடிய இந்த 'Mary had a little Lamb" பாடல்தான்.

யேர்மனியிலும், ஐரோப்பிய, நாடுகிளிலும் வேகக் கட்டுப்பாடு அற்ற பெரும் தெருக்களில், சாரதிகள் தூங்கிவிடாது இருக்க, தெருவில் கரையோரம் அந்த வெள்ளைக்கோடுகளுக்குள் சில "rumble strips" திடல்களை ஏற்படுத்தி இருப்பார்கள். அவை மீது வாகனத்தின் ரயர் ஏறும்போது ஒரு கூவல் சத்தம் எழும். இதனைக் கேட்டதும் சாரதியின் தூக்கம் கலையும். இதே நடைமுறையை சற்று சீரமைத்தே இந்த இசையூட்டும் தெருக்கள் தற்போது அமைக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த தெருக்களில் பயணம் செய்பவர்களது மனமும், அந்த இசையோடு சேர, அவர்களையும், அறியாது அவர்களது வேகம் சீராக அமையும்.
ஆனால் ஒரே பாடலை நாம் தினமும் கேட்டால் சலிப்பு வரும் அல்லவா? அப்டியானால் இந்த தெருப்பாடால் சலிப்புத்தட்டத் தொடங்கினால்....





Singing Road, Anyang, South Korea

**சரியான வேகத்தில் இந்த தெருக்கள் மீது நீங்கள் வாகனத்தில் பயணித்தால் அருமையான இசையைக் கேட்கலாம்.**








வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 236



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com



Company No: 8876276


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962


# யேர்மனியில் பூனைக்கு விளையாட்டு பயணிகளுக்கு உயிர் போச்சு!






பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு உயிர்போகிறது என்று ஒரு பழமொழி எமது நாட்டில் உண்டு .அது இன்று யேர்மனியில் செல்போனில் விளையாடி பலரின் உயிரைக் காவுகொடுத்த நிகழ்வுக்குப் பொருந்தும்.

ஜேர்மனியின் (southeast of Munich, the Bavarian capital.) பாவாரியா மாகாணத்தில் உள்ள Bad Aibiling என்னுமிடத்தில் 09.02.2016 ஒரே தண்டவாளத்தில் வந்த இரண்டு ரயில்கள் ஒன்றுக்கொன்று நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்த விபத்தில் 10 பேர் பலியா கியுள்ளனர் என்றும் 18 பேர் பலத்த காயமடைந்துள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்திற்கு ஆரம்பத்தில் சமிக்கைவிளக்கில் எதோ கோளாறு, என்றும் பின்னர் முடக்கில் புகையிரதம் வந்ததை அவதானிக்கவில்லை என்றும் பலவிதமாக பலகதைகள் வந்து ஓய்ந்த நிலையில் இப்போ கடந்த மாதம் 12ம்திகதி புலனாய்வுப்பிரிவு உண்மையான காரணத்தைக்கண்டு பிடித்துள்ளது.

அதவது 39 வயது நிரம்பிய சமிக்கைவிளக்குக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் தனது வேலை நேரத்தில் அதாவது இந்த விபத்து நிகழும் நேரத்திற்கு சற்று சில நிமிடத்திற்கு முன் (an online computer game) வரை மொபைல் போன் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார் என்ற உண்மை தெரியவந்துள்ளது.

விளையாட்டில் ஈடுபட்டிருந்தவர் தடுமாறி பொத்தானை மாறி மாறி அமத்தி.பின் சரியானதை அமத்தியும், புகை யிரதம் தவறானபாதையில் பயணிக்கத் தொடங்கியதால் நிறுத்த இயலாது விபத்து நடந்துவிட்டது. ஒரு மொபைல் போன் விளையாட்டால் திசைதிருப்பப்பட்ட நிலையில் இந்த பாரியவிபத்து நடந்துள்ளது.

இன்று இந்த மொபைல் போன் விளையாட்டு, மற்றும் மொபைல் பாவனையால் உயிர்கள் காப்பாற்றப்பட்டு வந்தாலும் சரிக்கு சரி அதனாலே விபத்துக்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன.

வாகனத்தில் போவதால் மட்டுமல்ல, இன்று விபத்துக்கள் சாலை ஓரம் நடக்கும்போதும். விபத்துக்கள் இந்த மொபைல்கள் தருகின்றன.





நடந்து செல்லும் போதும் தெருவைக்கடக்கும் போதும் இந்த மொபைல் பேசியபடியே இருக்கும். சில சமயங்களில் விபத்து நடைபெறும்போதும் இறுதி மூச்சுவிடும்போதும் இந்த மொபைல்கள் நேரடி வர்ணனைகளைமட்டுமே செய்யும் கொடுமையும் நிகழும்.

பெற்றோரும் இதற்குப் பொறுப்பு. பிள்ளைகள் வீட்டில் இருந்து புறப்பட்டதும், பெருந்தெருவை அடையும்போதும் இவர்கள் சுகம் விசாரிப்பதாக எண்ணிக்கொண்டு இந்தக் கொடுமையைச் செய்வார்கள்.

தொடர்ச்சி 4ம் பக்கம்






## நெடுந்தீவு முகிலனின் கதையும் கவிதைகளும் 7



# காலமும் கோலமும்

### கதை



மூத்தவன் கலியாணம் கட்டி
லண்டனுக்கு போய் ஏழு வருசம்.

முறைமாமனையே கைப்பிடித்து
இளையவள் சுவிஸ்லாந்தில்...

அடுத்தது மருத்துவம் படிப்பதாய்
இரண்டரை வருசமாய் ரசியாவில்...

நாலாவது டோர்ச் பாஸ் பண்ணி...
யேர்மனியில் குடியுரிமையும் பெற்று விட்டது.

ஐந்தாவது கப்பலில் அவுஸ்ரேலியாவுக்கு போய்
அகதி அந்தஸ்து கிடைத்து விட்டது.

கடைசியும் கனடாவுக்கு போவதற்க்கான
சம்பந்தக்கலப்பு முடிய இந்தியாவில் தங்கி விட்டது.

நமக்கு பிறந்ததுகள் எல்லாம் அன்னிய நாட்டில்
வாழ்வு தேடுது வேலை தேடுது - எங்கள் வாழ்க்கை
இலங்கையில் முதியோர் இல்லத்தோடே போகிறது.

### கவிதை



# வேப்பங் குச்சி பேரழகி

உலை கொதிக்கிற நேரம்..அடுப்பு ஊதுற வேளை...
கஞ்சி வடிக்கிற பொழுது - உன் நினைப்பு
எப்பவுமே என்னை விட்டதில்லை...

காய் கறி வெட்டும் போது
உன் ஞாபகம் என் விரலை வெட்டியதுண்டு.

தேங்காய் சிரட்டையை எலி கடித்திருக்கையில்
என் கன்னம் உன் முத்தங்களுக்காய் ஏங்கும்.

அம்மியில் ஒட்டிய மிளகாய் வித்தாயாவது
என்னை அணைப்பாயா..?

தொண்டையில் குத்திய
தூதுவளை முள்ளாய்
காயம் வைப்பாயா..?

வெங்காய கூடையுள் வாழும்
பூடு போல்
என் வீடு வருவாயா...?

திருகணியில் சட்டிவைத்து
திருவலையில் உன்னை வைத்து

ஒரு வேளை உணவு தாறேன்
என் ருசி அறிவாயா..?

புகட்டில் பூனை படுத்திருக்கிறது
என் மடியில் நீ எப்போது
தூங்குவாயோ....?





3ம் பக்கத் தொடர்ச்சி பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு....

தம்பி தெருவுக்கு ஏறிவிட்டாயா?
பாத்துப்போ!
இப்படி பல எச்சரிக்கைகள் விடுத்துக்கொண்டே இருப்பார்கள். பிள்ளைகளுக்கு போகும் முன் சொல்லி விட்டால் போதும். செல்லவேண்டிய இடத்தை அடைந்ததும் எடுத்துச் சொல்லுங்கள் அல்லது ஏதும் தேவை என்றால் நீங்களே அதாவது பிள்ளைகளே எடுத்து பெற்றவர்களுக்கு சொல்லுங்கள் என்று சொல்லி வழியனுப்ப வேண்டும். இது நடைமுறை இல்லை என்றால். வேறு பல துன்பங் களுக்கும் உங்கள் அதிதீத அக்கறையே காரணமாகும்.

தன்னைத்தான் பார்த்துக் கொள்ளும் ஆற்றல், தானாக வருவது. தன்னை இயக்க தன்னால் முடியாமல் இன்னுமொரு றிமோட் தேவைப்படின் அது ரோபோ அல்லவா! பிள்ளைகளை ரோபோ ஆக்காதீர்கள். ஒரு கணம் நம்மை எண்ணிப்பாருங்கள். ஒரு வயதிற்குப்பின் நாமே இயங்கினோம். நாம் இனம் தெரியா தேசத்தில் வந்து வாழவில்லையா? நாம் இங்கு அன்று வரும்போது நம் பிள்ளைகளது வயதுதானே நமக்கும்.

விபத்துக்களுக்கு மொபைல்மட்டுமல்ல, சில கவர்ச்சியான, அல்லது அழகான விளம்பரங்களும் காரணம். தமிழ்நாட்டில் நடிகர்களின் கட்டவிட்டைப் பார்த்தபடி ஆவுட்டாப்போன சாரதிகளும் உண்டு. வெளிநாடுகளிலும் இது நடக்கிறது. நடிகர்களது படம் அல்ல. கவர்ச்சியான படங்களை, விளம்பரமாக வாகனங்கள் சுமந்து செல்லும்போது, மனம் தடுமாறி பார்வை செல்ல வாகனம் விபத்துக்குள்ளாவதும் உண்டு.

தெருக்களில்,நடைபாதைகளில், மொபைல் பேசிக் கொண்டு, யேர்மனியில் நேருக்கு நேர் ரெயின் மோதியதுபோல, மண்டையும், மண்டையும் மோதுவது உண்டு. மொபைலை கொஞ்சம் மூடினால் வாழ்வைக் கொஞ்சம் கொஞ்சலாம். இல்லையேல் பூனைக்கு விளையாட்டு, எலிக்கு உயிர்போச்சு என்ற கதைதான்.






லூர்ட்ஸ் மாதா – போத்துக்கல் பார்த்திமா

july, Aug , மாதங்களில்

எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூர்ட்ஸ் மாதா கோவில்
மற்றும்
போத்துக்கல் பாத்திமாகோவில்
இவற்றிற்கு பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.

புனிதப்பயணம்

போத்துக்கல்–(பார்த்திமா )

லூர்ட்ஸ் மாதா கோவில்

உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754

Handy: 0175 850 14 89



# சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொண்ட பக்தர்கள் 200 பேர், பாதை தவறினர்!



சிவனொளிபாத மலைக்கு யாத்திரை மேற்கொண்டவர்களில் சுமார் 200 பேர் வழிதவறியுள்ளதாக நல்லத்தண்ணி பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

புத்தாண்டின் பின்னரான காலப் பகுதியில் மாத்திரம் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் சிவனொளிபாத மலைக்கு வருகைத் தந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.
ஹட்டன் வழியாக மலை ஏறியவர்கள் வழி தவறி இரத்தினபுரி வழியாக இறங்கிய சம்பவங்கள் பல பதிவாகியுள்ளது.இவ்வாறு வழி தவறியவர்களில் அதிகளவான சிறுவர்களும் முதியவர்களும் அடங்கியுள்ளனர். அதிக சன நெரிசல் காரணமாகவே இவர்கள் வழி தவறியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

இவர்களை பொலிஸார் மீட்டு குடும்ப உறவினர்களுடன் சேர்த்து வைத்துள்ளனர்.யாத்திரை மேற்கொள்ளும் பொழுது முதியோர் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் அதிக கவனத்துடன் இருக்கும் படி பொலிஸார் வேண்டு கோள் விடுத்துள்ளனர். சிவனொளிபாத மலை உச்சியில் அமைந்துள்ள பாதத்தை இந்துக்கள் சிவனது பொற்பாதம் என்றும். பௌத்த மதத்வர் புத்த பெருமானது பாதம் என்றும், வழிபட்டு வருகின்றனர். சிவனொளிபாத மலைக்கு அன்று, இந்துக்கள் பலர் யாத்திரை சென்று வந்தனர்.சிவராத்திரிக்கும் அலங்கார விளக்குகள் மலையை ஒளி ஏற்றி இருக்கும். (க.கிஷாந்தன்) நன்றி: வீரகேசரி

## வட மாகாண முதலமைச்சரை உடனழயாக கைதுசெய்து கடுமையாக தண்ழக்க வேண்டும்




ஆயுதத்தின் மூலம் வென்றெடுக்க முடியாத தமிழீழத்தை அரசியலின் மூலமாக வெற்றிகொள்ளவே வடமாகாண முதல்வரும், எதிர்க்கட்சி தலைவரும் முயற்சிக்கின்றனர். நாட்டிற்கும், அரசியல் அமைப்பிற்கும் எதிராக செயற்படும் விக்கினேஸ்வரனை உடனடியாக கைதுசெய்து கடுமையாக தண்டிக்க வேண்டும்.

அதேபோல் எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்து சம்பந்தனை உடனடியாக நீக்கிவிட்டு சிங்கள தலைவர் ஒருவரை நியமிக்க வேண்டும் என பொதுபல சேனா, சிங்கள ராவைய,ராவணா பலய ஆகிய சிங்கள பௌத்த அமைப்புகள் தெரிவித்தனர்.
சிங்கள மக்கள் மனங்களில் புகைந்துகொண்டிருக்கும் வெறுப்பையும், கோபத்தையும் தமிழ் மக்களுக்கு எதிராக திருப்பிவிட வேண்டாம் எனவும் அவ்வமைப்புகள் எச்சரித்தன.
பொதுபல சேனா, சிங்கள ராவைய , ராவணா பலய ஆகிய சிங்கள பௌத்த அமைப்புகள் இன்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.
சென்ற வாரம் பத்திரிகையில் வெளியான சில முக்கிய செய்திகள்.நன்றி வீரகேசரி




முற்பதிவுக்கு முந்துங்கள்
Bochum, Essen, Dortmund
Lucky Fly Reisebüro
2016 ஆம் ஆண்டு கோடைகால விடுமுறையைக் கோலாகாலமாகக் கொண்டாட
Bochum, Essen, Dortmund ஆகிய நகரங்களை உள்ளடக்கிய
Lucky Fly Reisebüro வழங்கும் சிறப்பு விலை
Summer holiday offers
2016
TICKETS ON SALE NOW
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Essen நகரில்...
Helmholtz Str.07
45143 Essen
Tel: 0201-80093764
Fax: 0201-80093749
துரித பணமாற்றுச் சேவை!!!
WESTERN UNION WU
moving money for better
MoneyGram
www.Lucky-fly.de
Email: info@lucky-fly.de
Allee Str.38-40a
44793 Bochum
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
Allee Str.38-40a
44793 Bochum
Tel: 0234-2399032
FaX 0234-79457171
Rheinische Str 64
44137 DORTMUND
0179 14 84 892
Tel:0234 23 990 32




# யாழ்ப்பாணப் பண்பாடு
# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

## ஆடிவரை பொறுங்கள் வாயூற உண்ணலாம்

ஒரு பிரதேச மக்களின் பண்பாட்டுக் கோலங்களில் உணவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்பது எமது இலக்கிய மரபு. இவ்வாறான பல தொடர்களை எமது இலக்கியப் பரப்பிலே தரிசிக்கலாம். உணவின் முக்கியத்துவம் உலகப் பொதுவானது.

யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் உணவுப் பழக்கங்களுக்கு அடிப்படையாக அமைவது புவியியல் சார் நிலவியல்பே எனலாம். பெரும்பாலும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பயிரிடக்கூடிய நெல், சாமை, தினை, குரக்கன், வரகு, எள், பயறு, உழுந்து முதலிய தானிய வகைகளோடு கிழங்கு வகைகளும் பனம் பண்டங்களும் மீன், இறைச்சி வகைகளும் இப்பிரதேச மக்களின் உணவு வகைகள் எனலாம்.

பனை உணவுகள்.
குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் வாழ்வியலோடு அண்மித்த முக்கிய உணவாக அமைந்தது பனம் பண்டங்களே எனலாம். இப்பிரதேச மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் பனம் பண்டங்களுக்குப் பிரதான பங்குண்டு.

19ஆம் நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்திற் “பனங்காய்ப் பாரதம்” என்ற பெயரில் ஓர் இலக்கியம் தோன்றியதையும் இங்கு சுட்டிக்காட்டலாம். சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பனம் பண்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருந்தது.

யாழ்ப்பாணத்திலே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்ட சீதன - முதுச உறுதிகளிற் குறிப்பிட்டளவு பனங்காணி (பனை அடைப்பு) வழங்கப்பட்டமையைக் கண்டுகொள்ள முடிகின்றது. குடும்பத்தின் வாழ்வாதாரத்திற் பனை வகித்த பங்கினையே இந்தக் காணியுறுதிகள் புலப்படுத்துகின்றன. பனையின் பயன்பாடு பற்றி யாழ்ப்பாணத்துப் புலவர்களும் வரகவிகளும் விதந்து பாடியமை அதன் பயன்பாட்டு முக்கியத்துவத்தை விளக்கும் பண்பாட்டு வெளிப்பாடே எனலாம்.

“வாழ்வுச் சுவடுகள்” என்னும் வாழ்க்கை வரலாற்று நூலில் இடம்பெறும் பின்வரும் பகுதி பனம் பண்டங்களில் ஒன்றான பனாட்டின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

வசதி படைத்தோர், வசதி குறைந்தோர் என்கின்ற பாகுபாடு இன்றி அக்காலத்தில் எல்லோரும் பனம் பழங்களைப் பொறுக்கிச் சேர்த்துப் பனாட்டுச் செய்வர். பனாட்டுத் தட்டுக்களை வடிவாக மடித்துக் கூடைகளில் அடுக்கி (பனையோலையாற் செய்யப்பட்ட கூடை - இதனைத் தொக்கடி என்பர்) வீட்டில் அடுப்பு எரிக்கும் இடத்தின் மேல் இதற்கென ஏற்கனவே இருந்த பரண்களிற் புகை பிடித்துப் பனாட்டுப் பழுதடையாதிருப்பதற்காக அவற்றை அடுக்கி வைப்பர்.

இக்கூற்று பனாட்டின் முக்கியத்துவத்தை மாத்திரம் பேசாமல் உணவுப்பொருட்களைப் பழுதடையாது பாதுகாக்கும் பண்பாட்டு முறைமையினையும் பேசுகின்றமையை அவதானிக்க முடிகின்றது. மாரி காலத்திற்குரியவற்றைக் கோடை காலத்திலேயே சேகரித்துப் பாதுகாக்கும் முறைமையும் எமது பண்பாட்டிலே முக்கிய இடம் பெற்றிருந்தது. வற்றல் கருவாடு, வடகம் முதலியன இன்றும் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பனையின் முக்கியத்துவம் பற்றிய பல செந்நெறி இலக்கியங்களும் இப்பிரதேசத்திலே தோன்றியுள்ளன. உதாரணமாகப் “பனங்காய்ப் பாரதம்”, “தாலவிலாசம”, “பனைப்பாட்டு”, “பனைநூறு” முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

பனம்பழச்சாற்றினைக் “களி” என்று குறிப்பிடுவர். பனையின் பழத்தினைச் சாப்பிடுவதற்குப் பழப்புளியையும் “காடியையும” பயன்படுத்துவர். இது பற்றிக் காதலியாற்றுப்படை பின்வருமாறு கூறும்.

காடியிற் தோய்த்த கனபனங் கொட்டையை
தாயர் தங்கையிற் தாவினர் வாங்கி
வண்டியும் சொக்கும் பனங்களி புரள
வண்டினந் தேனை உண்டல் போல
-----------------------------------------------------
பனங்காய்க் களியுடன் சாமைமாக் குழைத்து
வனைபந்தினைப் போல் நெய்யிற் போட்டுத்
தட்டுத்தட்டாய்ச் சுட்டுமே லெடுக்கும்
கமழ் தரு செம்பனங்காய் பணியாரமும்

பனம்பழத்தின் சுளையை உண்பதோடு பனங்களியிலே பலகாரம் (பணியாரம்) செய்வதும் வழக்கம். பனங்காய்ப் பணியாரம் பனங்காய்ப் பிட்டு என்பன குறிப்பிடத்தக்கன. பனங்களியைச் சாப்பிட்டால் நன்றாக மலங்கழியும் என்று கூறுவார்கள். இதுபற்றியும் யாழ்ப்பாணத்துக் கவிஞர் ஒருவர் பாடியுள்ளார். அப்பாடலின் ஒருபகுதி (நினைவில் உள்ளது) பின்வருமாறு:

ஆடி ஆவணி ஆகுமாதங்களிற்
காடி தோய்த்த கனபனங்காய்களை
நாடி நாடி நலம்பெற உண்பவர்
ஓடி ஓடி ஒதுங்கினில் குந்துவர்


நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

பனம்பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் பனாட்டு ஒரு காலத்திலே யாழ்ப்பாணப் பிரதேச மக்களின் பிரதான உணவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. சாதாரண பனாட்டு பாணிப் பனாட்டு என இரு வகையான பனாட்டுக்கள் பயன்பாட்டில் இருந்தன.

பனம் பழத்து விதையிலே “பாத்தி” போட்டுப் பனங்கிழங்கை அறுவடை செய்வர்.

நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பனம் பாத்தி பறித்திடுவோம் என்ற பாடல் ஒரு காலத்திலே புகழ் பெற்ற பாடலாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது. பனங்கிழங்கை அவித்துக் கிழித்துப் புழுக்கொடியல் செய்வர்.


பனங்கிழங்கைப் பச்சையாகக் கிழித்துக் காயவிட்டு ஒடியல் ஆக்குவர். ஒடியல் மாவிலே பிட்டு கூழ் முதலியவை தயாரிப்பர். கோதுமை மாவின் வருகைக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே ஒடியல்மா பெருமளவில் பயன்படுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி 06 ம் பக்கம்...



5ம் பக்கத் தொடர்ச்சி

## மறந்தவையும் மறைந்தவையும்







பனம் பண்டங்களைப் பட்டியலிட்டுக் காட்டுவது நமது நோக்கமன்று. ஆனால் பனையில் இருந்து பெற்ற உணவு வகைகள் பலவற்றை இன்று நாம் இழந்துவிட்டோம். நாம் ஏலவே சுட்டிக்காட்டியது போன்று இவற்றின் இழப்புக்கு அல்லது மறைவிற்கு நமது சமூக பொருளாதார அரசியல் மாற்றங்களே காரணம் எனலாம். இன்றைய இளந்தலைமுறையினரிற் பலர் ஒடியற் பிட்டு, பாணிப்பனாட்டு, கல்லக்காரம் (பனங் கற்கண்டு, பனை வெல்லம்) (பதநீர்) ஒடியற்கூழ் முதலானவற்றைக் கண்டிருக்கக் கூட மாட்டார்கள். யாழ்ப்பாணத்தின் சில கிராமங்களில் இன்றும் இவை பயன்பாட்டில் உள்ளதையும் குறிப்பிட வேண்டும். ஆனால் பனங்கட்டி இன்றும் பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஒடியற் கூழ்**

யாழ்ப்பாணப் பாரம்பரிய உணவுகளிலே ஒடியற் கூழுக்குத் தனித்துவமானதோர் முக்கியத்துவம் உண்டு. ஒரு காலத்தில் ஏழைகளின் பிரதான உணவாக இருந்த ஒடியற் கூழ் இன்று அதிக செலவில் தயாரிக்கும் பண்பாட்டுப் பேணுகையின் அடையாளமாக அமைவதையும் அவதானிக்க முடிகிறது. புலம் பெயர் தமிழர்களிடையேயும் இந்த ஒடியற் கூழ் பாரம்பரியம் வழங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

ஒடியற் கூழிலும் மச்சக் கூழ் (மாமிசம்), சைவக் கூழ் (மரக்கறி) என இரு வகை உண்டு. பல்வேறு பண்டங்களையும் போட்டுக் காய்ச்சுவதனால் ஒடியற் கூழ் ஒரு வகை சூப் தன்மையைக் கொண்டது எனலாம். ஒடியற் கூழ் பற்றி யாழ்ப்பாணத்து இலங்கியங்கள் நிறையவே பேசுகின்றன. வகை மாதிரிக்கு ஒன்றைக் குறிப்பிடலாம்.

அல்லலுற்றுக் கண்டிக் கப்பால்போய் நிவித்திக்
கொல்லைக்குப் போயலுப்புக் கொண்டதனால்- கல்லடியான்
வண்டாரும் மாலையணி மற்புயச் சுப்பையனுடன்
கொண்டாடி னான் ஒடியற்கூழ்

மேற்காட்டிய பாடல் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளையால் பாடப்பட்டது. ஒடியற் கூழ் உடல் அலுப்பு மாற்றுவது என்ற நம்பிக்கை முதியவர்களிடம் இன்றும் உண்டு.

**பதனீரும் கள்ளும்**

பனம் பண்டங்களில் பலரும் விரும்பிப் பயன்படுத்திய கள்ளு பதனீர் என்பவையும் யாழ்ப்பாணத்துப் பாரம்பரியப் பான உணவாகவே கருதப்பட்டது. பதநீரில் இருந்து தயாரிக்கப்படும் பனங்கட்டி, பனைவெல்லம் (கல்லக்காரம்) முதலியவற்றுக்கு இன்றும் பெருமதிப்பு உண்டு. பதனீர் விட்டு இனிப்புக்கூழ் காய்ச்சுவதும் எமது பண்பாட்டில் இடம்பெறுகின்றது. “ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை” எனத்தொடங்கும் சோமசுந்தரப்புலவரின் பாடலில் “கூடிப் பனங்கட்டி கூழுங்குடிக்கலாம்” என வருவதையும் “கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே” என்பதையும் இவ்விடத்திலே நினைவு கூரலாம்.

கள்ளும் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டது. கள்ளுப் பற்றி நிறையவே யாழ்ப்பாணத்துக் கவிஞர்கள் பாடியுள்ளனர். வகைமாதிரிக்கு ஒரு பாடலைச் சுட்டிக்காட்டலாம்.

கூவில் கணபதியும் கோண்டாவில் வைரவியும்
சீவித் தரும் கள்ளுத் தித்திப்போ- பாவியிவன்
பண்டைக் குலத்தோன்றல் பக்தன் பிரசாதம்
அண்டர்களும் காணா அமுது.

யாழ்ப்பாணத்திலே “கள்ளுக் கடவுளுக்குப்” பஞ்சபுராணம் பாடியுள்ளார்கள் என்பதும் இங்கு நினைவுகூரத்தக்கது. இந்நூலில் வரும் அரைவாய் மொழிப் பாடல்கள் என்ற பகுதியிலே அவை இடம்பெறுகின்றன.

இன்னும் அடுத்த இதழில்.

## வடமராட்சியில் இடம்பெற்ற பேராசிரிய இணையரின் பவளவிழாவும் பொன்விழாவும்



வாழ்நாள் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் மண ,இணையரின் பவளவிழா மற்றும் ,இல்லற ,இணைவின் பொன்விழா ஆகிய நிகழ்வுகள் வடமராட்சி நெல்லண்டையான் வெளியீட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் 12.04.2016 நெல்லியடி தடங்கன்புளியடி நெல்லைமுருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் தலைமையில் நடைபெற்ற ,ந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொண்டார். நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், மற்றும் விழா அமைப்பாளர் சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர். பண்டிதர் பொன். சுகந்தன் வரவேற்புரையையும் ஆசிரியர் வேல். நந்தகுமார் தொடக்கவுரையையும் ஆற்றினர்.வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார், வடமாகாணசபை உறுப்பினர் வே. சிவயோகன், புதிய உயர்கல்லூரி ,இயக்குநர் அருள்நங்கை சண்முகநாதன், முன்னாள் பேராசிரியர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா, கலாநிதி த. கலாமணி, கலாநிதி ஜெயலஷ்மி ,இராசநாயகம், ஓய்வு பெற்ற அதிபர் கி.நடராசா ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர். நிகழ்வில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் எழுதிய கட்டுரைகளையும் வேறு சில கட்டுரைகளையும் உள்ளடக்கிய பவளமணி என்ற பவளவிழா மலரும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய தமிழ் ,இலக்கியப் பாரம்பரியத்தில் பெண் என்ற நூலும் பிரதம விருந்தினரால் வெளியிட்டு வைக்கப்பட்டன,இதன் முதற்பிரதிகளை அதிபர் பொ.அரவிந்தன், தொழிலதிபர் ந.சற்குணராஜா ஆகியோர் பெற்றுக் கொண்டனர். நூல்களுக்கான வெளியீட்டுரையை பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன் ஆற்றினார். பவளமணி நூலின் மதிப்புரையை அதிபர் ஆ.சிவநாதனும் தமிழ் ,இலக்கியப் பாரம்பரியத்தில் பெண் என்ற நூலுக்கான மதிப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதிமுதல்வர் ச.லலீசனும் ஆற்றினர். பேராசிரிய, இணையருக்கான பவளவிழா மற்றும் பொன்விழா ஆகிய நிகழ்வுகள் கடந்த 14.10.2015அன்று நல்லூரில் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டிருந்தது என்பதுவும் கனடா, சுவிஸ், ஜேர்மன் ஆகிய புலம்பெயர் நாடுகளிலும் அவர்களது மாணவர்களால் ,இவ்விழாக்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதுவும் குறிப்பிடத்தக்கன.



Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**
ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளளோம்
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# தன்னைச் சுற்றிய மனிதர்களோடு கொண்டாடினால்! மே தினம், மேலான தினமாய் மாறும்!

சேவியர்



**உழைப்பாளர் தினம்**

உலகம் நமது உழைப்பில் உருவாகவில்லை, ஆனால் நமது உழைப்பு இல்லாமல் உலகில் வாழ்க்கை இல்லை. உழைக்காதவன் உண்ணலாகாது எனும் வார்த்தை மனுக்குலத்தில் உழைப்பின் தேவையை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

உழைப்பாளர் தினம் தோன்றிய வரலாறும், அடிமைப்பட்டுக் கிடந்த மக்களின் விடுதலை கீதமும் தாம் உழைப்பாளர் தினத்தில் பேசப்படுகின்றன. உலகின் கடைகோடியில் அடிமைத்தனத்தில் உழலும் உழைப்பாளியின் துயரம் நமக்கு அன்றைய தினம் பேசு பொருளாகிறது.

ஆப்பிரிக்க நாட்டின் வறுமைப் பகுதிகளும், சோமாலியாவின் துயரங்களும், ஒடுக்கப்படும் உழைப்பாளரின் துயரங்களும் நமக்கு எளிதாகப் பேச முடிகின்றவையாய் இருக்கின்றன. உணர்ச்சி பொங்க பேசிவிட்டு சற்று நேரத்துக்குப் பின் தொலைக்காட்சியில் ஒரு அதிரடித் திரைப்படம் பார்ப்பதுடன் நமது உழைப்பாளர் தின உணர்வுகள் மங்கிப் போய்விடுகின்றன.உழைப்பாளர் தினம் என்பது நமது வாழ்க்கையில் எப்படி இருக்க வேண்டும் ?

1. நமது வீட்டில் வேலைசெய்யும் பெண்கள் இருக்கிறார்களா ? அவர்கள் தான் நமது உழைப்பாளர் தினத்தின் மையம். அவர்களுடைய வாழ்க்கையில் என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றனஇ தேவைகள் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள முயல்வோம். அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வோம்.

2. ஓய்வு என்பது நமக்கு மட்டுமானது. நமது வீட்டில் வேலைசெய்யும் நபர்களுக்கானதல்ல எனும் மனநிலையை உதறுவோம். நம்மைப் போல அவர்களும் மனிதர்களே. நம்மை விட அதிகமாய் உடல் உழைப்பைச் சிந்தும் மனிதர்கள் என்பதை உணர்ந்து அவர்களுக்கும் அதிக ஓய்வைக் கொடுப்போம்.

3. உழைப்பாளர்களை மதிப்பது என்பது அவர்களுக்கு பொருளாதார உதவி அளிப்பது மட்டுமல்ல. அவர்களோடு அன்பாகப் பேசுவதும், பழகுவதும், அவர்களை மரியாதையுடன் நடத்துவதும் தான். அந்த உணர்வை எப்போதும் கொண்டிருப்போம்.

4. நமது இல்லங்களில் நமது வாழ்க்கைத் துணையின் பணிகளில் நாம் எவ்வளவு பங்களிப்பு செய்கிறோம் ? அது அவர் பாடு, அது அவள் பாடு என ஒதுங்கியிருக்கிறோமா ? குறைந்த பட்சம் அந்த நபர் செய்யும் சின்னச் சின்ன உழைப்புகளை அங்கீகரித்துப் பாராட்டுவோம்.

5. நமது அலுவலகத்தில் நம்மோடு வேலைசெய்பவர்களோ, நம்மை விடக் குறைவான ஊதியத்துக்கு வேலை செய்பவர்களோ நமது கவனத்துக்கு வருகிறார்களா ? நமது அலுவலகங்களை தூய்மை செய்யும் நபர்களுடைய வாழ்க்கை நம்மை பாதிக்கிறதா ? அவர்களுடைய தேவைகளில் கொஞ்சம் தோள்கொடுக்க முயல்வோம்.

6. ”இது என்னோட வேலை” என நம்மைச் சுற்றி இயங்கும் மக்கள் பலர் உண்டு. உதாரணமாக பால்காரர், பேப்பர் போடும் பையன், காய்கறி கடைகாரர், இப்படி பலர். அவர்கள் யாருக்காவது நாம் ஒரு ஆனந்த ஆச்சரியம் கொடுத்து அந்த புன்னகையை நேசிப்போம்.

7. உழைப்பு என்பது நமது உடல் உழைப்பு மட்டுமல்ல. நமக்காக நட்புடன் நமது கதைகளைக் கேட்டும், நமது இன்ப துன்பங்களைப் பரிமாறியும் நம்மோடு இருக்கும் மனிதர்களுக்கு நாம் ஏதேனும் ஒரு பொழுதை அன்பளிப்பாய் வழங்குவோம்.

8. போட்டி நிறைந்த உலகம் இது. குறைந்த சம்பளத்துக்காக ஆட்களை வேலைக்கு அமர்த்த பிரம்ம பிரயர்த்தனம் செய்கிறோம். அப்படி நமக்காய் வேலை செய்யும் நபர்களுக்கு அவர்களுடைய எதிர்காலம், குழந்தைகளின் கல்வி, உடல்நலம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நல்ல தொகையை அன்பளிப்பாய் கொடுப்போம். அல்லது அவர்கள் கேட்ட ஊதியத்தை விட அதிகமாகக் கொடுத்து மகிழச் செய்வோம்.

9. தேவைகள் இல்லாத மனிதர்கள் இல்லை. அந்த தேவைகளை நிவர்த்தி செய்ய இயலாத மனிதர்களும் இல்லை. இறைவன் பகிர்தலை விரும்புகிறார். ஒருவர் பாத்திரத்தோடு இருக்கையில், இன்னொருவன் பானத்தோடு இருக்கிறான். இட்டு நிரப்புதலே மனிதனின் பணி. பணம் சம்பாதிக்க வேண்டும் என இருக்கின்ற அதே ஆர்வமும், உற்சாகமும் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதிலும் நமக்கு இருக்கட்டும்.

இந்த சின்னச் சின்ன பத்து சிந்தனைகளையும் மனதில் அசைபோடுவோம். சோமாலியாவின் எலும்பு மனிதர்களுக்காய் நம்மால் செய்ய முடிந்தது பிரார்த்தனையும் அனுதாப சிந்தனையும் தான். ஆனால் நம்மைச் சுற்றி உலவும் மனிதர்களுக்கு நாம் எவ்வளவோ செய்ய முடியும். இந்த உழைப்பாளர் தினத்தை அப்படிக் கொண்டாடுவோம்.

உலகிலுள்ள மக்கள் அனைவரும் உழைப்பாளர் தினத்தை தன்னைச் சுற்றிய மனிதர்களோடு கொண்டாட ஆரம்பிக்கும் போது மே தினம், மேலான தினமாய் மாறும்.

**இங்கிலாந்து நாட்டின் எலிசபத் மகாராணியின் 90 வது பிறந்தநாள் 21.04.2016 நாடே கலகலப்பானது!**



மகாரணியின் பிறந்த நாள் பரிசாக அவரது ஓவியம்.
ஓவியம்: வதனி




# சூடு பிடிக்கும் தேர்தலில் ,இவர்கள் சுட்டும் பக்கம் யார் பக்கம்?



சட்டமன்ற தேர்தலில் ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், அஜித்குமார் உள்ளிட்ட முன்னணி கதாநாயகர்கள் ஆதரவு யாருக்கு? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் நிலவுகிறது.
சினிமா தரப்பினரையும் தேர்தல் பரபரப்பு தொற்றிக்கொண்டு இருக்கிறது.

நடிகர்-நடிகைகள் தேர்தல் பிரசாரத்துக்கு தயாராகிறார்கள். ராமராஜன், ஆனந்தராஜ், செந்தில், குண்டுகல்யாணம், மனோபாலா, ஆர்.வி.உதயகுமார், விந்தியா, சி.ஆர்.சரஸ்வதி, உள்ளிட்ட நடிகர்-நடிகைகள் அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகவும், வாகை சந்திரசேகர், இமான் அண்ணாச்சி, வாசு விக்ரம் உள்ளிட்டோர் தி.மு.க.வுக்கு ஆதரவாகவும் பிரசாரத்தில் ஈடுபட உள்ளனர்.

நடிகைகள் குஷ்பு, நக்மா இருவரும் காங்கிரசுக்கு வாக்கு சேகரிக்கிறார்கள். எஸ்.வி.சேகர், விசு, விஜயகுமார், கஸ்தூரிராஜா, பா.ஜனதாவுக்கு பிரசாரம் செய்கிறார்கள்.
ரசிகர்கள் பலம் உள்ள ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், அஜித்குமார் போன்ற முன்னணி கதாநாயகர்கள் ஆதரவு எந்த கட்சிக்கு கிடைக்கும்? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

ரஜினிகாந்த் ஆதரவை பெறுவதற்கு பா.ஜனதா கட்சியினர் தீவிரமாக உள்ளனர். அவரை நேரில் சந்தித்து ஆதரவு கேட்போம் என்று அந்த கட்சியின் முன்னணி தலைவர்கள் பேசி வருகின்றனர்.

ரஜினிகாந்த் தற்போது 2.0 படப்பிடிப்புக்காக டெல்லியில் முகாமிட்டு உள்ளார். பத்மவிபூஷன் விருது பெறுவதையொட்டி பிரதமர் நரேந்திரமோடி மற்றும் அத்வானியை அவர் சந்திக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.
அப்போது ரஜினியிடம் நரேந்திரமோடி பா.ஜனதாவுக்கு ஆதரவு கேட்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ரஜினிகாந்த் வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தால் அந்த கட்சிக்கு வேலை செய்ய ரசிகர்கள் தயாராக இருக்கிறார்கள்.

ரஜினியின் ஆதரவு கடந்த காலங்களில் பல்வேறு கட்சிகளுக்கு கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

1996 தேர்தலில் தி.மு.க, த.மா.கா. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தார். அந்த அணி அமோக வெற்றி பெற்றது. 1998 பாராளுமன்ற இடைதேர்தலிலும் இதே கூட்டணியை ஆதரித்தார். 1999 பாராளுமன்ற தேர்தலில் யாரையும் ஆதரிக்காமல் நடுநிலை வகித்தார். 2004 பாராளுமன்ற தேர்தலில் தனது ரசிகர்களுக்கும் பா.ம.க.வினருக்கும் மோதல் ஏற்பட்டதால் அ.தி.மு.க.வை ஆதரித்தார். 2006 மற்றும் 2011 சட்டமன்ற தேர்தல்களில் எந்த கட்சியையும் ஆதரிக்கவில்லை.

தற்போது எல்லா கட்சி தலைவர்களுடனும் நட்புறவோடு இருக்கிறார். கடந்த பாராளுமன்ற தேர்தலில் நரேந்திரமோடி சென்னை வந்து ரஜினியை சந்தித்தபோது கூட வெளிப்படையாக அந்த கட்சியை ஆதரிக்கவில்லை. எனவே இந்த தேர்தலில் அவரது ஆதரவு கிடைக்குமா? என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது.
தற்போது சினிமாவில்தான் ரஜினியின் முழு கவனமும் இருக்கிறது. ஒரே நேரத்தில் கபாலி, 2.0 ஆகிய இரண்டு படங்களில் தீவிரமாக நடித்துக்கொண்டு இருக்கிறார்.

கமல்ஹாசன் அரசியலுக்கு வரமாட்டேன் என்றும் தேர்தலில் வாக்குபோடுவது மட்டுமே எனது அரசியல் பணியாக இருக்கும் என்றும் கூறி விட்டார்.
எனவே ரசிகர்கள் அந்தந்த தொகுதிகளில் பிடித்த வேட்பாளர்களுக்கு வாக்களிக்க முடிவு செய்துள்ளனர்.

விஜய், தனது ரசிகர் மன்றத்தை மக்கள் இயக்கமாக மாற்றி சமூக சேவை பணிகளில் ஈடுபடுகிறார். அவர் அரசியலில் ஈடுபடலாம் என்ற பரபரப்பு நிலவி வருகிறது.
கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது நரேந்திரமோடியை விஜய் சந்தித்தார். இதன்மூலம் பா.ஜனதாவுக்கு மறைமுகமாக விஜய் ஆதரவு கிடைத்ததாக கூறப்பட்டது. இந்த தேர்தலில் எந்த கட்சிக்கும் வெளிப்படையான ஆதரவை தெரிவிக்க கூடாது என்று ரசிகர்களிடம் அறிவுறுத்தி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

எனவே இவரது ரசிகர்களின் ஆதரவை பெறுவதற்கு அந்தந்த தொகுதிகளில் உள்ள அரசியல் கட்சியினர் முயற்சிக்கின்றனர். அஜித்குமார் இது வரை எந்த அரசியல் கட்சிக்கும் ஆதரவு தெரிவித்தது இல்லை. 2011 தேர்தலில் இவரது ரசிகர்கள் அஜித் படத்துடன் சென்று அரசியல் கட்சியினருக்கு வாக்கு கேட்டனர்.

இதைதொடர்ந்து ரசிகர் மன்றத்தையே கலைத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அஜித் ரசிகர்கள் ஆதரவை பெறுவதற்கும் ஒவ்வொரு தொகுதியிலும் அரசியல் கட்சியினர் தீவிரம் காட்டுகின்றனர்.





# இனி "ஈ" தம் அடிப்போம்!

## ஈ சிகரெட் பாதுகாப்பானதா?

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

ஈ மெயில், ஈ பாங்கிங், ஈ கொமேர்ஸ், ஈ மெடிசின் இதெல்லாம் தாண்டி இப்ப ஈ சிகரெட்டா. பெயர்தான் ஈ சிகரெட்டானாலும் இணையத்தில் புகைப்பதல்ல என்பது தெரிந்ததுதானே.

இது இப்பொழுது மேலை நாட்டு இளைஞர்களைக் கவர்ந்து இழுக்கிறது. எலக்ரோனிக் சிகரட் என்பது சிகரட்டை போன்ற உருவ அமைப்பை கொண்ட ஒரு இலக்ரோனிக் கருவி.

மூக்கில் கை வைக்காதீர்கள்! வாயில் வைத்து ஊதித் தள்ளுகிறார்கள். பிரித்தானியாவில் மட்டும் 2012ல் 700,000 ற்கு மேற்பட்டவர்கள் ஈ சிகரெட் உபயோகித்தார்களாம். இவ்வருட இறுதிக்குள் (1000,000) பத்து இலட்சத்தைத் தாண்டிவிடும் என மதிப்பிடுகிறார்கள்.

"சைட் அடிப்போம் தம் அடிப்போம்
தண்ணியைத்தான் கலந்தடிப்போம்.."


எனப் பாடித் திரியும் எம் நாட்டு இளைஞர்களின் கண்களில் இது இன்னமும் பட்டதாகத் தெரியவில்லை.

எதற்காக ஈ சிகரெட்டை நாடுகிறார்கள்? வழமையான சிகரெட்டை எதற்காக நாடுகிறார்களோ அதே காரணத்திற்காகத்தான். ஆம்! "கிக் கிடைக்க வேண்டும். அதே நேரம் பாதிப்புகள் இருக்கக் கூடாது என நினைப்பவர்கள் நாடுகிறார்கள். "புகைப்பதின் பக்க விளைவுகள் இருக்காது" என்கிறார்கள் உற்பத்தியாளர்கள். இது உண்மையா? பின்னாடி பார்ப்போம்.

சிகரெட் புகைக்கும்போது புகையில் நிகடின் என்ற இரசாயனம் வருகிறது. இதுதான் புகைப்பவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது. போதையைக் கொடுக்கிறது. மீண்டும் மீண்டும் புகைக்கத் தூண்டுகிறது. ஆனால் அதே நேரம் அந்தப் புகையில் கரியும் வேறு பல இரசாயனங்களும் உள்ளன. இவைதான் பல்வேறு நோய்களுக்குக் காரணமாகின்றன.

புகைப்பதின் மிக ஆபத்தான பின்விளைவு புற்று நோய்தான். புகைப்பதால் புற்றுநோய் சுவாசப்பையில் மட்டுமே வரும் என்றில்லை உதட்டில் வாயில், இரைப்பையில், மலக் குடலில் மற்றும் சிறுநீர்ப்பையிலும் ஏற்படும் என்பது நன்கு அறியப்பட்ட விடயமாகும்.

புற்றுநோய்க்கு அப்பால் இருதய நோய்கள், மாரடைப்பு, பக்கவாதம் ஆகிய ஏற்படுவதுடன் ஆஸ்த்மா தூண்டப்படுகிறது. அத்துடன் நாட்பட்ட படிப்படியாக




முற்றிச் சென்று சாதாரணமாக உட்கார்ந்திருக்கும்போதே சுவாசிக்கத் திணறும் நோயும் Chronic Obstructive pulmonary Disease- COPD) ஏற்படும். முற்றாகக் குணப்படுத்த முடியாத இது புகைப்பவர்களின் மரணத்திற்கான பயணத்தை விரைவுபடுத்தும்.

சி.கருணாகரசு அவர்களின் கவிதைகளில் ஒன்று புகைப்பவர்களின் வாழ்வு சுருங்குவதை இவ்வாறு அழகாகச் சொல்கிறது.

விரலிடுக்கில் ...
அது கசியும்போது
காலத்தின் இடுக்கில்
நீ ...
நழுவிக்கொண்டிருக்கிறாய் !
ஈ சிகரட் எப்படியானது



ஈ சிகரட் என்பது
அண்மைய கண்டு பிடிப்பு
என்று சொல்ல முடியாது.

இதற்கான அடித்தளம்
1963லேயே Herbert A. Gilbert
என்பவரால் இடப்பட்டது. அது சிகரட் போன்ற வடிவம் கொண்டது அல்ல. புகையற்ற சிகரட் என்ற அது நிகட்டின் திரவத்தை வெப்பம் ஊட்டி அதன் சுவையை வாய்வுடன் கலந்து அளிப்பதாகும். தனது கண்டுபிடிப்பிற்கான காப்புரிமையை எவருக்கும் கொடுக்காததால் அது வழக்கொழிந்து போயிற்று.

நவீன ஈ சிகரெட்டின் தந்தை ஒரு சீனர் ஆகும். Hon Lik என்ற இவர் ஒரு மருந்தாளர் ஆகும்.

புரபளீன் கிளைக்கோல் கலந்த நிகரின் திரவத்தை ஒரு வகை அல்ரா சவுண்ட் முறை மூலம் வாய்வு வடிவத்திக்கு மாற்றும் பொறிமுறையை 2000 ஆண்டளவில் கண்டு பிடித்தார்.

இதன் திருத்திய வடிவம் 2004ல் Golden Dragon Holdings கொம்பனியால் ருயன் (Ruyan) என்ற பெயரில் சந்தைக்கு விடப்பட்டது. "புகைப்பதை ஒத்தது" என்ற பொருள் படும் இது 2005ல் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. சிகரட் புகைப்பதை கைவிடுவதற்கான உதவிக் கருவியாக இது வர்த்தகமானது.

அதே நேரம் சிகரட் புகைக்கு மாற்றீடாகவும் இதைப் பயன்படுத்தினார்கள் அவற்றின் அமைப்புகளில் பல வித வேறுபாடுகள் இருந்தபோதும் அடிப்படையில் செயன் முறை ஒன்று. அதில் மூன்று பாகங்கள் இருக்கும். நுனியில் எரிவது போன்ற தோற்றத்தைக் கொடுக்கும் LED லைட் இருக்கும்.அடுத்து பற்றறி, இறுதிப் பகுதி வாயில் வைக்கும் யவழஅணைநச. இது உள்ளே உள்ள திரவத்தை நுண்திவாலைகளாக்கி புகைபோல வாயில் கிடைக்கச் செய்யும்.

தொடர்ச்சி 10ம் பக்கம்...



T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

09 பக்கத் தொடர்ச்சி

# இனி "ஈ" தம் அடிப்போம்!




ஈ சிகரட் புகைப்பதை வப்பிங் (Vaping) என்கிறார்கள். இங்கு உட்கொள்ளப்படுவது ஆவி (vapour) அதாவது நிகடின் அடங்கிய ஆவியாகும். அதனால்தான் அந்தப் பெயர் வந்தது. நிகடின் ஆவி பிடிக்கும் ஈ புகைத்தலால் ஆசை அடங்குமா? இல்லை ஆவி பிரியுமா உடலிலிருந்து?

**ஈ புகைத்தல் ஆபத்தற்றதா?**

"பக்க விளைவுகள் இன்றிப் புகையுங்கள்". "பாதுகாப்பான புகை", "சிகரட் புகைப்பதை நிறுத்துவதற்கு இது உதவும்" போன்ற நம்பிக்கைகளை இது இளைஞர்களிடையே விதைத்துள்ளது. இருந்தபோதும் ஈ புகைத்தலின் நன்மை தீமை பற்றிய விஞ்ஞான பூர்வ ஆய்வுகள் பெருமளவில் செய்யப்படவில்லை. கிடைக்கும் ஒரு சில நம்பிக்கை தருவதாக இல்லை.

சிகரட் புகையிலுள்ள புற்று நோயைக் கொண்டு வரும் இரசாயனம் nitrosamines (TSNAs) ஆகும். ஈ ஸ்மோகிங் புகையிலும் இந்த இரசாயனம் இருக்கவே செய்கிறது. ஆனால் குறைந்த அளவில்தான் இருக்கிறது. "புகைத்தலை கைவிடுவதற்கான சிகிச்சையாக உபயோகிக்கும் நிக்கடின் ஒட்டிகளிலும் (nicotine patch) அத்தகைய அளவு இருக்கிறதுதானே" என மெத்தப்படித்த ஒருவர் ஈ சிகரட்டிற்கு கைலாகு கொடுக்க முன்வந்தார்.

ஆனால் உலக சுகாதார ஸ்தாபனத்தால் நஞ்சு என அறிவிக்கபட்ட னநைவாலடநநெ படலஉழட எனும் இராசயனம் ஈ சிகரட்டில் இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது. இது சிறுநீரக செயலிழப்பு, நரம்புகளின் பாதிப்பு, சுவாச செயலிழப்பு போன்ற ஆபத்தான பாதிப்புகளைக் கொண்டு வரும்.

ருளைநசளவைல முக ஊயடகைழசயைை வைச் சார்ந்த ஆய்வாளர்கள் வேறு பல நச்சுப் பொருட்களும் இதில் கலந்திருப்பதாக இவ்வருடம் மார்ச் மாதம் வெளியிட்ட அறிக்கையில் கூறுகிறார்கள். வெள்ளி, இரும்பு, அலுமினியம், சிலிக்கேட், ரின், நிக்கல், குரோமியம் போன்றவற்றை அவர்கள் ஈ சிகரட்டின் புகையில் இனம் கண்டுள்ளனர். இவற்றின் அளவானது சாதாரண சிகரட்டின் புகையில் உள்ளதை விட அதிகமான அளவில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இவை சுவாசிப்பதில் சிரமத்தையும், சுவாச அடைப்பு போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்த வல்லன.
எனவே பாதுகாப்பானது என்று சொல்ல முடியாதுதானே. சுவாசப் பிரச்சனை பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லலாம்.

**சுவாசப் பிரச்சனை**

ஈ சிகரட் பற்றிய ஆய்வுகள் குறைவு என்றோம். இருந்தபோதும் அண்மையில் கிறீஸ் நாட்டில் செய்யப்பட்டது சிறியதும் ஆரம்ப கட்டத்திலானதும் என்ற போதும் முக்கியமானது. ஒருபோதும் புகைக்காதவர்கள், புகைப்பவர்கள் என்றபோதும் சுவாச நோய்கள் இல்லாதவர்கள், சுவாச நோய்கள் உள்ள புகை பிடிப்பாளர்கள் என பல வகையினரையும் உட்படுத்தி இருக்கிறது.
ஒரு ஈ சிகரட்டை 10 நிமிடங்கள் புகைக்கக் கொடுத்த பின் அவர்களது சுவாசப் பையின் செயற்திறனைப் பரிசோதித்தனர்.

Spirometry, Static lung Volume, single breath nitrogen test, airway conductance ஆகிய பரிசோதனைகள் செய்யப்பட்டன. அதன் பிரகாரம் அவர்களின் சுவாசப் பாதையினது செயற்jpwdhdJ (airway resistance) 180% - 220% விகிதம் பாதிக்கப்பட்டிருந்தது. புகைக்காதவர்கள், புகைப்பவர் களாயின போதும் சுவாச நோய்கள் இல்லாதவர்கள் ஆகிய இருதரப்பினரிடம் இவ்வாறான மாற்றம் ஏற்பட்டது. புகைத்ததனால் ஏற்கனவே சுவாச நோய் உள்ளவர்களில் இம் மாற்றம் காணப்படவில்லை. ஆனால் அது எதிர்பார்க்கக் கூடியதே எனச் சொல்லத் தோன்றுகிறது.
ஈ சிகரட்டினால் சுவாசப் பாதிப்புகள் ஏற்படும் என்பதற்கு இவ் ஆய்வு சான்றாகும். ஆயினும் நீண்ட கால உபயோகத்தில் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்பதுபற்றி அறிய புதிய ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

**புகைத்தலை நிறுத்த உதவுமா**

அண்மையில்யுனனைஉவழைெ என்ற சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரையானது சர்ச்சைக்குரியது. சுய விருப்பத்தின் பேரில் இணையம் மூலம் பதிலளித்த 1347 பேரைக் கொண்ட ஆய்வு இதுவாகும். ஈ சிகரட் புகைத்த இவர்களில் 91 சதவிகிதமானவர்கள், புகைப்பதற்கான ஏக்கம் கணிசமான அளவு தங்களுக்கு குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். இவர்களில் பலர் தங்கள் கடைசி சிகரட்டை புகைத்து பல மாதங்கள் ஆகிவிட்டதாகவும் சொன்னார்கள்.

**இது நம்பிக்கை தரக் கூடிய முடிவா?**

நிச்சயமாக இல்லை. அவர்கள் கைவிட்டதும் புகைப்பதற்கான ஏக்கம் குறைந்ததும் வழமையான சிகரட்டிற்கே ஆகும். ஆனால் ஈ சிகரட் புகைக்கிறார்கள். அதாவது புகைத்தலிலிருந்து முற்றாக விடுபடவில்லை. புகைக்கிறார்கள். சிகரட்டுக்குப் பதிலாக ஈ சிகரட்டை! என்னென்ன பாதகங்கள் வரும் என்பது இன்னமும் தெளிவில்லாததைப் புகைக்கிறார்கள்.
எனவே புகைத்தலைக் கைவிடுவதற்கான மார்க்கம் ஈ புகைத்தல் என எந்த மருத்துவரும் சிபார்சு செய்ய முடியாத நிலையே இன்னமும் உள்ளது.
இறுதியாக என்ன சொல்லலாம்?

நஞ்சென்று தெரிந்தும் ஊதித் தள்ளினீர்கள்
என்னென்று இன்னும் புரியாததை
புகைத்துத் தள்ளுகிறீர்
நன்று !
இன்னொரு வாழ்வு கிடைக்காது
கவனம்
அரிதெனக் கிடைத்த வாழ்வை
சாம்பலாக்காதீர்.
என யாராவது புதுக் கவிதை எழுதி "இளிச்ச வாயன்களுக்குத்தான் லாயக்கு "ஈ சிகரெட்" என நகைத்தால் அதில் தவறு இல்லை.


ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிடம்
உலகப் புகழ்பெற்ற இந்திய ஜோதிடர்
ஆதிவாசி பண்டித் கே.சுவாமி





உறவுச்சிக்கல்கள் -
தவறாகப் புரிந்துகொள்ளல்
- நிதிச் சிக்கல்கள்
மன அழுத்தம் - காதல்பிரச்சினைகள்
- வேலை தேடுதல்
- குடும்பவாதங்கள்
குழந்தைகள் இல்லாத தம்பதிகள்
- வாகனப் பொருத்தம்

தலை முறை தலைமுறையாக ஜோதிடக் கலையை
பயின்றுவரும் ஜோதிடவித்துவான்
பேசும் மொழி தமிழ் கிந்தி மற்றும் ஆங்கிலம்.

Tel: 015 21 46 02 865 / 0151 63 50 9059

கிழமை 7 நாட்களும் 09.00 முதல்
20.00 மணிவரை வரலாம்.

Make an Appointment
Prapa Super Market
Hindenburg Straß 212
41061 Mönchengladbach






Orientalische
Textilien & Schmuck

எமது ஸ்தாபனத்தின் 26 வது
ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும்
தொடர் மலிவு விற்பனை!

Tel: 0231 16 23 77
உரிமையாளர் எஸ்.ஜெகதீஸ்
Königswall-16 (Am HBF)
44137 Dortmund





யோகன், யோகி:
02823/6838
Handy:
152 138 22 350

சிவகாமி மணவறைச் சோடினை

# சொர்க்கத்தில்

குரு. அரவிந்தன் - கனடா

'சூரியா, அந்தப் பெண்ணைப் பார்த்தியா?'

தாய் சாரதா சொன்னதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அலட்சியமாய் தெருவில் பார்வையைச் செலுத்தினான் சூரியா. அப்பாவிற்கு கோயில், குளங்களுக்குப் போவதில் கொஞ்சமும் நம்பிக்கையில்லை. அதனாலே என்ன தான் தலை போகிற காரியமாய் இருந்தாலும் வெள்ளிக் கிழமைகளில் தாயைக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதில் சூரியா தவறுவதில்லை. அதைத் தன்னுடைய கடமையாகவே கருதிச் செய்தான். இன்றும் அப்படித்தான் கோயிலுக்குப் போய்விட்டு ஸ்கூட்டரில் இருவரும் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.
அம்மாவின் தொல்லை கொஞ்ச நாளாய் தாங்க முடியாமல் போய்விட்டது. தங்கை திருமணம் செய்து புகுந்த வீட்டிற்குப் போய்விட்டதால் இவன் தனித்துப்போய் அம்மாவிடம் வசமாய் மாட்டிக் கொண்டான். எப்படியாவது காலாகாலத்திற்கு மகனுக்கும் திருமணம் செய்து பார்க்கவேண்டும் என்ற தீராத ஆசையில் தினமும் மகனை நச்சரிக்கத் தொடங்கினாள் சாரதா. எங்கேயாவது அழகான பெண்களைக் கண்டால் மனம் மாறியாவது சம்மதம் சொல்லுவானோ என்ற அற்ப ஆசை அவளுக்கு. அதனாலே எங்கேயாவது ஷொப்பிங் போனால், கோயிலுக்குப் போனால் "அந்தப் பெண்ணைப் பாரேண்டா தேவதை மாதிரி என்ன அழகு, இந்தப் பெண்ணைப் பாரேண்டா என்ன மாதிரி லட்சுமி கடாட்சமாய் இருக்கிறா" என்று தினமும் இதே தொல்லையாய்ப் போய்விட்டது. அதனாலே தான் தாயார் பின்னாலே இருந்து காதுக்குள் கிசுகிசுத்தபோது திரும்பிப் பார்க்காமல் அலட்சியம் செய்தான்.

'ஏன்டா, யார் யாருடைய பிரச்சனை எல்லாம் வலியப்போய் உன்னுடைய தலையிலே போட்டுக் கொண்டு செய்வியே, இதை மட்டும் ஏன் கண்டு கொள்ள மாட்டேனெங்குறாய்? பாவமடா அந்தப் பெண்ணு, ஏதோ ஆபத்திலே மாட்டியிருக்கிறா போலத் தெரியுது! கொஞ்சம் உதவி பண்ணேண்டா?'
'யாரை அம்மா சொல்லுறாய்?' பச்சை விளக்கு எப்போ எரியும் என்ற அவசரத்தில் அவனிருந்தான்.
'இந்தப் பக்கம் கொஞ்சம் திரும்பிப் பாரேன்'
வேண்டா வெறுப்பாய்த் திரும்பிப் பார்த்தான்.
யார் அந்த தேவதை?
ஒருகணம் அதிர்ந்து போனான். இவளா?

ரம்யா! அந்த ஊரிலே உள்ள செல்வந்தர் ஒருவரின் மகள். இவளது அண்ணன் ரமேஷ் இவனோடு சட்டக் கல்லூரியில் ஒன்றாகப் படித்த நண்பன். பழகுவதற்கு இனியவன். ஆனால் இவளோ பணத்திமிர் பிடித்தவள். அதைவிட தான் பெரிய உலகஅழகி என்ற எண்ணம் வேறு. அண்ணனுடன் அவர்கள் வீட்டிற்குப் போனபோதெல்லாம் இவனை அவள் கண்டு கொள்ளாமல் அலட்சியம் செய்தது இவன் மனதில் அந்த நாட்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது.



மேலே காரின்
ஹூட்கரியரில் யாரோ
ஒரு இளைஞனை
இறுக்கமாகக் கயிற்றால்
கட்டிப் போட்டிருந்தார்கள்.

வெறித்த பார்வையோடு
சாரதியின் ஆசனத்தில்
ஆடாமல் அசையாமல்
அவள் உட்கார்ந்திருந்தாள்.

யாரோ பின்னால் இருந்து
துப்பாக்கி முனையில்
அவளைக் கடத்திக்
கொண்டு போவது
போல மிரண்டுபோய்
இருந்தாள்.

அவளது முகத்தில்
பயக்களை அப்படியே
தெரிந்தது.

நிலமையின் பயங்கரத்தை
சூரியா உடனே கிரகித்துக்
கொண்டான்.

"இவளுக்கு இதுவும்
வேண்டும் இன்னமும் வேண்டும்"
என்று அவனது பழிவாங்கும்
மனசு ஒருகணம் நினைத்தது.

ஆனால் அவனது சட்ட அறிவு
அவனைச் சிந்திக்க வைத்தது.

அவள் மீது அவனுக்கு
தனிப்பட்ட வெறுப்பு இருந்தலும்
ஆபத்திற்கு உதவவேண்டும் என்ற நல்லமனம் அவனை விரைவாகச் செயற்பட வைத்தது.
சட்டென்று தனது ஸ்கூட்டரை அவளது காருக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்திவிட்டு இறங்கி காரைச் சுற்றி வந்து நோட்டம் விட்டான். வேறு யாராவது துப்பாக்கியோடு சீட்டுக்குப் பின்னால் மறைந்து இருக்கிறார்களோ என்று கண்ணாடிக் குள்ளால் பார்வையைச் செலுத்தினான். அன்னியர் யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. மறுபக்கம் வந்து இளைஞனின் முகத்தைப் பார்த்ததும் திகைத்தான். அது வேறுயாருமல்ல அவளது அண்ணன் தான், அதாவது இவனோடு சட்டக் கல்லூரியில் படித்த நண்பன் ரமேஷ் தான். இவர்களுக்கு என்ன நடந்திருக்கும்?

அதைப்பற்றி சிந்திக்க இப்போது நேரமில்லை! அவள் ஆடாமல் அசையாமல் பயத்தோடு சீட்டில் உட்கார்ந்திருப்பதில் இருந்து அவளுக்கு ஏதோ ஆபத்துக் காத்திருப்பது தெரிந்தது. அருகே சென்று பார்த்தபோது அவள் முகத்தில் பொட்டுப் பொட்டாய் வியர்வை துளிர்த்திருந்தது. இதயம் வேகமாகத் துடிக்க அவளது சின்னமார்பு மேலும் கீழும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. குனிந்து உள்ளே பார்வையைச் செலுத்தியவன் மீண்டும் அதிர்ந்தான். இடுப்பிலே என்ன அது கறுப்பாக?
அவளது இடுப்பிலே சீட்டோடு சேர்ந்தபடி பெல்ட் ஒன்று கட்டப் பட்டிருந்தது. அவளது இதயத் துடிப்பையும் மிஞ்சி டிக், டிக் சத்தம் இவன் காதில் விழுந்தது. ஒவ்வொரு டிக், டிக் சத்தமும் மரணதேவனிடம் அவளை இழுத்துச் செல்வது இவனுக்குப் புரிந்தது. குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டு, டைம் பாம்! இது யாரோ விஷமிகளோ, தேசவிரோதிகளோ செய்த வேலையாய் இருக்கலாம். ஒரு இளைஞனை அப்படிக் கட்டிப்போட்டு ஒரு அழகான பெண் காரை ஓட்டிச் சென்றால் நகரத்து மக்கள் காரைச் சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பார்கள், இன்னும் சொற்ப நேரத்தில் அவன் கண்முன்னாலேயே இந்த அழகிய மலர் இதழ் இதழாய்ச் சிதறுண்டுபோமோ?

தொடர்ச்சி 12ம் பக்கம்










11 ம் பக்கத் தொடர்ச்சி... **சொர்க்கத்தில்**

அந்தநேரம் பாம் வெடித்தால் அதிக உயிர்ச்சேதம் ஏற்படும் என்பது அவர்களின் எண்ணக் கணிப்பாக இருக்கலாம். அந்த விரோதிகள் விரித்த வலையில் தற்செயலாக அந்தப் பாதையால் வந்த இந்த அப்பாவிகள் சிக்கியிருக்கிறார்கள்.
இன்னும் சொற்ப நேரத்தில் அவன் கண்முன்னாலேயே இந்த அழகிய மலர் இதழ் இதழாய்ச் சிதறுண்டுபோமோ?
நினைக்கவே அவனது உடம்பு நடுங்கியது.
'நோ!' என்று வாய்விட்டுக் கத்தியவன், அவசரமாகச் செயற்பட்டான். தனது செலூலபோனில் குண்டு அகற்றும் அவசரபிரிவிற்கு விபரத்தை தெரிவித்தான். தனது ஸ்கூட்டரின் அவசர விளக்கைப் போட்டு ஏனைய பயணிகளை அந்தக் காருக்கு அருகே வராமல் எச்சரிக்கை செய்துவிட்டு தாயாரிடம் விரைந்து வந்தான்.
'அம்மா, ஒரு ஆட்டோ எடுத்துக் கொண்டு நீங்க வீட்டிற்குப் போங்க, இந்தாங்க பணம், நான் அப்புறம் வர்றேன்.'
தாயாரின் கைகளில் பணத்தைத் திணித்துவிட்டு பதிலுக்குக் கூடக் காத்திராமல் ரம்யாவிற்கு அருகே சென்று சாரதிபக்கக் கதவில் ஏதாவது வயர் பொருத்தப் பட்டிருக்கிறதா என்பதை அவதானித்தான். இல்லை என்று தெரிந்ததும் கதவின் கைப்பிடியில் கையை வைத்து மெதுவாக இழுத்தான். கதவு மெல்லத் திறந்து கொண்டது.
பக்கவாட்டில் அவளை இப்போ முழுமையாக அவனால் பார்க்க முடிந்தது.
'நானிருக்கேன், பயப்படாதே!' என்று மெதுவாக குனிந்து அவள் காதுக்குள் ஆறுதல் வார்த்தைகள் சொன்னான்.
மெல்லத் தலைசாய்த்து அவளது முழங்காலுக்கருகே உடம்பை வளைத்து அவளது இடுப்புப் பட்டியை ஆராய்ந்தபோது அவளது சூடானமூச்சுக் காற்று இவனது கன்னத்தில் பட்டுத் தெறித்தது. அலங்கோலமாய் மேலே ஏறியிருந்த அவளது ஸ்கேட்டை இழுத்து அவளது பளிங்கு போன்ற தொடைகளை மற்றவர்களின் பார்வையில் இருந்து மறைத்து விட்டபோது அவளின் உடம்பு சிலிர்ததை இவனால் உணரமுடிந்தது.
'டிக்.. டிக்.. டிக்..!'
நேரம் வேகமாய் ஓடிக்கொண்டிருந்தது. டைம்பாம் மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தான். மூன்று நிமிடங்கள் தான் மிஞ்சியிருந்தன. வாழ்வா, சாவா?
மூன்று நிமிடங்கள் தான் பாக்கி என்று தெரிந்ததும் அவளது உடம்பு மெல்ல மெல்ல உதறலெடுத்தது. காலமெல்லாம் உன்காலடியில் கிடப்பேன், எப்படியாவது என்னைக் காப்பாற்றிவிடு, பிளீஸ்..! என்பது போல அவளது விழிகள் அவனிடம் கெஞ்சின. எதையோ எதிர்பார்த்து உயிர்ப் பிச்சை கேட்பது போல அவளது மெல்லிய உதடுகள் துடித்தன. இப்போ அவள் இருக்கும் அந்த நிலையைப் பார்த்தபோது அன்று அவனை அலட்சியம் செய்த பெண் இவள்தானா என்பதை அவனால் நம்பமுடியாதிருந்தது. பெண் என்றால் பேயே இரங்கும் போது இவன் எம்மாத்திரம்?
எப்படியாவது அவளையும், நண்பனையும் காப்பாற்றிவிட வேண்டும் என்று உடம்பெல்லாம் துருதுருத்தது. குண்டைச் செயலிழக்க வைக்கும் பிரிவினருக்காக இனியும் காத்திருக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டான். விரைவாகக் காரியத்தில் இறங்கினான்.
இன்னும் சில வினாடிகளில் எப்படியோ வெடித்துச் சிதறப்போகிறோம் என்று நினைத்த போது அவனது தியாகம் நாளைய பத்திரிகையில் சிலசமயம் தலைப்புச் செய்தியாக வரலாம் என்ற நினைப்பும் கூடவே வந்தது.
எந்த வயரின் தொடர்பைத் துண்டிப்பது? கறுப்பா, சிவப்பா? எப்போதோ ஒரு ஆங்கிலப் படத்தில் இப்படியான குண்டைச் செயலிழக்க வைப்பது எப்படி என்பதைப் பார்த்த ஞாபகம் திடீரென வந்தது. ஆனால் எந்த நிற வயரைத் துண்டித்தான் என்பது சட்டென்று ஞாபகத்திற்கு வர மறுத்தது.
கறுப்பா? சிவப்பா? மூளைக்கு வேலை கொடுத்துப் பார்த்தான்.
பதட்டத்தில் "ஏதோ ஒன்று!" என்ற பதில் தான் வந்தது. நிறத்தைச் சொல்லத் தயங்கியது.
இனியும் காத்திருப்பதில் அர்த்தமில்லை. வருவது வரட்டும் என்று கண்ணை மூடிக்கொண்டு கடவுளைப் பிரார்த்தித்தபடி கையில் அகப்பட்ட ஒரு வயரைப் பிடித்தான். என்ன நிறம் என்று கூடப் பார்க்கவில்லை.துண்டிக்கலாமா? ஒரு கணம் தயங்கினான்.
"டிக்.. டிக்.. டிக்..!"
இன்னும் பத்து வினாடிகள்! இனியும் தாமதிக்க முடியாத நிலைமை. எப்படியோ வெடித்துச் சிதறப்போகிறது. அதற்கிடையில் இரண்டில் ஒன்று பார்த்து விடுவோம்!'கெட்லொஸ்!' என்று ஆவேசமாகக் கத்தியபடி அந்த வயரைப் பிடித்து இழுத்தான்.ஒரு வினாடி எல்லா இயக்கமும் நின்றுபோக, மறுகணம் "படீர்" என்ற சத்தம் கேட்டது, அவன் சுதாகரிக்குமுன் அவன் மார்பில் அவள் பொத்தென்று விழுந்தாள். நினைவிழந்த அவளை மெதுவாகத் தாங்கி அணைத்து அங்கே தயாராக வந்து நின்ற ஆம்புலன்ஸில் வைத்தியசாலைக்கு அனுப்பி விட்டான் சூரியா.
அந்தக் கடமை முடிந்ததும் நிதானமாக நண்பனின் கட்டுகளை அவிழ்த்து அவனை விடுவித்தான். அங்கே நின்ற நகர்காவலரிடம் பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு நண்பன் ரமேஷையும் அழைத்துக் கொண்டு ரம்யாவைப் பார்க்க வைத்திய சாலைக்குச் சென்றான்.
நினைவு தெளிந்து அவள் படுக்கையில் கண்விழித்துப் பார்த்தபோது சூரியாவின் முகம்தான் முதலில் தெரிந்தது. மிரள மிரளப் பார்த்தாள். அருகே இருந்த அவனின் கைகளைப் பற்றிக் கொண்டு, 'நாங்க எங்கே இருக்கிறோம்' என்றாள்.அவளது அந்த ஸ்பரிசத்தில் உடம்பெல்லாம் சிலிர்க்க தன்னை மறந்த சூரியா மெல்லிய புன்னகையோடு,'சொர்க்கத்தில்!' என்றான்.



கனகதுர்க்கா பூசாரி
பண்டித் சீனிவாஸ் சாஸ்திரி
கருமாரி அம்மன் துணை
Face Reading
முகத்தைப் பார்த்து உங்கள்
எதிர் காலத்தைக் கணிப்பார்
அத்துடன் கைரேகையும் பார்க்கப்படும்

வியாபாரங்கள் எதிரிகள் உடல்நிலை
வேலை குழந்தைப்பாக்கியம் திருமணம் பணம் காதல்
விவாகரத்து வழக்குகள் கண்திருஷ்டி படிப்பு
வாகனப்பொருத்தம் மற்றும் பலபிரச்சினைகளுக்கும்
தீர்வுகாணலாம். காத்துக்கறுப்பு இருந்தாலும் நிவாரணம்
செய்து கொடுக்கப்படும்
வாரத்தில் 7 நாட்களும் 09.மணி முதல் 22.00 மணி வரை வரலாம்.
பேசும் மொழிகள் :தமிழ் தெலுங்கு,
ஒரு முறை நம்பிக்கையுடன் வாருங்கள் நலமடைவீர்கள்.
Tel:0231 33 89 72 90 -Handy: 015166182886 015214145738
0231 28 21 4508 Adler Ster.30, 44137 Dortmund

A.tu.Z Dolmetscher -
und Übersetzungsdienst
Für alle weltsprachen
மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம். Lise-Meitner-Str.20 45144 Essen
e.mail:atuzuebersetzung@hotmail.com

அன்று யாழ் நகரில் ஓர் மொக்கன் கடை இன்று டோட்மூண்ட் நகரில் ஓர் நானா கடை!

Sweet Chilli
Original Srilankisches & Indisches Restaurant
100%Halal 100%Frisch 100%Naturgewürze 100%Naturkräuter
இலங்கை புரியாணி (ஒரிஜினால்) கொத்துரொட்டி, இடியப்பகொத்து, புட்டுக்கொத்து, தோசை,மட்டன்றோல். பற்றிஸ் மற்றும் ஊர் ஆட்டிறைச்சிக் கறி, ரோஸ்கறி, கோழிக்கறி.அத்துடன் இந்திய உணவுவகைகள், அறுசுவை மரக்கறிகளுடன் தினமும் வாழையிலையில் பரிமாறும் ஒரே கடை நானா கடை!!! தினமும் காலை 11.30 இருந்து மாலை 23.30 வரை

50 இருக்கைகளைக் கொண்டது
Sweet Chilli
சான்றிதழ்களை இருமுறை பெற்றவர்கள் நாம்!
Rheinische str.60- 44137 Dortmund
www.sweetchilli-do.de
Tel: 0231 315 46 84




பகுதி II இல் பற்றிய நிலவெழிலும், நினைவழிக்கும் காற்றும். நிஜமளிக்கும் காதலும் மீண்டும் மீண்டும் என் சிந்தைக் கொதிப்பிற்கு நிரந்தர விருந்தாக, அவ்வுணர்வைத் திங்கள் ஒன்று கடந்த பின்னும் தொடரத் தீண்டுகிறது.

காதலையும், காதலியையும் பிரிந்துணரும் பகுத்தறிவு கொண்டு எனைப் பித்தாக்க வந்த சித்தன் பாரதி! அவன் தீட்டிய "கண்ணம்மாவின் காதல்" எனும் வண்ணக் கவிக்குள் என் கண்கள் கவரப்பட்டுப் புதைந்தன.

காற்று வெளியிடைக் கண்ணம்மா நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன்"

தழுவிப் போகும் காற்றானது கண்ணம்மாவின் அணைப்பின் ஸ்பரிசம் தந்து தாகத்தீ அணைக்க வல்லதாய், கண்ணம்மாவின் மெய்த்தீண்டலின் விம்பமாய் விழும் காற்று வெளியிடை அவளோடான காதலை எண்ணுகிறார். காதலியின் உருவமல்ல, அருவமாய் நிறையும் காதலை எண்ணிப் பார்த்தாலே போதும் பேரின்பக் களி என்கிறார்.

"அமு தூற்றினை யொத்த இதழ்களும் - நில
வூறித் ததும்பும் விழிகளும்"

அருவுருவ ஆனந்தம் காணும் பொருட்டு மேலும் தொடர்கிறார். அன்று அலைகடல் கடைந்து அமரரும், அசுரரும் காணத் துடித்த அமிர்தம், இன்று என் கண்முன் கண்ணம்மாவின் இதழில் நான் தவமிராத வரமாய்க் காண்கிறேன்.

விண்ணில் தெரியும் நிலவு, என் கண்முன் உன் கண்ணில் தெரிகிறது. பால் நிலா போல் வெண்மை ஊறித் ததும்பும் இவ் விழிகளில் உன் ஆன்மாவின் பரிசுத்தம் காண்கிறேன் என்கிறார். கண்ணம்மாவைத் தெய்வ வடிவாய்க் காணும் அதியுன்னத காதல் நிலை பாரதியின் பல சிந்தனைகளில் தெறித்திருக்கிறது.

"வேற்று நினைவின்றித் தேற்றியே - இங்கோர்
விண்ணவனாகப் புரியுமே!"

இவ்வாறான உன் நினைவில் திளைத்து, வேறு நினைவுகளை வென்று, உனை மட்டுமே எண்ணி எண்ணி உயர்வடைந்து கொண்டிருக்கும் நான் இந்த உலகத்தில் இருக்கும் வரை மண்ணிலிருந்தே ஓர் விண்ணவனாக விளங்குகிறேன். அண்டராய் எனை ஆக்கும் அற்புதம் நீ கண்ணம்மா என்கிறார். ஆதலால் இக் கவியில் விண்ணோடு சம்பந்தப்படுத்திய உவமைகளையே கண்ணம்மாக்கு ஒப்பிடுகிறார்.

"நீயென தின்னுயிர் கண்ணம்மா! எந்த
நேரமும் நின்தனைப் போற்றுவேன் - துயர்
போயின போயின துன்பங்கள் - நினைப்
பொன்னெனக் கொண்ட பொழுதிலே"

காற்றில்லாவிடில் சுவாசம் இல்லை, உயிரும் தங்காது. காற்றைக் காதலோடு கருதும் பாரதிக்கு அக்காதலே சுவாசமாகி உயிராகிறது. காதலின் உச்சத்தில் காத்தாடியாகும் காதல் எந்நேரமும் ஓயாது காதலோடு இரண்டறக் கலந்த நினைவில் சுகானுபவம் காணும் எனும் நிட்சயத்தையும் பாரதியின் கவிதை பலவற்றில் சுவைக்கலாம்.

இன்னுயிரான கண்ணம்மா, எந்நேரமும் நினை நினைப்பது மட்டுமல்ல உனைப் போற்றுகிறேன். ஏனெனில் என் துயர் அத்தனையும் போயின. முற்றுமுழுதான இன்பம் மட்டுமே திக்கெட்டும் திகட்டுகிறது. ஆதலால் மேலும் வலுப்படுத்தி கூறுகிறேன். துயர் போயின போயின துன்பங்கள் என்கிறார். வறுமையின் விளிம்பிலான வாழ்க்கைக்குச் சாட்சியான பாரதி, பத்து மாற்றுப் பொன்னொத்தவளாக, பொன்னாக திருமகளாக எண்ணிய கணத்திலிருந்தே வறுமையின் துயரை எட்ட வைப்பதாக எண்ணுகிறார்.

"வாயினிலே அமுதூறுதே கண்ணம்
மாவென்ற பேர்சொல்லும் போழ்த்திலே உயிர்த்
தீயினிலே வளர் சோதியே! என்றன்
சிந்தனையே என்றன் சித்தமே!

காதலின் தித்திப்பை சுவைத்துணரத் துடிக்கும் நாவின் ஒரே வழி காதலிப்பவர் நாமத்தைச் சொல்லி சொல்லி இன்புற்றிருத்தல், காதலன்/காதலி பெயரைக் காணும் போதும், கேட்கும் போதும், சொல்லும் போதும் வரும் தனிச் சுகம் விநோத ஆனந்தம்.



ஆஹா! கண்ணம்மா..................! என்று உன் பெயரைச் சொல்லும் போதே வாயினில் உமிழ்நீரோடு கலந்தூறுகிறது அமுதம். உன் இதழ்களில் ஊறும் அமுதை என் கண்களில் கண்டேன். இப்போது என் வாயினில் கூடு பாய்கிறது. நின் இதழ் தீண்டாமலே பெயர் சொன்னால் போதுமடி என் நாவும் அமுதச் சுவையறிகிறது என்கிறார்.



பாரதியின் உடலும், உள்ளமும் சாதரணமாய் தீயோடு சாதாரணமான குணத்தினை அவரது பல கவி வடிவங்களில் காண்கிறோம்.

ஆத்தீயானது சமூக விழிப்புணர்ச்சிக்கானதாக, காதலுக் கானதாக இல்லை ஆத்ம ஜெயத்திற்கானதாக எனப் பல பரிமாணங்களில் கொழுந்து விட்டது.

உடல், உளம் கடந்து உயிர் என்கிற மெய் பொருளில் சுடர் விட்டெரியும் தீயினிலே தூய மெய்ஞ்ஞான ஜோதியாய் வளர்கிறாய் கண்ணம்மா என்கிறார்.

நம் உயிர் ஸ்தானத்தில் 360 ஒளிக்கதிர்கள் வீச அவற்றிற்கெல்லாம் மேலாயிருந்து அருள்வது இறைவனின் திருவடியென ஆகமங்கள் கூறுகிறது.

தொடர்ச்சி 15 ம் பக்கம்








**விக்கி விக்னேஷ்**
சூரியன் FM செய்தி தொகுப்பாளர்





## இலங்கை செல்லும் சுற்றுலாப் பயணிகளுக்கு மலைக்க வைக்கும் மலையகம்

இயற்கையை இரசிக்க விரும்பும் யாருக்கும் நீர்வீழ்ச்சிகள் குறித்த ஒரு மயக்கம் இருக்கும்.
சிறிலங்காவின் மலையகப் பகுதியை நினைக்கும் போது, மனக்கண்முன் தோன்றுவனவற்றில், பச்சைத் தேயிலை மலைகளும், சலசல வென்ற செங்குத்தான நீர்வீழ்ச்சிகளையும் தவிர்க்க முடியாது...

கண்ணை மூடி சற்றை கற்பனை செய்து பாருங்கள்.ஈரவளைய மலையப்பகுதியில் நீர்வீழ்ச்சிகள் இல்லாத காட்சிகள் வெறுமையானவை...

மலையகத்தின் முக்கிய மாவட்டங்களில் ஒன்றான பதுளை மாவட்டத்தில் இவ்வாறு குறிப்பிடத்தக்க பல நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன.

பதுளை நருக்கு அருகிலேயே இருக்கின்ற துங்கிந்த நீர்வீழ்ச்சி, முக்கியமானவற்றுள் ஒன்று.பதுளை நகரில் இருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் இந்த நீர்வீழ்ச்சி இருக்கிறது.
வனப்பகுதி ஊடாக சுமார் 1 கிலோமீற்றர் தூரம் வதவதப்பான பாதையில் நடந்து செல்ல முதலில் சிறிய அளவான நீர்வீழ்ச்சி ஒன்றைக் காணலாம். இதனை சிறிய துன்கிந்த என்கிறார்கள்.

இன்னும் சற்றுத் தொலைவில் உண்மையான துங்கிந்த நீர்வீழ்ச்சி இருக்கிறது.இந்த நீர்வீழ்ச்சி சிறிலங்காவில் உள்ள மிக அதிகமான சுற்றுலாப் பயணிகளை கவரும் தளங்களில் முக்கியமான ஒன்று. “பதுளுஓய“ ஆற்றினால் இந்த நீர்வீழ்ச்சி ஏற்படுத்தப்படுகிறது.

“துன்“ என்றால் புகைமண்டலம் என்று சிங்கள மொழியில் பொருள்படுகிறது. நீர்வீழ்ச்சியின் வேகத்தினால் ஏற்படும் நீரின் சிதறல்கள் இங்கு பெரிய புகைமண்டலம் போன்ற மாயையை ஏற்படுத்துகிறது.

இதனால் இதற்கு “துங்கிந்த“ என்று பெயர் கிடைத்ததாக, சிங்கள கதைகளில் கூறப்படுகின்றன.

(எனினும் “துங்கம்“ என்ற தமிழ் சொல்லுக்கு, மலை, மலையுச்சி போன்ற பொருள்கள் இருக்கின்றன என்பதை அறிக)

இந்த நீர்வீழ்ச்சி, 64 மீற்றர் உயரமானது.

நீர்வீழ்ச்சிக்கு அருகில் பார்வையாளர்களுக்கான பாதுகாப்பு மேடை அமைக்கப்பட்டுள்ளது. இதில் இருந்தே நீர்வீழ்ச்சியை ரசிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கின்றது.
ஆனபோதும், இன்னும் சற்றே முன்னே செல்ல மேலும் அழகை இரசிக்க முடியும்.எனினும் இந்த பகுதி மிகவும் ஆபத்தானதும் கூட. அதிக அளவிலான விபத்துகள் இந்த நீர்வீழ்ச்சிக்கு அருகில் இடம்பெறுகின்றன.






## விக்ரமுடன் நடிக்க மாட்டேன் என்ற நயன்தாரா மாட்டிக்கொண்டார் இரு முகனில்!




விக்ரம் நடிப்பில் உருவாகி வரும் “,இருமுகன்“ ஜூலை மாதம் வெளியாகலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. “மாட்டேன் மாட்டவே மாட்டேன்“ என்று விக்ரமுடன் ஜோடி சேர அடம்பிடித்த நயன்தாரா, இப்படத்தில் அவருக்கு ஜோடியாக நடித்து வருகிறார். ,மேலும் “பில்லா“ போல ,இதிலும் ஆக்ஷன் காட்சிகளில் நயன்தாரா நடித்திருப்பதாகக் கூறுகின்றனர்.

சமீபத்தில் விக்ரமின் பிறந்தநாளை முன்னிட்டு ,இப்படத்தின் டீசர் வெளியாகி ,இணையத்தில் வைரலடித்தது. ,இது தவிர விக்ரம் 2 வேடங்களில் நடிப்பது, நயன்தாரா-விக்ரம் ,இணையும் முதல் படம் என படத்திற்கான எதிர்பார்ப்புகள் அதிகமாகவே உள்ளன. ,இப்படத்தின் 60% படப்பிடிப்பு முடிவுற்ற நிலையில் மீதமுள்ள படப்பிடிப்பை லடாக், பாங்காக் பகுதிகளில் நடத்தவுள்ளனர்.

இதற்காக “,இருமுகன்“ படக்குழு விரைவில் அப்பகுதிகளுக்கு செல்லவிருக்கிறது. திட்டமிட்டபடி படப்பிடிப்பு முடிவடைந்தால் வரும் ஜூலை மாதம் ,இப்படம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

,இப்படத்தில் ,இரட்டை வேடங்களில் விக்ரம் நடித்து வருகிறார்.அதில் ஒரு கதாபாத்திரத்தின் பெயர் அகிலன் என்பது குறிப்பிடத்தக்கது




# காதோடு காதாக

கலைக்கதிர் கதிர் துரைசிங்கம்

## நாங்கள் ஏழைகள்

செல்லர்: என்ரை மகளும் மருமகனும் பேரனோட இலங்கைக்குப் போய் மூத்த மகள் குடும்பத்தோட ஒரு மாசம் நிண்டு, எல்லா இடமும் சுத்திப்போட்டு வந்திருக்கினம். அங்கை போட்டு வந்ததில இருந்து என்ரை பேரன் 'இஞ்சை இருக்கிற நாங்கள் ஏழைகள்' எண்டு சொல்லிக்கொண்டு நிற்கிறான்.





சோமர்: Ajax லை இரண்டு கராஜ் ஒட Detached வீடு, Lexus கார் இரண்டு, மகளும் மருமகனும் கைநிறைய உழைக்கினம். இப்படி இருக்க, பேரன் ஏன் ஏழை எண்டு நினைக்கிறான்.

செல்லர்: நான் அவனைச் சும்மா விடவில்லை, ஏன் எண்டு கேட்டனான். அவன் சொன்ன ஏழு விளக்கத்தையும் சொல்லிறன் கேளும்.

* நாங்கள் இஞ்சை சிரமப்பட்டு வீட்டிலை ஒரு நாய் வளர்க்கிறம். அங்கை அவை ஒரு பசுமாடு, இரண்டு ஆடு, ஆறு கோழி எண்டு சுலபமாய் வீட்டிலை வளர்க்கினம்.
* எங்கடை வீட்டைச்சுற்றி 3 அடி வளவு மட்டும்தான் எங்களுக்குச் சொந்தம். அங்கை வீட்டோட வளவு, வயல் எண்டு பெரிய இடம் அவைக்குச் சொந்தம்.
* இஞ்சை நாங்கள் ஒரு சின்ன அறைக்குள்ள நிண்டு குளிக்கிறம். அங்கை பெரிய இடத்தில நிண்டு குளிக்கினம்.

* நாங்கள் எப்பவோ பிடிச்ச மீனையும் எப்பவோ கொன்று குளிர் ஊட்டியில் வைக்கப்பட்ட இறைச்சியை எடுத்துச் சமைத்துச் சாப்பிடுகிறம். அங்கை அன்றைக்கு வெட்டின ஆட்டு இறைச்சி, கோழி இறைச்சி, அன்றைக்குப் பிடித்த மீன் என்று உடனுக்குடன் சமைச்சுச் சாப்பிடுகினம்.



* இஞ்சை பிறந்த நாள் அல்லது இறந்த நாள் எண்டால் தான் வீட்டுக்கு ஆட்கள் வருகினம். அங்கை ஒவ்வொரு நாளும் ஆட்கள் வந்துபோகினம்.
* அங்கை குடிசையிலை இருந்தாலும் சந்தோசமாக இருக்கினம். இஞ்சை மாளிகை இருந்தாலும் சந்தோசம் தேடி Cottage (குடிசை) க்குப்போகிறம்.
* எங்களுக்கு இஞ்சை சொந்தம் எண்டு சொல்ல ஒரு கணினியும் ஒரு கைத்தொலைபேசியும் தான் இருக்கு. அங்கை அவைக்கு ஏகப்பட்ட சொந்தங்கள்.






13ம் பக்க தொடர்ச்சி....

## நின்னைச் சரணடைந்தேன்

இக் கதிர்களிலிருந்து தீப்போல் வளரும் ஒரே ஜோதி கண்ணம்மா என எண்ணும் பாரதியின் எண்ணக்கரு கண்ணம் மாவின் ஸ்தானத்தை மென்மேலும் ஏற்றப்படுத்தி தெய்வத்திற்கு ஒப்பிடத் தூண்டுகிறது.

இவ்வாறெல்லாம் என் சிந்தனை தான் என் சித்தம் (இதயம்) என்கிறார். புத்தியினூடும், மனத்திற்குள்ளும் வழியும் எண்ணம் பேதமின்றி ஒன்றாகவே இருக்கிறது.

என் ஆன்மாவோடான அகக் காதலும், ஆக்கைக்குத் தேவையான புறக் காதலும் வேறுபாடின்றி ஒன்றே தான் எனப் பகுத்தறிவு தத்துவம் விளக்குகிறார், ஆறறிவுடை அற்புதக் கவிக்காதலன்!

அழிந்து போகும் ஆக்கையோடு, அழியாத ஆன்மாவைப் பிரித்தறியும் தன்மையே மானிடர்க்குரித்தான ஆறாம் அறிவு எனும் மெய்ஞ்ஞானம் உணர்ந்தறிந்து தொடர்வோம்.

தொடரும்...












தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

## சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.

03

சேவியர்

# வேலை மட்டுமே வாழ்க்கை அல்ல!




"என் வீட்டுக்காரர் எப்பவுமே ஆபீஸ் ஆபீஸ்னு அதையே கட்டிகிட்டு அழறாரு" எனும் புலம்பலைக் கேட்டதில்லையெனில் நீங்கள் நிஜமாகவே புண்ணியம் செய்தவர்கள். வீட்டுக்கு வீடு வாசப்படி போல இந்த புலம்பல்கள் எல்லா இடங்களிலும் காற்றைப் போல சர்வ சுதந்திரமாக அசைந்தாடிக் கொண்டிருக்கின்றன.

"ஆபீஸ் எனக்கு முதல் வீடு, வீடு எனக்கு இரண்டாவது ஆபீஸ்" எனும் கரகரப்பான குரல் மறு முனையிலிருந்து எழுகிறது. வீட்டில் தூங்குவதைத் தவிர வேறெதையும் பெருசாய் செய்துவிடாத மக்கள் கூட்டம் பெருகிக் கொண்டே இருக்கிறது. அவர்களுக்கு வாழ்க்கை என்பது அலுவலகத்தில் வேலை செய்வது, அதை அப்படியே வீட்டிலும் தொடர்வது ! இப்படி ஒரு வாழ்க்கை தேவையா ? என இவர்களிடம் கேட்டுப் பாருங்கள். "வாழ்க்கைல முன்னேறணும்ன்னா இப்படியெல்லாம் செய்தே ஆகணும்" என்பார்கள். சரி, வாழ்க்கை என்றால் என்ன என்று இன்னொரு கேள்வியையும் கேட்டுப் பாருங்கள் ? முழிப்பார்கள். நமது வாழ்க்கை தனது அர்த்தத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வருகிறதோ எனும் கவலை எழுகிறது. ரிட்டையர்ட் ஆகும் வரை ஓயாமல் வேலை செய்து விட்டு, கடைசியில் திரும்பிப் பார்க்கும் போது நாம் அனுபவிக்காமல் தவற விட்ட தருணங்கள் நம்மைப் பார்த்து நகைக்கும்.

வேலை முக்கியமானது, வாழ்க்கைக்குத் தேவையானது. ஆனால் அதுவே வாழ்க்கையல்ல எனும் தெளிவு நமக்கு ரொம்பவே அவசியம். வேலையின் வேலிகளைக் கடந்த ஒரு வாழ்க்கை வசந்தங்களோடும், மழலைப் புன்னகையோடும் நம்மைப் பார்த்துக் கையசைத்துக் கொண்டே இருக்கிறது. வாழ்வின் உன்னத நிமிடங்கள் இங்கே தான் உலவிக் கொண்டிருக்கின்றன.

வேலைக்கும், வாழ்க்கைக்கும் இடையே ஒரு சமநிலை இருக்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் "வர்க்-லை∴ப் பேலன்ஸ்" என்கிறார்கள். இந்த சமநிலை தடுமாறும் போது தான் வாழ்க்கையின் சுவாரஸ்யங்கள் சிதைந்து போகின்றன. அல்லது வேலையின் முன்னேற்றம் முடங்கிப் போகிறது. "வேலை, ஆரோக்கியம், குடும்பம், நட்பு, உயிர் என ஐந்து பந்துகளை மேலே எறிந்து விளையாடும் விளையாட்டு தான் வாழ்க்கை. இதில் வேலை மட்டும் ரப்பர் பந்து, தரையில் விழுந்தாலும் துள்ளி வரும். மற்ற எல்லாமே கண்ணாடிப் பந்துகள். விழுந்தால் கீறல் விழலாம், உராய்வுகள் ஏற்படலாம் ஏன் உடைந்தே கூட போய்விடலாம். எப்போதுமே பழைய வசீகரத்துக்கு அவை திரும்ப முடியாது. எனவே வாழ்க்கைக்கும் வேலைக்குமிடையே சீரான ஒரு சமநிலை இருக்க வேண்டியது அவசியம்" என்கிறார் பிரைன் டைசன்.

வேலையையே கட்டிக் கொண்டு அழுபவர்கள் உடலைக் கவனிக்க மாட்டார்கள். மருத்துவரைப் பார்க்க வேண்டும், ஒரு செக்கப் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டே இருப்பார்கள். ஆனால் போக மாட்டார்கள். காரணம் கேட்டால், "ரொம்ப வேலை, டைமே கிடைக்கலை" என்பார்கள். வேலைக்காக தங்களுடைய ஆரோக்கியத்தையே அடகு வைக்கும் இத்தகைய மனிதர்கள் ஒரு காலகட்டத்தில் நோயின் வீரியத்தால் வீழ்த்தப்பட்டு மருத்துவமனைக் கட்டிலில் அசையாமல் படுத்திருப்பார்கள்.

மறு புறம் மனநலமும் அவர்களைப் புரட்டிப் போடும். எரிச்சலும், கோபமும் அவர்களுடைய இரு அகக் கண்களாக மாறும். வேலை முடித்து வீட்டுக்கு வரும்போது உடல் சோர்வில் சுற்றப்பட்ட கசங்கிய தலையணையாய் தெரியும். குடும்பத்தினர் சொல்வதை கவனிக்கவோ, அவர்களோடு உற்சாகமாய் நேரம் செலவிடவோ மனமிருக்காது. உளைச்சல், அழுத்தம் என இவர்களுடைய மனம் யானை புகுந்த வயல் போல சின்னாபின்னமாகிக் கிடக்கும்.



"வேலையை இழந்து விடுவோமோ எனும் பயம் தான் பெரும்பாலான மக்கள் அதிக நேரம் வேலை செய்வதன் காரணம்" என்கிறார் உளவியலார் ராபர்ட் புரூக்ஸ். ஒருவேளை உங்களுடைய வேலை உங்களுக்குத் தேவையான ஓய்வு நேரத்தைத் தராவிட்டால் சம்பளம் குறைந்ததானாலும் அடுத்த வேலையை நோக்கிப் போவதே நல்லது என்கின்றனர் ஆய்வாளர்கள். !

புளூஸ்டெப்ஸ் டாட் காம் எனும் இணைய தளம் சமீபத்தில் ஒரு சர்வே நடத்தியது. ஊழியர்களின் வேலை-வாழ்க்கை சமநிலைக்காக நிறுவனங்கள் ஒரு துரும்பையும் கிள்ளிப் போடுவதில்லை என குற்றப்பத்திரிகை வாசித்தவர்கள் 82% பேர். இன்னொரு சர்வே 70% ஊழியர்களிடையே வேலை அழுத்தம் குறித்த கவலையும், தேவையான நேரத்தைக் குடும்பத்துடன் செலவிட முடியவில்லையே எனும் ஆதங்கமும் இருப்பதாய்ச் சொன்னது.

தொடர்ச்சி 17 ம் பக்கம்


AMMA's food

ammas-food.de

டோட்முண்ட் நகரில் ...

அம்மா'ஸ் உணவகம்

அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம் சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.

அறுசுவைக்கறிகளுடன் சோறும், புரியாணியும்
கொத்து ரொட்டி ,இட்லி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!

எங்கள் இனிய தைப்பொங்கல் நல் வாழ்த்துக்கள்

உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!

Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund

காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!



வெள்ளி சனி நாட்களில் பாலப்பம்

Tel:0231 33 89 86 91

Fax:0231 33 89 86 93

## தன்னம்பிக்கைத் தொடர்...

மாறிவரும் வாழ்க்கைச் சூழல், உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவையே இதன் காரணம் என பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்தனர். இந்த வேலை-வாழ்க்கைச் சமநிலைப் பிரச்சினை ஒரு சர்வதேசப் பிரச்சினையாக வேர் விட்டிருப்பதையே இத்தகைய ஆய்வுகள் எடுத்துக் கூறுகின்றன.

வர்க்-லை.ஃப் பேலன்ஸ் தேவை என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது. ஆனால் அதை எப்படி உருவாக்குவது என்பதில் தடுமாற்றங்கள் இருக்கும். இதற்கு மலையைப் புரட்டி வெளியே எறிய வேண்டிய தேவையெல்லாம் இல்லை. சின்னச் சின்ன சில விஷயங்களைக் கவனத்தில் கொண்டாலே போதுமானது. உதாரணமாக, வாரம் ஒரு நாள் அலுவலகத்திலிருந்து சீக்கிரமாகவே வீட்டுக்குக் கிளம்பி வருவது கூட குடும்ப உறவின் இடைவெளியை சீரமைக்க உதவும்.

வேலையை வேலைசெய்யும் இடத்திலேயே விட்டு விட்டு வாருங்கள். அலுவல் நேரம் முடிந்த பின்னும் அதை முதுகிலும், மூளையிலும் தூக்கிச் சுமப்பது தவறு. ஒருவேளை வீட்டிலிருந்து செய்யும் வேலையெனில் இவ்வளவு மணி நேரம் தான் வேலை என தெளிவாய் வரையறுத்து அந்தக் கோட்டில் நில்லுங்கள்.

அடுத்த வாரத்துக்கான திட்டமிடுதல் பயனளிக்கும். ஆனால், அதில் தங்கள் ஆனந்தங்களுக்கான நேரம் இடம் பெற வேண்டியது அவசியம். நண்பரைப் பார்ப்பது, பூங்கா போவது, வீட்டிலேயே இருப்பது என எதுவானாலும் சரி, போடும் திட்டத்தில் நிலைத்திருங்கள். "இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறதே" என ஏதாவது வேலையை தலையில் இழுத்துப் போடாதீர்கள்.



"எவ்வளவு மணி நேரம் வேலை செய்தோம் என்பதை விட, இந்த மணி நேரத்தில் எவ்வளவு வேலை செய்தோம்" என்பதே திறமையை வெளிப்படுத்தும். சிலர் காலை முதல் மாலை வரை வேலை செய்வார்கள். இவர்களுடைய பெரும்பாலான நேரம் கிசு கிசுக்களிலோ, இணையத்தில் ஆர்குட், ஃபேஸ் புக் போன்ற இடங்களிலோ, தொலைபேசியிலோ, மின்னஞ்சலிலோ செலவிடப்படும். இந்த அனாவசிய நேரத்தையெல்லாம் விலக்கினால் அந்த நேரத்தை வேலை தாண்டிய வாழ்க்கைக்காகச் செலவிடலாமே !

வேலை வேலை என்று அலைபவர்கள் கட் பண்ணும் ஒரு விஷயம் உடற்பயிற்சி.

உண்மையில் அவர்கள் நிறுத்தக் கூடாத ஒரு வேலை அது தான். உடற்பயிற்சி செய்பவர்களால் முழு நாளிலும் உற்சாகத்தைக் கட்டிக் காக்க முடியும். அதே போல நிம்மதியாய்த் தூங்கவும் பழகுங்கள். தூக்கத்தை விட்டு வேலை செய்யத் துவங்கினால் சீட்டுக் கட்டு போல வாழ்க்கை சரிந்து




விடும்.வாழ்க்கைக்கும், வேலைக்கும் இடையே அழுத்தமான கோடு கிழியுங்கள்.வாழ்க்கைக்கும், வேலைக்கும் இடையே அழுத்தமான கோடு கிழியுங்கள். வேலை நேரத்தில் ஆத்மார்த்தமாய் வேலை செய்வதும், மற்ற நேரத்தை மன மகிழ்ச்சியாய்ச் செலவிடுவதும் அவசியம். அவ்வப்போது லீவு போட்டு குடும்பத்தோடு ஹாயாக எங்கேயாவது போவது, நண்பர்களுடன் கொட்டமடிப்பது என திட்டமிடுங்கள். "லீவ் எடுக்காவிட்டால் பணம் கிடைக்கும்" என லீவை எல்லாம் பணமாய் மாற்ற முயலாதீர்கள். பெயர், பணம், புகழ், பதவி எல்லாமே தற்காலிகமானவை. ஆழமான அன்பு, உற்சாகமான நட்பு, குடும்ப உறவு போன்றவையே வாழ்க்கையை அழகாக்குபவை.






உங்க அலுவலகத்திலேயே சிலர் வேலை-வாழ்க்கை சமநிலையை வெகு ஜோராகக் கடைபிடிப்பார்கள். அவர்களோடு சகவாசம் கொள்ளுங்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் மனநிலை உங்களை எப்போதுமே சட்டென எட்டிப் பிடித்து விடும். அமெரிக்கா போன்ற நாடுகளில் வெள்ளிக்கிழமை மாலையில் அலுவலகத்தை விட்டு வெளியேறினால், மீண்டும் திங்கட்கிழமை காலையில் அலுவலகம் நுழையும் வரை வேலையே பார்க்க மாட்டார்கள். முழுக்க முழுக்க குடும்பத்தோடு செலவிடுவார்கள். அப்படி ஒரு பாலிஸியை நீங்களும் கைக்கொள்ளுங்கள். வார இறுதிகள் அடுத்த வாரத்துக்கான உற்சாக டானிக்கை உற்பத்தி செய்து தரும்.வேலை செய்வது வாழ்க்கையை நிம்மதியாக வாழத்தான் தான். வேலையே அதற்கு வேட்டு வைத்து விடக் கூடாது. குடும்ப ஆனந்தங்களை மீண் டெடுக்கவும், சுவாரஸ்யமாய்க் கொண்டாடவும் மனதில் அது குறித்த சிந்தனைகளைப் பசுமையாய் வைத்திருங்கள். எதிர்பாராத நேரத்தில் உங்கள் கணவருக்கோ, மனைவிக்கோ கொடுக்கும் ஒரு சின்ன அன்புப் பரிசு கூட குடும்ப வாழ்வின் பிணைப்பை அதீத வலுவாக்கித் தரும் !அன்பாக வாழ்ந்திடப் பழகு அன்பின்றி அமையாது உலகு



Umsatzsteuer ID.-Nr. DE186406298 | Berufserlaubnis erteilt am 08.01.2002
Sinnadurai Kiritharan|Tel. 05723-914519| www.rklimmo.de|info@rklimmo.de
Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sinnadurai.Kiritharan
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை
நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!
மேலதிகவிபரங்களிட்கு Tel. 05723-914519 or www.rklimmo.de
or www.lankasri.com



# யேர்மனிய இளைஞனின் தன்னம்பிக்கை!

## வாழ்வில் உடல் ஊனம் ஒரு தடையா!

வ. சிவராஜா




மனிதப் பிறப்பானது இந்தப் பூவுலகில் மகத்தான பிறப்பாகும். ஒவ்வொரு மனிதனும் இப்பூமிப்பந்தில் அவதரிக்கும்போது அவன் என்றோ ஒருநாள் இறந்துவிடுவான் என்பது எவ்வளவு உண்மையான விடையமாகும். இப்படிப்பட்ட மனிதன் தன் வாழ்நாளில் எவ்வளவுகாலம் வாழ்ந்தவன் என்று கணக்குப் பார்ப்பதைவிடுத்து அவன் எப்படி வாழ்ந்தான் என்ன செய்தான் என்ன சாதித்தான் என்னத்தை விட்டுச்செல்கிறான் என்பதே முக்கியமான விடையமாகும்.

மனிதர்களில் ஒரு சிலர் பிறக்கும்போதே சில குறைபாடுகளுடன் பிறந்துவிடுவது ஆண்டவன் படைப்பு என்று நாம் கூறுவோம். நம்மவர்களால் சொல்லப்படும் கூன், குருடு, செவிடு எனச்சொல்லி ஒருவர் பிறந்துவிட்டால் நமது நாட்டைப் போன்ற வறிய நாடுகளில் அந்த உயிர் பிரியும்வரை அந்தக் கறைபாட்டுடன் பிறந்தவர் வாழ்வு அதோ கெதிதான். நும் சமூகத்தில் இப்படிப்பட்டவர்களை ஒதுக்கி வைப்பது, தள்ளி வைப்பது அவர்களை வாழவிடாமல் உயிருடன் சாகடிப்பது போன்ற சம்பவங்கள் நிறையவே நடக்கும். குருடன்-குருடி, செவிடன்-செவிடி, முடவன்-முடவி, ஊமை-ஊமைச்சி ஏன் விதவை-தபிதாரன் என்று எல்லாம் பட்டங்கள் சூட்டி இவர்களின் எதிர்கால வாழ்வை நாசமாக்கும் செயல்களிலேயே நம்மவர்கள் பலர் ஈடுபடுவார்கள். இது நம் சமூகத்தால் பழக்கப்பட்ட விடையமாகவும் போய்விட்டது.

ஆனால் வளர்ந்த,வசதிபடைத்த நாடுகளில் இப்படிப்பட்டவர்களை ஒருபோதும் ஒதுக்கமாட்டார்கள். தரக்குறைவாக நடாத்தமாட்டார்கள். அவர்களுக்கென விசேட கவனிப்புக்களஈ ஏற்பாடுகள், பாதுகாப்பு, என வாழ்வியல் அம்சங்கள் சிறப்பாக இருக்கும். அந்த நாட்டுச் சட்டங்களும் இடங்கொடுக்க மாட்டாது. மக்களும் மாற்று மனப்பான்மையில்லாமல் எல்லோரும் சரிசமம் என்ற மனப்பக்குவத்தில் வாழ்வார்கள். இதனால் குறைபாடுகளுள்ள பலர் பல துறைகளில் அதீத திறமைசாலிகளாகக் காணப்படுவதுடன் அவர்கள் தாம் வாழும் நாடுகளுக்குப் புகழையும் ஈட்டிக்கொடுக்கிறார்கள்.
இங்கு இப்படங்களில் காணப்படும் ஒரு ஜேர்மனிய இளைஞனைப் பிற்றியதாகவே இக்கட்டுரை அமைகின்றது. இவர் பிறப்பிலேயே கை, கால் இல்லாமல்தான் பிறந்தவர். இவரின் பெயர் ஜெனிஸ் மைக்டேவிட் இவரின் வயது 24. ஜேர்மனி-போக்கும் நகரில் பிறந்தவர். சிறுவயது தொடக்கம் ஒழுக்காகக் கல்விபயின்ற இவர் தந்போது தலைநகர் பேர்ளினிலுள்ள பல்களைக்கழகம் ஒன்றில் சமூக விஞ்ஞான பொருளாதாரத்துறையில் பட்டப்படிப்மை மேற்கொண்டுவரும் பட்டதாரி மாணவனாவன். இவரது வாழ்வில் என்ன விடையமென்றால் சாதாரண ஒருவரைப்போல் தனது சகல வேலைகளையும் தானே செய்துவருகின்றார். பிறர் உதவிகள் இல்லாமல் எந்தவேலைகளையும் செய்துகொள்ளும் ஆற்றல் வலிமை பெற இந்த நாட்டின் அரசு அவருக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுத்திருப்பதால் இப்படிப்பட்ட ஒவ்வொருவரின் வாழ்வும் ஒளிமயமாகத்தான் காணப்படுகின்றது.

இவர் சுயமாகவே தனது அன்றாட வேலைகளைச் செய்துகொள்கிறார். காலைக் கடன்களிலிருந்து மகிழூர்ந்து (கார்) ஓடவும் கற்றுக்கொண்டுள்ளார். பேருந்து (பஸ்) தொடரூர்ந்து (றெயின்) போன்றவற்றில் தனியாகவே பிரயாணம் செய்கிறார். இவருக்கென உருவாக்கப்பட்ட இயந்திர பிரயாண வண்டிதான் இவருக்கு உற்றதுணையாக விளங்குகின்றது. கடைகளுக்குச் சென்று பொருட்கள் வேண்டவோ றெஸ்ரோரண்டுகளுக்கு நண்பர்களோடு சென்று உணவு உண்மு குடித்துப் பேசி மகிழவோ இந்த வண்டிதான் இவருடன் உடனிருக்கிகின்றது. இவற்றைவிட பொது நூலகத்துக்குச் சென்று படிப்பதற்கு பல்கலைக்கழகம் சென்று விரிவுரைகளை கேட்பதற்கும் இவரால் முடிகின்றது. தற்கேபாதய காலத்திற்கு ஏற்ப கணனியையும் இலகுவாகக் கையாண்டு பிறரைப்போல் மகிழ்வாகவே இருக்கின்றார்.

பொது இடங்களுக்குக் கொண்டாட்டங்களுக்கு, விழாக்குளுக்கும் சென்றுவரும் இவர் கழிவறைகளுக்கும் சென்று தனது தேவைகளையும் சுலபமாகச் செய்துகொள்ளுகின்றார். வீட்டில் தான் உண்டு, குடித்த பாத்திரங்களை ஒன்று சேர்த்து பாத்திரங்கள் கழுவும் மெசினில் இட்டு கழுவிச் சுத்தம் செய்வார். இவற்றைவிட மாடிப்படிகளில் ஏறி இறங்குவதற்காக உள்ள உயர்த்தியில்கூட (Lift) பிறர் உதவி இல்லாமல் தானே சுயமாகச் செயற்பட்டு வாழ்கிறார் என்றால். இவர் ஒரு அரிய பிறப்புத்தானே. இந்த நாடுகள் இப்படிப்பட்டவர்களுக்கு எப்படிப்பட்ட உதவிகளைச் செய்து அவர்களையும் வாழவைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். பத்திரிகை யாளர்கள் இவரைக் கண்டு பேட்டி எடுத்தபோது “காவலர்கள் உதவியாளர்கள் எவரும் எனக்கில்லை நான் சந்தோஷமாக வாழ்கிறேன்” எனச்சிரித்த முகத்தடன் பேட்டியளித்திருக்கிறார் என்னும் போது அவரின் முயற்சி, தன்னம்பிக்கை, ஆர்வம், உறுதி யாவும் வெளிப்படுவது மகிழ்வுதான்.



இவற்றைப் பார்க்கும் போது நம் பிறந்த தேசத்தை ஒரு கணம் நோக்கினால் இப்படியான குறைபாடுடன் ஒருவர் பிறந்துவிட்டால் ஏன் அந்தக் குடும்பத்தவர்களாலேயே தள்ளி வைப்பதும் ஒதுக்கி வைப்பதும் சர்வசாதாரணம். சமூகத்தாலும் அரசாங்கத்தாலும் கைவிடப்பட்ட எத்தனை ஆயிரம் பேர் வீதிகளிலும் கோவில்களிலும் கிடந்து பிச்சை எடுத்து வாழ்கிறார்கள். ஆதரவற்ரோராய், வீடில்லாதோராய், உண்டு உறங்க முடியாதோராய், சரியான பராமரிப்பு இல்லாதோராய் ஆக்கப்பட்டு அவர்கள் வாழ்வு குறை வயதிலேயே முடிந்து விடுகின்றது. நமது நாட்டில் கடந்த 30 வருடங்களுக்குமெல் இடம்பெற்ற கொடிய போரின் வடுக்கள் இப்படிப்பட்ட ஊனமானவர்களையும் விட்டுச் சென்றுள்ளது. கால், கை, போன்ற அவையங்களை இழந்தவர்கள், குருடு, செவிடானவர்கள். முடமானவர்கள் எனவும் பிறப்பிலேயே அங்கவீனர்களாகப் பிறந்தவர்களும் எனப் பல லட்சம்பேர் காணப்படுகிறார்கள். இவர்களின் வாழ்வாதாரத்திற்கு அரசு சில உதவிகளைச் செய்துவந்தாலும் அவர்களின் வாழ்வு போராட்டம் நிறைந்ததாகவே இருந்துவருகின்றது.ஆகவே இப்படிப்பட்டவர்கள்மீது நாம் கருணை காட்டவேண்டும். புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்கள் மனம் வைத்தால் முடியாதவை ஒன்றுமில்லை.





# கால இயந்திரம்

கால இயந்திரம் இப்போது பின்னோக்கி நகர்கின்றது, இப்போது 1840 ஆம் ஆண்டிற்குச் செல்வோம். 1990 இல் வாழ்ந்த குழந்தைகளுக்கும், அந்த கால கட்டத்தில் Discovery பார்த்த குழந்தைகளுக்கும் இந்த வார்த்தைப் பிரயோகங்கள் நன்றாகவே பிரசித்தமானவை.

கால இயந்திரம் என்றால் என்ன என்றே புரியாத பலர் இன்றும் உள்ளனர். கால இயந்திரம் என்றால் Time Machine. கற்பனையில் மட்டும் உலாவிக் கொண்டிருந்த இந்த கால இயந்திரம் (Time Machine) கற்பனையின் நிழலாகிய திரைப்படங்களிலும் உலாவத் தொடங்கியது. வெளிநாட்டுப் படங்களில் மட்டும் உலாவிக் கொண்டிருந்த இந்த கால இயந்திரம் (Time Machine) இன்று பல தமிழ் படங்களில் இறங்கி தமிழர்கள் சிந்தனையிலும் குதித்துள்ளது. இதன் விம்பமாக தென் இந்திய தமிழ் நடிகர் சூரியாவின் புதிய படமாகிய 24 என்ற படத்தின் மூலம் பெரிதாகப் பேசப்படுகின்றது இந்தக் கால இயந்திரம் (Time Machine).

கால இயந்திரம் (Time Machine) என்றால் என்ன? இதுவும் ஒரு வகை எதிர்வு கூறல் தான். ஆனால் எதிர்வு கூறலின் அடுத்த நிலை. எதிர்வு கூறல் என்றால் என்ன எதிர் காலத்தில் நடப்பதை எண்ண அலைகளின் ஆற்றலால் முன் கூட்டியே ஊகித்துச் சொல்லுதல். கால இயந்தரம் என்றால் அந்த எதிர் காலத்திற்கே சென்று அங்கு நடப்பதைக் கண்காணித்தல்.

கணித மேதை ஐன்ஸ்டின் கூறுகையில் ஒளியை விட வேகமாகப் பயணித்தால் ஒரு வேளையில் எதிர் காலத்திற்கே பயணிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார். இதை எண்ணக் கருவாகக் கொண்ட எமது கலைப் படைப்பாளர்கள் இந்த கால இயந்திரம் என்ற கட்டுக் கதையை ஆரம்பித்தனர். விஞ்ஞானம் என்பது அனைத்துமே நிகழ்ந்து முடியும் வரை கட்டுக் கதை தான் எப்போது அதை பயிற்சித்து முடிவு கிடைக்கின்றதோ அன்று தான் அங்கீகரிக்கப்படும். அந்த வகையில்ப் பார்த்தால் கால இயந்திரமும் ஒருவகை கட்டுக் கதை தான். இந்த கால இயந்திரம் என்ற கதையில் சுவாரஸ்யமான விடையம் என்ன என்று பார்த்தால், இதைக் கொண்டு எதிர் காலம் மட்டும் அல்ல இறந்த காலத்திற்கும் பயணிக்கலாம். அவ்வாறு பயணித்து நாம் செய்த தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம்.

நிகழவே முடியாது என்ற பல கற்பனைகள் தான் எதிர்கால தொழில் நுட்பத்திற்கு தீனியாக அமைகின்றது. ஆகவே விஞ்ஞானத்தை ஆராயும் ஆராய்ச்சியாளர்களுக்கு இந்த கற்பனைக் கதைகள் எல்லாம் புதிய சிந்தனைகளைக் கொடுக்கும். நீங்களும் ஒரு விஞ்ஞானி ஆக ஆசையா? இதோ உங்களுக்கான பாதை இது தான். இந்த கால இயந்திரம் பற்றிய ஒரு சில நுணுக்கமான சிந்தனைகளைப் பகிரவுள்ளேன்.

என் சிற்றறிவிற்கு எட்டியபடி இறந்தகாலத்தை மாற்ற முடியுமா என்றால் அதற்கான ஆற்றல் இதுவரை தோன்றவில்லை என்பேன். ஆனால் எதிர்காலத்திற்குப் பயணிக்காலாமா?! என்றால் 100 விழுக்காடு முழுமையாக எதிர்காலத்திற்குள் செல்லாவிட்டாலும் குறைந்தது ஒரு 59 விழுக்காடு எதிர்காலத்திற்குள் செல்வதற்க்குச் சாத்தியம் உண்டு அதுமட்டும் அன்றி அந்த எதிர் காலத்தை மாற்றிக் கூட அமைக்கலாம். இன்றைய தினத்தில் விண்வெளியில் இருந்து விண்கலங்கள் மூலம் பூமியை கண்காணித்துக் கொண்டுள்ளனர் மனிதர்கள். அதுமட்டும் அன்றி இருந்த இடத்தில் இருந்தே பல்லாயிரம் km தூரத்தில் உள்ள நாடுகளின் வீதியில் இறங்கி நடந்தால் எப்படி இருக்கும் என்று பார்க்கும் வண்ணம் ஸுவசநநவ ஏநைற என்று பல தொழில் நுட்பம் வந்து விட்டன.

உதாரணமாக கடந்தமாதம் இலங்கையும் அந்த வரிசையில் வந்துள்ளது, இப்போது இலங்கையைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றால் இலங்கைக்குச் சென்று தான் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை Google Mapஇல் போனால் Street View என்ற வாய்ப்பின் மூலம் தெருவில் இறங்கிப் பார்ப்பது போன்று அழகான இலங்கையைப் பார்க்க முடியும். ஆனால் அந்த படங்கள் எல்லாம் ஏதோ ஒரு நாளில் எடுக்கப்பட்ட புகைப் படங்களே ஆகும். அந்தப் புகைப்படங்களிற்குப் பதிலாக நேரடியாகப் பார்க்கக் கூடிய ஏனைநழ வசதி வந்தால் அந்த வசதியைப் பயன் படுத்தி கணணி மூலம் ஒரு Program எழுத வேண்டும். எமது வாழ்வில் நமக்கு நடக்கும் நன்மை தீமை அனைத்திற்கும் காலமே காரணம் என்று எம் முன்னோர்கள் கூறியது நீங்கள் அறிந்ததே.




அந்தக் காலத்தைக் கணிக்கும் வண்ணம் Program எழுத வேண்டும். அதற்கு உதவியாக நேரடியாகப் பூமியைக் கண்காணித்து ஏனைநழ வடிவில் வரும் அந்த Video க்களைப் பயன்படுத்தி கணனியின் Program மூலம் நாம் அடுத்த கணத்தில் செய்ய உள்ள காரியத்தைச் செய்தால் அதற்கான பிரதி பலிப்பு எப்படி இருக்கும் என்பதைக் கணிக்க முடியும்.

நாம் செய்யும் காரியத்தை எந்தக் கணத்தில் ஆரம்பித்தால் அதற்கான அதிர்ஷ்டம் அதிகமாக இருக்கும், கால நேரம் இசைந்து வரும் என்பதைக் கணிக்க முடியும்.
இருப்பினும் இவை அனைத்தும் 100 விழுக்காடு உண்மையாக இருக்க வாய்ப்பில்லை ஏன் என்றால், வண்ணத்துப் பூச்சியின் சிறகடிப்பில் கூட பூமி யில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று கூறுவார்கள் சீனர்கள். அதனால் நுணுக்கமாக எதிர்காலத்தைக் கணிப்பது மிகவும் கடினம். ஆனால் 59 விழுக்காடு கணித்துவிடலாம் என்பது ஒரு வெற்றிச் செய்தியே ஆகும்.

அதி புத்திசாலி விஞ்ஞானி கூட இதுவரை அதிகமாக தன் மூளையின் ஆற்றலில் 19 விழுக்காட்டையே பயன் படுத்தி உள்ளான். ஆகவே மிகுதி யையும் பயன் படுத்தும் வண்ணம் நாம் சிந்திக்கத் தொடங்கினால் கண்டிப்பாக எதிர்காலத்தில் எதிர்காலத்தை கண்காணிக்கும் கருவியைக் கண்டு பிடிக்க கண்டிப்பாக வாய்ப்புக்கள் உண்டு.

அறிவாளியாகப் பிறப்பவர் யாரும் இல்லை
பிறந்ததும் அறிவாளி ஆவதும் இல்லை
அறிவாளியாக வளராதுவிடின்
அடிமுட்டாளாக இறந்துவிடுவோம்.

ஆக்கம் DJ **வினோ** Borken



Akchaya Digital Photography& Decoration

*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*

உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும்
மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி
குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும்
ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474









# நினைவலைகள்




குணா,ஸ்ரீ,சிவதாசன் தோன்றும் ஒரு காட்சி

## இலட்சியவேட்கை!1967



கடந்த 09.04.2016 சனிக்கிழமை யோ்மனியில் வானதி நா்த்தனாலயத்தின் 30 வது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் நா்தனாலயத்தின் ஆரம்பகால வளா்ச்சியில் பெரும் பங்குகொண்ட திரு.க.சிவதாசன் அவா்கள் சிறப்பு, விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினா். அவா் ஒரு தலைசிறந்த நாடக நடிகா்.

தற்போது அவா் கனடாவில் வசித்தாலும், பலகாலம் யோ்மனியில் டோட்மூண்ட் நகரில் வசித்தவா் அந்தக் காலகட்டத்தில் பல நாடகங்களைத் தயாரித்து மேடைஏற்றியவா். அவரது கலைத்தாகத்தை யோ்மன் தமிழ் மக்கள் நன்கு அறிவா்.

### யோ்மனி-வானதி நா்த்தனாலய 30 வது ஆண்டு விழாவில் திரு.க.சிவதாசன்

அவா் தாயகத்தில் 1967 இல் இற்றைக்கு 49 வருடங்களுக்கு முன் தயாரித்து நெறிப்படுத்திய இலட்சிய வேட்கை என்னும் சரித்திர நாடகம் இன்றும் மக்கள் மத்தியில் செல்வாக்குடன் இருக்கிறது என்றால் அப்படைப்பின் திறன் எக்காலத்திற்கும் பொருந்தும்படியான கதை அமைப்பைக் கொண்டது என்பதே உண்மை.

அந்த சரித்திர நாடகத்தை எழுதியவா் சாகித்தயமண்டல பரிசைப் பெற்ற அமரா் மு.திருநாவுக்கரசு அவா்கள்.

யோ்மனியில் நடபெற்ற மேற்படி ஆண்டு விழாவில், நாடகத் தந்தை திரு க.சிவதாசன் அவா்கள் தான் பல வருடங்களுக்கு முன் இயக்கி நடித்த, நாடகத்தில் இருந்து ஒரு பகுதியை தனி நடிப்பாக மேடையில் நடித்துக்காட்டி சபையோரின் மிகுந்த கரகோஷத்தைப் பெற்றாா். இன்றும் கனடாவில் அவரது கலைப்பணி தொடா்வது மகிச்சிக்குரியது. இலட்சியவேட்கை பல மேடைகளைக் கண்டது. 1977 ஆம் ஆண்டு எடுத்த ஒரு படத்தினை இங்கு நினைவலை களாகத் தருகின்றோம்.

## உள்ளே அப்படி



## என்னதான் உள்ளது!

கடந்த மாதம் சிவனொளிபாத மலை யாத்திரிகா்கள் அதிகளவில் வருகை தரும் நிலையில் ஹட்டன் - நல்லதண்ணி நகரிலுள்ள உணவகமொன்று, அதிக விலையில் உணவு மற்றும் ஏனைய சிற்றுண்டி பொருட்களை விற்பனை செய்வதாக சிவனொளிபாதமலைக்குச் சென்றுவரும் யாத்திரிகா்கள் கவலை தெரிவித்தனா்.
மேற்படி உணவகத்தில், மரக்கறிகள் அடங்கிய உணவு பொதி (சோறு) நான்கு வாங்கியதற்காக ரூபா 1,000 அறவிட்டப்பட்டதாகவும். மரக்கறி சோற்றுப் பொதியின் விலை ரூபா 100 எனும் வகையில் நான்கு பொதிக்காக ரூபா 400 ஐயே அறவிட்டிருக்க வேண்டிய நிலையில், ரூபா 1,000 அறவிடப்பட்டதாக பாதிப்படைந்த யாத்திரிகா்கள் தெரிவித்துள்ளனா். மேற்படி உணவகத்தின் உரிமையாளா் அதிக விலைக்கு உணவை விற்பனை செய்ததற்காக பல முறை நீதிமன்றத்துக்குச் சென்று வந்துள்ளதாகவும் ஆனாலும், அவா் தொடா்ந்தும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனா்.

## அடுப்படி 17

### ரவை கரற் கேக்

**தேவையான பொருட்கள்**

ரவை 250. கிறாம்
சீனி 250 கிறாம்
அல்மண்ட் (Almond) 2 மே.க chopped
ஏலக்காய் பொடி 1/4 தே.க
தேங்காய்ப் பூ 3 மே.க
கரற் துருவியது 150 கிறாம்
நெய், ரவை வறுப்பதற்கு தேவையான அளவு



**செய்யும் முறை**

ரவையை நெய் விட்டு வெண் பதமாக வறுத்து எடுக்கவும். ஒரு பாத்திரத்தில் கரற், சீனி,அல்மண்ட்,தேங்காய்ப் பூ, ஏலக்காய் பொடி இவைகளை நன்கு கலந்த பின், ரவையையும் சிறிது,சிறிதாக சேர்க்கவும்.
பின் கேக் பேக் பண்ணும் தட்டில் (tray) இல் நெய் தடவி கலந்த கலவையைப் பரவி, 20 நிமிடம் ஆவியில் (Steam) பண்ணவும். ஆறிய பின் விரும்பிய வடிவில் வெட்டி பரிமாறவும்.

புவனம் தர்மரட்ணம்

## 10ம் ஆண்டு நினைவு அஞ்சலி



திதி 18.04.2015

தோற்றம்
25.09-1942

மறைவு:
09.05.2006

திருமதி ஞானேஸ்வரி.சிவஞானசுந்தரம்

ஒன்பது ஆண்டுகள் சென்றாலும் தினம் உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல நீயில்லை! உன் நினைவால் வாடி வதங்குகின்றோம் இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள் இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன நினைவெல்லாம் நீயே தாயே! என்றும் உன்னை மறக்காமல் வாடும்

அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்.சு.சிவஞானசுந்தரம் யோ்மனி டோட்மூண்ட் Handy: 0176 69 366 433







Ram Mohan

Telefon: +49 2151 3259152-Fax: +49 2151 3259153- Mobil: +49 1726835790

15 வருட அனுபவம் மிக்க சேவையாளர்

உங்கள் ஆசையை
நிறைவு செய்ய
இதுவே தருணம்
விரையுங்கள்

Büro für Deutsche Vermögensberatung
Ram Mohan
Westwall 117
47798 Krefeld

Ram.Mohan@dvag.de
www.dvag.de/Ram.Mohan






# பூக்களின் பூபாளம்

### 70 இலட்சம் ரியூலிப் பூக்களைக் (Tulips) கொண்ட உலகில் மிக அழகான நந்தவனம்.

நெதர்லாந்து நாடு பூக்களுக்குப் பெயர் பெற்ற நாடு. அந்நாட்டு மக்களும் பூப்போன்றே புன்னகையை உதிர்பவர்கள். கடந்த மாதம் 15ம் திகதி ரீயூலிப்பூக்களின் நந்தவனத்திற்குச் செல்லும் வாய்புக் கிடைத்தது. இந்த நந்தவனம் வருடத்தில் 2 மாதங்கள் மட்டுமே பார்க்கக்கூடியதாக இருக்கும். பார்த்துவிட்டால் அதன் வாசம் வருடம் எல்லாம் மனதை நிறைக்கும். வீட்டில் இணர்டு பூமரத்தையே ஒழுங்காகப் பேணமுடியாத எமக்கு, அங்கு ஆயிரம் ஆயிரம் மலர்களை எப்படி பேணி அழகுறவைத்திருக்கிறார்கள் என்பது வியப்பாகவே இருந்தது.

பல லட்சம் பூக்கள், பல ஆயிரம் மக்கள், ஒவ்வொருவரது கையிலும் ஒரு செல்பி தடி. எல்லோருமே கலைஞர்கள்தான் என்பதை உலகம் ஏற்றுக்கொள்ளும் காலத்தில் வாழ்கின்றோம். ஒவ்வொரு பூக்களுக்கு முன்னாலும் பல பூக்கள் செல்பி எடுத்தபடி இருந்தனர். காதலன் காதலி, கணவன் மனைவி, அப்பா பிள்ளை. அம்மா பிள்ளை. அக்கா தங்கச்சி. அண்ணன் தம்பி இப்படி பல உறவுகள் போட்டி போட்டுக்கொண்டு பூக்களுக்கு முன்னால் பூத்தன.

நந்தவனத்தில் இருந்து கொண்டே நேரடி ஒளிபரப்பு உலகம் எங்கும் நடந்தது. பூக்கள் அழகு, அதனை வரிசைப்படுத்திய முறை மேலும் அழகு. பூவுக்கும் பெண்ணுக்கும் நமது நாட்டில் மட்டுமல்ல அங்கும் நிறையவே தொடர்புகள் இருந்ததைக் காண முடிந்தது.

### மே மாதமும் செல்லலாம்



## Heukenhof Holland

பெண்களுக்கு பூவால் ஆடை அணிந்தம். பூக்களுக்கு முன்னால் புன்னகைத்தபடி பூக்களாகப் பெண்களும், காட்சி தந்தனர். அதனால்தான் என்னவோ! பல ஆண்டுகளுக்கு முன் நெதர்லாந் ஒருவகைப் பூவிற்கு உலகழகி ஐஸ்வர்யராவின் பெயரைச் சூட்டிக் கொண்டது.

என்னதான் காட்சிகளை ஐ போனும் சம்சுங்கும் விரட்டி விரட்டி எடுத்தாலும். அந்த அழிகிய பூக்களின் வனப்பை முகர்ந்து தழுவி, தீண்டித் தீண்டி சுகமாக ஓவியமாக தீட்டும் இன்பமே தனியானது.

ஒரு வயதான தம்பதிகள் ஓர் இடத்தில் அமர்ந்து எந்த செல்பிப் பிள்ளையின் உதவியும், இன்றி இருவரும் ஒரு காகிதத்தில் தம்முன்னே விரிந்து படர்ந்து இருக்கும் கொள்ளை அழகை, படமாக வரைந்த வண்ணம் இருந்தனர்.

இயற்கையை, இயற்கையாக, இயல்பாக, வரையும் அந்த தம்பதிகளின் உள்ளம் மலர்போல் பூத்துக்குலுங்கியது. அகத்தின் அழகு பூக்களாகத் தெரிந்தது. அவர்களிடம் ஒரு படம் எடுக்கலாமா என்று கேட்டபோது, அவர்கள் புன்னகையுடன் சம்மதித்தனர். பின்னர் கதைத்தனர். தாம் இங்கிலாந்து நாட்டில் இருந்து வந்தாகச் சொல்லி, எம்மை இந்தியாவா? எனக் கேட்டனர். நாம் இல்லை! இலங்கை என்றோம்.





உடனே அட அது எவ்வளவு அழகான நாடு. மலைகள், அருவிகள், கடல், என அனைத்தும் அழகுற இருக்கும் அற்புத நாடு என்றார்கள். உங்களுக்கு இலங்கை தெரியுமா என்றோம். நாம் அங்கு இரண்டு வருடங்கள் மருத்துவராக வேலை செய்தோம் என்றனர். முதுமையில் எப்படி எல்லாம் வாழலாம், என்ப தனை எமக்கு படம் போட்டுக்காட்டியது அவர்களது செயல்கள்.

காலை வேளை குருவிகளது கானம் ஒரு புறம், மறுபுறம் பூக்களின் வாசம். இவை பூக்கள் பாடும் பூபாளமாக இருந்தது. இலங்கையில் பேரதனையில் ஒரு பூங்கா! அருகே அருவி பாய்கிறது மூங்கில் மரங்கள் ஓங்கி நிற்கின்றன. ஆனால் பூக்களை பூங்காவனத்தில் பெரிதாகக் காணோம். அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாக இடம் பெயர்ந்த தமிழர்கள் போல் பேராதனைப் பூங்காவும் உள்ளது. **ஆக்கம்:மல்லிகை**









**லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!**

## Rising Sun Hotel & Restaurant

**அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.**
**இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு**

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available
to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K

Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு

# கல்விப்பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் வட மாகாணம் பின்நிலையில்! அதிபர்கள், ஆசிரியர்களே பொறுப்பு என குற்றம் சுமத்துவதை ஏற்க முடியாது.

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.



கல்விப்பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையில் 2014ஆம் ஆண்டும், 2015ஆம் ஆண்டும் வடக்கு மாகாணம் பின்னலைக்குச் சென்றமைக்கு அதிபர்கள், ஆசிரியர்களே பொறுப்பு என குற்றம் சுமத்துவதை ஏற்க முடியாது. அதனை நாம் வன்மையாக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு அறிக்கை வெளியிட்டுள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.
சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,முன்னைய காலத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஒருவரின் தலைமையில் வட்டாரக்கல்வி அதிகாரிகளின் மேற்பார்வையில் வடக்கு மாகாணம் கல்வியில் மேலோங்கி இருந்ததனை எவரும் மறுக்க முடியாது.

அப்போது வடகிழக்கு மாகாணம் இணைந்திருந்து அந்த இணைந்த மாகாணத்தின் வெற்றிகளை வடக்கு மாகாணம் பாதுகாத்து வந்தமையை எவரும் மறந்துவிட முடியாது.

அதன் பின்னர் நிர்வாக பரவலாக்கம் தொடங்கி பல நூறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பல எலிகள் சேர்ந்து புற்றொடுத்த கதையாக இன்று வடக்கு மாகாணத்தின் நிலை கவலைக்கிடமாக மாறியுள்ளது.


இந்த தோல்விக்கு எல்லோரும் வாய்க்கு வந்தபடி அதிபர்களையும், ஆசிரியர்களையும் குறைசொல்லி தப்பிக்க நினைப்பது. எல்லோரையும் முட்டாள்களாக்கும் செயற்பாடு மட்டுமன்றி மக்கள் மத்தியில் அதிபர்கள், ஆசிரியர்களுக்கு அபகீர்தியை ஏற்படுத்தும் செயற்பாடு என சங்கம் கடிந்துள்ளது.

உதாரணமாக கிளிநொச்சி கல்வி வலயம் இலங்கையில் உள்ள கல்வி வலயங்களில் கடைசி இடத்தில் உள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதனை ஆராயாமல் அதிபர்கள், ஆசிரியர்களை குறைசொல்வது எவ்வகையில் நியாயமானது.

2005ஆம் ஆண்டிற்குப் பின்னர் புதிய நியமனம் கிடைத்த வினைத்திறன் உள்ள அனைத்து ஆசிரியர்களும் கிளிநொச்சி வலயத்திற்கு நியமிக்கப்பட்டனர். இன்று வரை அந்த நடைமுறை தொடர்ந்த வண்ணமே உள்ளது. அவ்வாறிருக்க அக்கல்வி வலயம் கடைசி இடத்திற்குச் செல்வதற்கு என்ன காரணம் என்பதனை ஆராய்வதனை விட்டுவிட்டு வீண்பழி சுமத்துவதை பழிசுமத்துவோர் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தகைய தோல்விக்கான காரணங்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆதாரங்களுடன் ஆராய்ந்து வைத்துள்ளது. அவற்றை உரியவர்களிடம் கையளித்தும் உள்ளது. அதன்படி பரிகாரம் தேடுவதை விடுத்து பழிதீர்க்கும் படலத்தைக் கையில் எடுத்தால் கல்வியில் இன்னும் பின்னடைவு ஏற்படும் என சங்கம் எச்சரித்து நிற்கின்றது.
பின்னடைவிற்கான காரணங்களை ஒவ்வொன்றாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஊடகங்களுக்கு ஊடாக மக்களுக்கு வெளிப்படுத்தும் என்ற செய்தியையும் சங்கம் தெரிவித்துள்ளது.

**காரணங்கள் தேடுவதை இருபுறத்தாரும் விடுத்து, தமிழ் மாணவர்களது கல்வித்திறனை, மீண்டும் மீட்டெக்கும் பணியில் கவனம் செலுத்தவேண்டும் என்பதே மக்களின் அவா!**



# சுப்பர் சிங்கர் புகழ் எஸ். நிருஜன் (யேர்மனி) கனடாவில் கலக்கல்!







இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது ஜேர்மனி நாட்டில் ஒரு கர்நாடக இசைக்கலைஞரான தனது தந்தை செகசோதி மற்றும் தாயார் கௌரி ஆகியோருடன் வசித்து வருபவரும், அண்மையில் நடைபெற்ற விஜேய் தொலைக்காட்சியின் "சுப்பர் சிங்கர்" சிறந்த பாடகர் தேர்வுப் போட்டியில் இறுதித் தேர்வு வரையிலும் சென்று தனக்கென்று ஒரு இடத்தைப் பிடித்து, தற்போது உலகத் தமிழ் இசை ரசிகர்கள் அனைவரதும் மனங்களில் நிறைந்துள்ளவருமான எஸ். நிருஜன் அவர்கள் தற்போது இசைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு கனடா வந்துள்ளார்

அவரை இங்கு அழைத்தவர் பிரபல கர்நாடக சங்கீதக் கலைஞரும் சக்தி சங்கீத அக்கடமியின் ஸ்தாபகருமான திருமதி பராசக்தி விநாயகதேவராஜா அவர்களே! அவரது ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஸ்காபுறோ நகரில் 1120 டப்ஸ்கொட் வீதியில் அமைந்திருக்கும் ஒன்றாரியோ தமிழிசைக் கலாமன்றத்தின் புதிதான "தமிழ்க் கலை அரங்கத்தில்" ஒரு இன்னிசை விருந்து மிகவும் நேர்த்தியான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது.

திரு வி. என். மதியழகன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

சுப்பர் சிங்கர் புகழ் நிருஜன் கர்நாடக சங்கீதப் பாடல்களைப் பாட மிருதங்கத்தை திரு வாசுதேவன் இராஜலிங்கம், வயலின் திருமதி தனதேவி மித்ரதேவா, மற்றும் ஏனைய லய கருவிகளை மிருதங்க சேஸ்த்திரத்தில் பயின்று அரங்கேற்றம் கண்ட மிருதங்க சோதிகள் மூவர் ஆகியோர வாசித்தனர்.



கச்சேரி நடைபெற்று இடைவேளையின் போது நிருஜனை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.இன்னிசை வேந்தர் பொன் சுந்தரலிங்கம் பாடகர் நிருஜனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்க, அதனைத் தொடர்ந்து பல கௌரவங்கள் .இடம்பெற்றன.

சிறப்புரையாற்றிய ஒன்றாரியோ இசைக் கலாமன்றத்தின் தலைவர் திரு தம்பையா ஸ்ரீபதி நிருஜனைப் பாராட்டினார். தொடர்ந்து கனடிய அரசு சார்பான கௌரவம் இடம்பெற்றது. ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு ஆனோல்ட் சான் அவர்கள் அனுப்பிவைத்த பாராளுமன்றம் சார்பான கௌரவத்தை உதயன் பிரதம ஆசிரியர் திரு ஆ ர். என். லோகேந்திரலிங்கம் வாசிக்க வர்த்தகப் பிரமுகர் திரு லோகன் இராசையா வழங்கினார்.தொடர்ந்து கச்சேரி இடம்பெற்றது. அதில் பல சினிமாப் பாடல்களையும் இறுதியாக பாடி நிருஜன் சபையோரை மகிழ்வித்தார்.கனடா உதயன் செய்திப் பிரிவு




**நிதி சேகரிப்பு**

50 வார்த்தைகளுக்குள் ஒரு குறும் கதை


பாடசாலை சறிற்றிக்காக சொக்கிளேற் விற்க வேண்டும். பிரணவன் அயல் வீடுகளுக்குச் சென்றான். இரண்டு டொலர்களுடன் கவலையாக வந்தான். ஒருவரும் வாங்கவில்லை.

நாளை அடுத்த வீதிக்குச் செல்வோம் என்றார் அம்மா. மறுநாள் பிரணவன் பாடசாலை சென்றதும்இ தாயார் அடுத்த வீதிக்குச் சென்றார். மகனிடம் சொக்கிளேற் வாங்கும்படி அவர்களிடம் நாணயக்குற்றிகளைக் கொடுத்தார். பலர் காசை வாங்க மறுத்துஇ தாங்கள் மகனுக்கு உதவுவதாகச் சொன்னார்கள். மாலையில் எல்லாவற்றையும் விற்று மகிழ்ச்சியில் வந்தான் மகன்.



# Thushi -Deko

உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்..... Christal mandapa Set round Rada Krishna Stage and Raja Gopuram






Elephant Stage

Thushiyanthan. Thiruselvam



Tel:02305 - 85945 - 0176 608 108 13

---




Home: 02171 948036
Mob: 01786709612
01777076958

---

# திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
**45127 Essen**
Tel: 0201-652450

---

உங்கள் தாய் மொழியில்....

# HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: **0172 57 35 454**

**HK Hammacher**
Schleswiger Str .5
**44145 Dortmund**
**0231 81 55 94**
**0173 56 46 651**

MPU
ASF
ASP

இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

---




உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



**Thuvaragan Nesapalan**
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN

rmb³ ist Partner der Gothaer

---

# Kaneen Electronics

16 வது ஆண்டு நிறைவான சேவை

**Internet-sat, Receiver,Camera-Alam**
கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்

சகல **Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet,** பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்

**Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266**
**info@ kaneenelectronics.de**
**www.kaneenelectronics.de**

**Schevenhoferweg-24**
**42111 Wuppertal**

---

# Nirubagini Magendiran LL.M.

**Vereidigte Dolmetscherin und Übersetzerin**

**Tamil- Deutsch**
**Deutsch- Tamil**

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com

---

# Nimal HD

Film Style Cinematography
nimalvideo@gmail.com

Videography | Photography | Graphic Designing
Video Editing | Photo Album Making
3D Logo Creating | 3D Logo Annimation
Web Development | Add film | Visual fx
Event entertainment

தொடர்புகளுக்கு: கபிலன்
**Tel: 0152 33 83 29 55**
**01776 794 261**




உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் கலை விழாக்களை மனதோடு நிற்க ஒளிப்பதிவு செய்து தரப்படும்!

**45 நாட்களில் கிடைக்கும்!**

---

**உங்கள் புதிய விளம்பரங்களை ஒவ்வொரு மாதமும் 15ம் திகதிக்கு முன் தந்து பிரசுரிப்பதை உறுதிப்படுத்துங்கள்!**
**வெற்றிமணி**

---



# Rathy Jewellers Ltd

The Leading Jewellery store in London with the largest selections

அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!

28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063

எப்பொழுதும் நியாயவிலை
புத்தம் புதுநகைகள்!

Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm

**209 upper Tooting Road**
**Tooting SW17 7TG**
**0208682 2233**




# கிரகப் போர்

காசியரின் பேரன்

வீட்டுக்கு வெளியே பார்த்த சுந்தரி "யையோ.....யையோ.....யையோ" என முதல் எழுத்தான ஐ யை விட்டிட்டுச் சத்தம் போட்டுச் சொல்லுவதற்கான காரணம் உண்டு.
கணவன் சாமி உருளைக்கிழங்கு வாங்குவதற்கு போய் குறிப்பிட்ட கடையில் கிடைக்காமல் வேறு ஒரு கடைக்குப் போய் வாங்கிக் கொண்டு வந்தார். வீட்டு வாசல் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்து கொண்டே கடையின் பெயரைச் சொல்லி உருளைக்கிழங்கு அங்கு இல்லையென்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே"ஐயையோ.." என்று சுந்தரி சத்தம் போட,பரமசாமி "அதற்கு ஏன் சுடுதண்ணியை காலில ஊத்தின மாதிரி அபசகுணமாய் ஐயையோ என துள்ளுறாய் எனச் சொல்ல அன்றிலிருந்து "ஐ"யைச் சொல்லாமல் "யையோ" எனச் சொல்வதை நிறுத்திவிட்டாள்.
மனைவியின் "யையோ"சத்தத்தைக் கேட்டு யன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்த சாமி திகைத்துப் போய் நின்றார். வீட்டிலிருந்து ஐம்பது மீற்றர் தூரத்திலிருந்த மைதானத்தில் பலர் கூடிநின்று வானத்தை நோக்கி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.
சாமியும் யன்னலுக்கூடாக வானத்தை நோக்கிப் பார்த்தார். ஒரு பொதி போன்ற பொருள் கீழ்நோக்கி மெதுவாக வந்து கொண்டிருந்தது. என்னவாக இருக்கும்,சிலவேளை வேற்றுக் கிரகவாசிகளின் பறக்கும் தட்டாக இருக்குமோ என்ற எண்ணியவாறு பயத்துடன் அந்த இடத்தை நோக்கி நடந்தார் சாமி. சுந்தரி யன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

எதுவாக இருக்கும்,மைதானத்தில் கூடியிருந்தவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருந்தனர். பலர் இது வேற்றுக்கிரக வாசிகளின் பறக்கும் தட்டுத்தான் என்ற முடிவுடன் வேறு அவர்கள் எங்களைப் போல இருப்பார்களோ வேறு உருவத்தில் இருப்பார்களோ என்ற ஆவலுடன் காத்திருந்தனர். நேரஞ் செல்லச் செல்ல கூட்டம் அதிகமாகியது.நிலத்தை நோக்கி அந்த பொதி போன்ற உருவம் நெருங்க நெருங்க கூடியிருந்தவர்கள் மனதில் ஒரு பயமும் ஆவலும் தோன்றத் தொடங்கியது.
வேகமாக நிலத்தை நோக்கி வராமல் அந்தப் பொகாதி போன்ற உருவம் காற்றில் மிதந்து வருவதைப் போல மிதந்து வந்து நிலத்தைத் தொட்டது.

ஸ்ரீ நவதுர்க்காதேவி ஆலயம் வூப்பெற்றால்
14.05.2016 சனிக்கிழமை தேர்த் திருவிழா.
Sri Navathurgadevi Tempel e.V Wuppertal
Hünefeldstraße 63b, 42285 Wuppertal
Tel: 0202 4796017, E-Mail: info@thurga-wuppertal.de
Web: thurga-wuppertal.de

அடுத்து என்ன நடக்கப் போகின்றது என்பதை கண்ணிமைக்காமல் அந்தப் பொதியையே பார்த்துக் கொண்டிருந்தனர்.
ஊசி போட்டால் கேட்குமளவிற்கு பெரும் அமைதி. சில விநாடிகள் சென்றன. பொதியின் மேல்பகுதி மெதுவாகத் திறந்தது.யாருமே அருகில் செல்லத் தயங்கினர். ஆனால் பொதிக்குள் என்ன இருக்கின்றது என்பதை அறியும் ஆவலிலஇ ஒருவர் இருவர் என அருகில் செல்லத் தொடங்கினர்.
தங்களுக்கு வானத்திலிருந்து வந்த பொதியாலஇ ஆபத்து இல்லையென்பதை திடப்படுத்திக் கொண்ட கூட்டம் அந்தப் பொதியை சுற்றி நின்றது. திறந்த பகுதிக்கூடாக எட்டிப் பார்த்தனர். பார்த்தவர்களுக்கு வியப்பாக இருந்தது.
உள்ளே புகைப்படம் எடுத்ததன் பின்பு கணினியில் செருகி எடுத்த படங்களை கணினித் திரையில் பார்க்கக்கூடிய ஸ்பைகர் காட்கள், பென்றைவ்வகள், தொலைக்காட்சியில் சட்லைட் ஊடாக படங்களைப் பார்ப்பதற்குரிய காட்கள் என நிறைய இருந்தன.
அவற்றை எடுக்கவா விடவா என சுற்றிநின்றவர்கள் தயங்கினர். பரமசாமி தயக்கத்துடன் மற்றவர்களின் தோளிற்கு மேலால் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒருவர் துனிந்து ஸ்பைகர் காட், பென்றைவ், சட்லைட்காட்டை எடுத்தார். எல்லோரும் எடுத்தவரைப் பார்த்தார்கள் அவருக்கு ஒன்றும் நடக்கவில்லை என்பதைக் கண்டதும் ஒருவர் இருவர் என எல்லோரும் எடுக்கத் தொடங்கினார்கள்.

இதற்கிடையில் வானத்திலிருந்து பொதி ஒன்று நிலத்தில் விழுந்துவிட்டது என்ற செய்தி காவல்துறைக்கு எட்ட காவல்துறையும் வந்ததுவிட்டது. திருவிழாவில் சுண்டலை கைநிறைய அள்ளுவது போல ஒவ்வொருவரும் பொதிக்குள் இருந்ததை அள்ளிக் கொண்டு மெதுவாக விலகினார்கள். சாமியும் கைகொள்ளுமளவிற்கு அள்ளி எடுத்தார்.
காவல்துறையினர் இப்பொதி எப்படி வானத்திலிருந்து வந்ததை அங்கிருந்தவர்களிடம் விசாரித்தறிந்துவிட்டு பொதியை தமது வாகனத்தில் ஏற்றினர். வாகனத்திலிருந்த காவல்துறையினர் பொதியிலிருந்து ஸ்பைகர் காட், பென் றைவ், சட்லைட் காட் போன்வற்றை அள்ளி காற்சட்டைப் பைக்குள் நிரப்பினர்.கைகளால் அள்ளி எடுத்த மக்களும் காவல் துறையினரும் அல்லோலகல்லோலப்படப் போகின்றனர் என்பதை அவர்கள் அப்பொழுது உணரவில்லை.
கைநிறைய ஸ்பைகர்காட், சட்லைட்காட், பென்றைவ் அள்ளிக் கொண்டு கூட்டம் மெல்ல மெல்லக் கலையத் தொடங்கியது. சாமியின் அவற்றை கைநியை அள்ளிக் கொண்டு வீட்டுக்கு வந்து மேசையில் வைத்தார்.

சுந்தரி அதைப் பார்த்து "இவை என்ன " என்று கேட்க அவர் விளங்கப்படுத்தினார். அதற்கு சுந்தரி "இவற்றைப் பாவிக்கத்தான் " கமராவும் இல்லை சட்லைட் தொலைக்காட்சியுமில்லையே என்று குத்திக்காட்டி மனசுக்குள் பேசுவதாக நினைத்துக் கொண்டு வாய்க்குள்"இந்த மனுசனை கட்டின நேரம் எருமையைக் கட்டியிருக்கலாம் என முணுமுணுக்கஈ அது சாமியின் காதில் விழ "இப்ப எருமை" என்று என் காதில் விழுந்துதே யாரைச் சொன்னனி" என்று கேட்க, தான் அப்படிச் சொல்லவில்லையென்று சுந்தரி முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைத்தாள்.சாமியின் வீட்டில் தொலைபேசி இணைப்புமில்லை,கைத்தொலைபேசியுமில்லை, தொலைக்காட்சிப் பெட்டியுமில்லை. இது மனைவி சுந்தரிக்கு பெரமு கவலையைத் தந்தது. இருந்தாலும் சாமி அவற்றை வாங்குவதில்லை என்று பிடிவாதமாக இருந்தார்.
வானத்திலிருந்து மெதுவாக இறங்கிய பொத பற்றிய செய்தி காற்றுப் போல ஊருக்குள் பரவிவிட்டது. மைதானத்திற்கு வந்து கைநிறைய அள்ளிச் செல்லாதவர்களுக்கு பெரிய கவலை,சந்தர்பத்தை தவற விட்டிட்டோமேயென்று.சிலர் தமக்குத் தெரிந்தவர்களிடம் வந்து மேலதிகமாக ஸ்பைர் காட், சட்லைட் காட், பென்றைவ் இருந்தவர்களிடம் வாங்கிச் சென்றார்கள்.
வாங்கிச் சென்றவர்களுக்கு தெரியவில்லை ஆப்பிழுத்த குரங்காகப் போகிறோம் எனத் தெரியவில்லை. சுந்தரியைச் சமாதானப்படுத்திய சாமி அவளை அழைத்துக் கொண்டு நண்பரின் வீட்டுக்குப் போகிறார்.
நண்பரின் வீட்டுக்குள் நுழைந்த இருவரும் அங்கு நடந்து கொண்டிருந்த களோபரத்தைப் பார்த்து திகைத்துக் கொண்டிருந்தனர். தொலைக்காட்சியில் தெரிந்த காட்சி அவர்களிருவரையும் வியப்படைய வைத்தது.
(தொடரும்)

Duisburg & Oberhausen நகரங்களில்...
VTM MiniMarkt und Kiosk

துரித பணமாற்றுச் சேவை!
உலருணவுப் பொருட்கள் கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்
இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகஙளுக்கும் அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள் NSB,BOC,HNB போன்ற வங்கிகளில் நேரடியாகவும் மற்றும் அனைத்து வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.


Mo-Sa:10.00 -20.00
Son:14.00-20.00
Neudorferstr 173
47057 Duisburg
Tel 0203/98418781
inh:Pon.Vijayakumar
E.mail :- vtm2012@hotmail.de




















## யேர்மனி –வாணி நர்த்தனாலயத்தின் 30வது ஆண்டு நிறைவு விழா

வாணி நர்த்தனாலயத்தின் 30 தாவது ஆண்டு நிறைவு விழாவும் திருமதி.வானதி தேசிங்குராஜத அவர்களின் "என் நோக்கில் பரதம்" என்ற நூல் அறிமுக விழாவும்.கடந்த 09.04.16 அன்று திருமதி.வானதி தேசிங்குராஜா அவர்களின் வாணி நர்த்தனாலயத்தின் 30தாவது ஆண்டு விழாவும் அவரால் எழுதப்பட்ட "என் நோக்கில் பரதம்" என்ற தமிழ் ஆங்கில நூலகள் வெளியீடும் இடம்பெற்றது.

இவ்விழாவிற்கு வெற்றிமணி ஆசிரியர்,ஓவியக்கலைவேள் கலாநிதி. மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றி சிறப்புச் சேர்ந்திருந்தார்.

கனடாவிலிருந்து வருகை தந்த நாடகவியலாளரும் அமெச்சூர் நாடக வட்டத்தின் அதிபருமான திரு.சிவதாசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியதுடன் தனது இலட்சிய வேட்கை நாடகத்தின் ஒரு பகுதியின் நாடக வசனத்தை மேடையில் பேசி சபையோரின் பலத்த வரவேற்பை பெற்றார். இவ்விழாவை பூசையடன் ஆரம்பித்து வைத்த டோட்முண்ட் சிவன் கோவிலின் பிரதம குருவான தேவேந்திரக் குருக்கள் அவர்களின் ஆசீர்வாத வாழ்த்துரையும் இடம்பெற்றது.

இத்தாலியிலிருந்து வருகை தந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு.ஜேசுதாசன் அவர்களும், பிரபல அறிவிப்பாளர் திரு.லோ.வலன்ரைன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி சிறப்புச் சேர்ந்தனர். நான்கரை ஐந்து வருடங்களாக கடுமையான உழைப்பின் ஊடாக பரதம் சம்பந்தப்பட்ட தேடல்கள் மூலம் எழுதப்பட்ட " என் நோக்கில் பரதம்" என்ற தமிழ் ஆங்கில நூல்களை மண்டப வாசலிலிருந்து இரு மாணவிகள் இரு தீபங்களை முன்னே ஏந்தி வர, இரு மாணவிகள் நூல்களை தட்ட மொன்றில் வைத்து இருபறமும் பிடித் தவாறு மெதுவாக நடந்து வர தவில் நாதஸ்வர இசை பின்னனியில் ஒலிக்க நூல்கள் இரண் டினையும் மேடைக்கு எடுத்து வந்து அதற்குரிய மரியாதையுடன் ஏலையா திரு.க.முருகதாசன் அவர்களால் வெளியீடு செய்யப்பட்டு வெளியீட்டு ரையும் நிகழ்த்தப்பட்டது.

இந்நூல் கடந்த வருடம் கனடாவில் சிறப்பாக வெளியிடப் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

வாணி நர்த்தனாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளுடன், இசைக்கு ழுவினரின் இசை நிகழ்ச்சியும் சிறப்பாக இடம்பெற்றது.

அறிவிப்பாளர் சகநாயகன் திரு.சக்தி வேல் அவர்கள் முழு விழா வினையும் நேர்த்தியாக நெறிப்படுத்தி அறிவிப்புச் செய்து ஒழுங்குபடுத்தியிருந்தார்.





வானதி நர்த்தனாலய அதிபர்
கலாநிதி
திருமதி வானதி தேசிங்குராஜா





# 6 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

உயிர் நீங்கிய பின் யாரும் கூட வாரார் என்பதைக் கூறும் பாடல் எண் 155

"மதுஊர் குழலியும் மாடும் மனையும்
இதுஊர் ஒழிய இதணமது ஏறிப்
பொதுஊர் புறம்சுடு காடது நோக்கி
மதுஊர் வாங்கியே வைத்தகன் றார்களே."

இப்பாடலின் பொருள் "தேன் ஊறும் மலர்கள் சூடிய கூந்தலுடைய மனைவியும்இ மக்களும் செல்வமும் வீடும் என்று இருந்த இந்த ஊராகிய உடலில் இருந்து உயிர் போய்விடஇ இறந்த உடலை பாடையில் ஏற்றி ஊருக்கு வெளியே பொதுவாக உள்ள சுடுகாட்டை நோக்கிச் சென்று துன்ப மயக்கத்துடனேஇ பாடையிலிருந்து உடலை எடுத்துச் சிதையில் வைத்துத் தீ மூட்டிச் சென்றுவிட்டார்கள்" என்பதாகும்.



இதே கருத்தைக் கூறும் பாடல் எண் 145
"ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம்என்று பேரிட்டுச்
சூரைஅம் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு அழிந்தார்களே."

இப்பாடலின் பொருள் "ஊரில் உள்ள மக்கள் எல்லாம் ஒன்று கூடி ஒப்பாரி வைத்து ஓலமிட்டு அழுது புலம்பி இறந்தவரின் பெயரைக்கூடச் சொல்லாமல் பிணம் என்று சொல்லி சுடுகாட்டில் கொண்டுபோய் வைத்து எரித்துவிட்டு நீரில் முழுகிவிட்டுஇ இறந்தவரைப்பற்றிய நினைவையும் அடியோடு மறந்துவிடுகின்றனரே. என்ன மனிதர்கள் ! என்ன வாழ்க்கை !." என்பதாகும்.

இப்பாடலில் இறந்தவரின் நினைப்பை மறந்துவிடுகின்றனரே என்னும் பொருளில் மறைந்திருக்கும் இவனுக்கு இன்று, நாளை நமக்கு என்பதை மறந்துவிடுகின்றனர் என்ற கருத்தும் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.
கூடவருவது பாவ புண்ணியமே எனக் கூறும் பாடல் எண் 144

"பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே."

இப்பாடலின் பொருள் "நல்வினைஇ தீவினைகளை நுகர்வதற்கென்றே பெற்ற உடல் விழுந்துவிட்டால் (இறந்துவிட்டால்) உயிருடன் இருக்கும் போது அவ்வுடலால் பயனடைந்த மனைவி மக்கள் அந்த உயிர் போன வழியே போகமாட்டார்கள். (இறக்கமாட்டார்கள்) ஆனால் அந்த உயிர் வாழும்போது செய்த நல்லறம்இ மேற்கொண்ட ஒழுக்கம்இ புண்ணியச் செயல்கள் அந்த உயிருக்குத் துணையாகச் செல்லும். மற்ற எதுவும் கூட வராது." என்பதாகும்.

அடுத்த பிறவி எடுக்காமல் இப்பிறவியிலேயே இறைவனின் திருவடியைச் சேரும் வழியைத் தேடுங்கள் எனக்கூறும் பாடல் எண் 2106

"இக்காயம் நீங்கி இனி ஒரு காயக்கில்
புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத்து இவ்வுடல் வந்தெமக்கு ஆனதுஎன்று
அக்காலம்உன்ன அருள் பெறலாமே."

இப்பாடலின் பொருள் "இந்த உடம்பு மரணமடைந்தவுடன்இ இன்னும் ஒரு உடம்பில் சென்று புகுந்து மற்றொரு பிறவி எடுக்காமல் பேரின்பம் அடையச் செய்யும் வழியைப் பாருங்கள். இந்த உடம்பு இந்தப் பிறவியைப் பெற்றதற்கான காரணத்தை எண்ணிப் பார்த்தால் வினைப்பயனே பிறவித்துயருக்குக் காரணம் என்பதை உணர்ந்து தீவினைகளை விலக்கி வாழ்ந்து இறையருள் பெறலாம்." "

உடம்பு தீட்டு இல்லை எனக் கூறும் பாடல் எண் 2551
"ஆசூசம் ஆசூசம் என்பர் அறிவிலார்
ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிகிலார்
ஆசூசம் ஆம்இடம் ஆரும் அறிந்தபின்
ஆசூசம் மானிடம் ஆசூசம் ஆகுமே."

இப்பாடலின் பொருள் "தீட்டுஇ தீட்டு என்று பிறரைத் தீண்டுவதைக் கூடத் தீட்டென்று பேசுபவர்கள் அறிவில்லாத மூடர்கள். தீட்டுஇ தீட்டு என்று புலம்பும் இவர்கள் தீட்டு உண்டாகும் இடம் எது என்று தெரியாதவர்கள். தீட்டுத் தோன்றுமிடம் எது என்று தெரிந்து கொண்டால் மானிட உடம்பே தீட்டுத்தான் என்பதைப் புரிந்து கொள்வர்". என்பதாகும். தீட்டு சூதகம். இதுவே ஆசூசம் எனப்பட்டது. தீட்டு தோன்றுமிடம் கருப்பை. இதுவே உயிர்கள் தோன்றுமிடம். எனவே தீட்டு என்று பார்த்தால் மனித உடம்பே தீட்டுத்தான் என்பது விழக்கப்பட்டுள்ளது.

இதே கருத்தைக் கூறும் பாடல் எண் 2552
"ஆசூசம் இல்லை அரு நியமத்தாருக்கு
ஆசூசம் இல்லை அரனை அர்ச்சிப்பவர்க்கு
ஆசூசம் இல்லை அங்கி வளர்போருக்கு
ஆசூசம் இல்லை அருமறை ஞானிக்கே."

இப்பாடலின் பொருள் "உண்மையான அறநெறி உணர்ந்தொழுகும் சான்றோர்களுக்கும்இ தத்துவம் உணர்ந்த ஞானிகளுக்கும், சிவனை வழிபடும் மெய்யடியார்களுக்கும்இ முத்தி வளர்த்து வேள்வி செய்யும் அந்தணர்க்கும், அமலான மெஞ்ஞானம் அடைந்த மேதைகளுக்கும் தீட்டு இல்லை" என்பதாகும்.

தமிழ் -யேர்மன்
Niethar shan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!






# இந்த உலகம் இன்றும் எப்படி அழியாது உள்ளது!

பண்டைய புறநானூற்றுத் தமிழ்ப் புலவன் இந்த உலகிலே தன்னலமற்றவரும் புகழுக்கு இச்சைப் படாதவரும் எனப் பல நல்ல விழுமியங்களைப் போற்றி வாழுபவரும் இருப்பதனாலேயே இந்த உலகம் இன்று மட்டும் உளதாக இருக்கின்றது எனப் பாடியுள்ளான்.



எனக்கு அப்பொழுது 18 வயது. மட்டக்களப்பில் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வினை எழுதிவிட்டு என் திருகோணமலை வீட்டுக்குத் திரும்பினேன். வீட்டுக்கு வந்தபின்னர்தான் உண்மை நிலையினை உணர்ந்து கொண்டேன். என்னுடைய தாயும் தந்தையும் இனி எவ்வித உயர் கல்வியினையும் நான் பெறுவதற்கு உதவமுடியாதவர்கள் என்பதை உணர்ந்து கொண்டேன்.

நான் ஏதாவது பணிநிலை பெறவேண்டுமென எண்ணினேன். அப்பொழுது திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஓர் எழுதுவினைஞர் தேவை என அறிவித்தனர். நேர்காண அழைத்தனர். நேர்காணும் குழுவில் முகாந்திரம் முத்துக்குமாரு, திரு. மு.கோ. சங்கரதாஸ், அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் திரு. என்.ஆர். இராஜவரோதயம் ஆகியோர் இருந்தனர்.

அவர்கள் என்னுடைய கல்விச் சான்றிதழ்களைப் பார்த்துவிட்டு “நீர் பல்கலைக் கழகத்தில் படிக்கவேண்டும்” என்றனர். நான் என்னுடைய குடும்ப வறுமையினைக் கூறினேன். அப்பொழுது “நாங்கள் சங்கத்தின் சார்பாகப் பணம் தந்தால் படிப்பீரா? இந்தியாவில் ஏதாவது பல்கலைக் கழகத்தில் படிக்கலாம்” என்றனர்.


எனக்குக் காதிலே தேன் பாய்ந்தது போல இருந்தது. புறநானூற்றுப் புலவனின் பாடலைப் படித்தபோது “இப்படியான மனிதர்களும் இந்த உலகிலே வாழ்வதனால்தான் இன்று வரை இந்த உலகம் உண்டு” என நினைத்தேன். வீட்டிலே விவரத்தைக் கூறினேன். அப்பொழுது என் தந்தையும் தாயும் “தம்பி நீ இந்த வாய்ப்பை விடவேண்டாம் தொடர்ந்து படி” என்றனர். இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு எனக்கு அனுமதி கிடைத்தது. நேர்கண்டவர்களிடம் அதனைக் கூறினேன்.

“நாங்கள் சொன்னபடி உமக்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் படிக்கப் பணம் தருவோம்” என்றார்கள். தொடர்ந்து படி என்று சொன்ன என் பெற்றோர்களும் நாம் பணம் தருவோம் என்று சொன்ன திருகோணமலை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரும் இந்த உலகத்தின் கல்விக் காருண்யர்களே!

### உண்டாலம்ம இவ்வுலகம்!

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
5 உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி (182).



## செந்தாழம் பூ...மலர்ந்திராது!

ரஜினி நடித்த முள்ளும் மலரும் படம் வெளியாக எனக்கு பெரிதும் உதவியவர் கமல் ஹாஸன்தான் என்று இயக்குநர் மகேந்திரன் நினைவு கூர்ந்தார். விக்ரம் பிரபு-ஷாமிலி நடித்துள்ள 'வாஹா" படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் அவர் பேசுகையில், ”நான் மற்றவர்கள் மாதிரி சினிமாவுக்கு விரும்பி வந்தவன் இல்லை. அழைத்து வரப்பட்டவன். ஆரம்பத்தில் எனக்கு படம் இயக்கும் எண்ணமெல்லாம் இல்லை. ஆனால் என்னுடைய முதல் படமான 'முள்ளும் மலரும்" படத்தை கட்டாயப்படுத்தி இயக்க வைத்தவர் கமல் ஹாஸன்தான்.அந்தப் படத்தை நான் ஆசைப்பட்ட மாதிரி எடுக்க நினைத்தேன். ஆனால், எனக்கு சரியான கேமராமேன் அமையவில்லை. நல்ல டேஸ்ட் உள்ளவர்கள் கிடைக்கவில்லை. உடனே, கமல் சார்தான் பாலுமகேந்திராவை எனக்கு அறிமுகப்படுத்தி அந்த படத்தை நல்லவிதமாக எடுக்க உதவினார். அந்த படத்தோட படப்பிடிப்பு கிட்டத்தட்ட முடிவடைந்து 'செந்தாழம் பூவில்" பாடலும், ஒரு காட்சியும் மட்டும் படமாக்க வேண்டியிருந்தது. ஆனால், தயாரிப்பாளர் தரப்பிலிருந்து இந்த படத்துக்கு இனிமேல் செலவு செய்யமுடியாது என்று கைவிரித்துவிட்டார்கள். அந்த காட்சியையும், பாடலையும் படமாக்கமலேயே படத்தை வெளியிடலாம் என முடிவு செய்தார்கள். ஆனால், எனக்கு அதில் திருப்தியில்லை. இதை கமலிடம் சென்று நான் கூற, அவர் தயாரிப்பாளரிடம் பேசினார். அவருடைய பேச்சுக்கும் தயாரிப்பாளர் செவிசாய்க்கவில்லை. இறுதியில், கமல் தனது சொந்த செலவிலேயே அந்த பாடலையும், காட்சியையும் படமாக்குகிறேன் என்று சொன்னார். அதன் பிறகுதான் அந்தப் பாடல் காட்சி படமாக்கப்பட்டு வெளியானது. அந்த காட்சியும், பாடலும் படத்திற்கு பெரிய பக்கபலமாக அமைந்தது என்று சொல்லலாம். நான் இன்று ஒரு இயக்குனராக இந்த மேடையில் நிற்க கமலும் ஒரு காரணம்,” என்றார்




This Offer Valid Untill 31st May
Lebara play
99€
SUPPORT ANTI-PIRACY
100% LEGAL
HD/SD QUALITY
Lebara Play ஐ புதுப்பிப்பவர்களுக்கு Lebara Play Versino 2.0 STB
வெறும் €9.99 மட்டுமே!
Buy Lebara Play today
Tamil TV and movie pack
Also includes over 20 Hindi channels
+ thousands of movies including
Germany
KERVEN GMBH
Rheinische Str. 64
44137 Dortmund
Tel: 023117721820
Mob: 01738048459
E-Mail:info@kerven-gmbh.com
TEMPO
துரித பணமாற்றுச் சேவை
France
KERVEN GMBH
191 Rue du Faubourg
Saint-Denis 75010 Paris
Tel : 09 77 19 59 11
Mob : 06 26 06 05 22
E-Mail:info@kerven-gmbh.com
Download on the App Store
ANDROID APP ON Google play
Watch on your TV using Apple Airplay or Google Chromecast
Furthermore Queries Please Visit www.kerven-gmbh.com


Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி
M point Supermarkt
M POINT Supermarkt
09.05.2016 திங்கட்கிழமை
அக்ஷய திருதியை தினத்தில்
மாபெரும் திறப்பு விழா
உடனுக்கு உடன் இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் கடல் உணவு வகைகள், மற்றும் மளிகைப் பொருட்களுக்கும் எம்மை நாடுங்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
09.05.2016
Montag
GRAND OPENING
துரித பணமாற்றுச் சேவை!
எம்மை நாடுங்கள்!!
VALUTRANS
MONEY TRANSFER
M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )
Möbil:0179 48 555 54
Tel: 02583 30 30 300
Email : shansure7480@yahoo.de

# பழமொழிகளில் பண்பாடு



(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)

வாழ்வியல் அநுபவங்களால் பெற்ற அறிவைப் 'பட்டறிவு' என்பர். இந்த அறிவு சில செய்திகளை வாய்மொழியாகப் பரப்பி வந்துள்ளது. அச் செய்திகள் பழமொழிகள் என இன்றும் எம்மிடையே வழங்குகின்றன. தொழில்நுட்பம் முன்னேற்றம் அடைந்துள்ள இந்த நூற்றாண்டிலே குறுஞ் செய்திகளைப் பரிமாறும் பண்பாடு ஒன்று தோன்றியுள்ளது. ஆனால் நமது முன்னோர் தமது வாழ்வியலூடாகப் பெற்ற பட்டறிவை பின்னவருக்கு உணர்த்தும் நிலையில் பழமொழிகளாக விட்டுச் சென்றுள்ளனர். பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே இப் பழமொழிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கீழ்க்கணக்கு நூல்களின் தொகுப்பிலே 'பழமொழிநானூறு' என்னும் நூலும் அடங்கியுள்ளது. இந்த நூல் குறுஞ் செய்திகளான பழமொழிகளை ஆவணப்படுத்தும் முயற்சியாகவே தோன்றியுள்ளது.

இந்நூல் முன்றுரை அரையனார் என்பவரால் இயற்றப்பட்டுள்ளது. நானூறு செய்யுட்களிலே தமது காலத்தில் வழக்கிலிருந்து பழமொழிகளைத் தொகுத்தமையே இவருடைய பணியாகும். வெண்பா வடிவிலே அவர் பாடிய பாடலில் நான்காவது அடியிலே ஒரு பழமொழி இணைக்கப்பட்டிருக்கும். முதல் மூன்றடிகளில் அறக்கருத்தை விளக்கி நான்காம் அடியிலே அதனைத் தெளிவாக விளக்கும் பழமொழி இணைந்திருக்கும்.

"அறம் செய்பவர்க்கும் அறவழி நோக்கித்
திறம் தெரிந்து செய்தக்கால் செல்வழி நன்றாம்
புறம் செய்யச் செல்வம் பெருகும் அறஞ் செய்ய
அல்லவை நீக்கி விடும்"

(பாடல் : 23)

அறம் செய்ய நினைத்தால் அதைத் தகுதி உடையவருக்கே நாம் செய்ய வேண்டும். அப்போது தான் அறத்தின் முழுமையான பயனைப் பெறமுடியும் இக்கருத்தைத் தெளிவுபடுத்த மக்களிடையே குறுஞ் செய்தியாக இருந்த 'அறம் செய்ய அல்லவை நீக்கிவிடும்' என்ற பழமொழி நான்காம் அடியிலே இணைக்கப்பட்டுள்ளது.


பழமொழியை 'முதுமொழி' என வழங்கும் மரபு இருந்ததைப் பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியமும் நூற்பா வடிவிலே விளக்கியுள்ளது.

நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப

(தொல் : செய்யுளியல் : 170)

நுட்பமாகப் பொருள் விளங்கவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் மென்மையாகவும் அமைத்துக் கூற வந்த செய்தியைக் கூறும் பண்புடையனவே முதுமொழி என வழங்கப்பட்டன. இதனால் பழமொழிகள் அறிவும் தெளிவும் பட்டறிவும் கொண்ட முதியவர்களுடைய வாக்குகள் என்பது நன்கு அறியப்படுகிறது.

மேலும் பழமொழிகள் செய்திப் பரிமாற்றத்தோடு தமிழ் மொழிப் பயிற்சிக்கும் உறுதுணையாக விளங்கின. தமிழ் வரிவடிவப் பயிற்சிக்குப் பெரிதும் உதவின. அகர வரிசைப்படி அவற்றைத் தொகுத்து மனப்பதிவு செய்வது எளிதாக இருந்தது. வாய்மொழிக்கல்விப் பயிற்சிக் காலத்தில் பழமொழிகளைப் பயிற்றுவதற்கும் இது வாய்ப்பாக இருந்தது. நீண்ட கால வாழ்வியல் அனுபவங்களை ஓர் அரிய செய்தியாக முன்னோர் பழமொழிகளிலே தொகுக்க முயன்றனர். இன்று அச் செய்திகள் படிப்பினைகளாகவும் பண்பாட்டுப் பயிற்றலாகவும் உள்ளன. எனவே இப்பழமொழிகளின் கட்டமைப்பைப் பற்றி இன்று விரிவாக நோக்குவது பயனுடைத்து. ஏனெனில் பழமொழிகள் பேச்சுப்பயிற்சிக்கு மட்டுமன்றி எழுத்து ஆற்றலுக்கும் உதவுவனவாக உள்ளன. அதனால் பழமொழிகளைக் கட்டுரைத்தலைப்புக்களாக வைத்து மாணவர்க்கு எழுத்துப் பயிற்சி அளிக்கும் நடைமுறை இன்றும் தொடர்கிறது.



எடுத்துக்காட்டாக ஒரு பழமொழியின் பயன்பாட்டை நோக்கலாம். 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்னும் பழமொழி நான்கு சொற்களில் அமைந்துள்ளது. இது ஒரு தொடராக இருப்பினும் மூன்று விடயங்களை உள்ளடக்கி உள்ளது.

அகத்தின் அழகு
அழகு முகத்தில் தெரியும்
முகத்தில் தெரியும்.

உடல் அழகை விட இன்னொரு அழகை முதலாவது விடயம் கூறுகிறது. அதுவே அகத்தின் அழகாகும். அகம் என்பது வெளியே தோற்றம் தராது உள்ளே இருப்பது எனக் கருதப்படுகிறது. 'அகம்' என்ற சொல்லுக்கு எதிர்ப் பொருள் தரும் சொல்லாகப் 'புறம்' என்ற சொல் உண்டு. பண்டைய தமிழ் இலக்கியங்கள் மனித வாழ்வியலையே அகவாழ்வு, புறவாழ்வு எனப் பகுத்துக் காட்டியுள்ளன. அதனை வீட்டு வாழ்வு, வெளிவாழ்வு எனவும் கூறலாம். ஆனால் அகத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒரு திரையாக முகம் அமைந்திருப்பதையே இப்பழமொழி நுட்பமாக விளக்கியுள்ளது. உள்ளத்திற்கும் ஓர் அழகு உண்டு. அந்த அழகைப் பிறர் நேரில் காண முகமே உதவுகிறது. ஏனெனில் உள்ளத்தில் ஏற்படும் உணர்வுநிலைகளுக்கு ஏற்ப முகம் மாறுபடும்.

ஆனால் ஒருவருடைய புற அழகையும் முகத்தை வைத்தே மதிப்பிடும் தன்மையும் உண்டு. முகம் அழகாக இருக்கும் ஒருவரை 'அழகானவர்' எனப் புகழ்வதும் உலக இயற்கை. எனவே இருவகைப்பட்ட அழகுநிலைகளை முகத்திலே காண முடியும் என்பதை நன்குணர்த்தவே இந்த முதுமொழி தோன்றியது என்பது வெளிப்படையான விளக்கமாகும். மனிதனுடைய உள்ளத்து அழகையும் உடல் அழகையும் 'முகத்தில் தெரியும்' என்ற மூன்றாவது தொடர் நுட்பமாகப் புலப்படுத்தி நிற்கிறது. ஒருவரோடு நேரில் நின்று உரையாடும்போது இந்த இரு வகையான அழகையும் காணலாம். அழகு என்ற சொல் இப் பழமொழியில் இருவகையான அழகுநிலையைச் சுட்டி நிற்கிறது. ஒன்று உடல் அழகு மற்றது உரை அழகு. மனித வாழ்வியலில் உரையாடல் என்பது ஒருவரோடு இன்னொருவரைத் தொடர்புறுத்தும் ஊடகமாகும். உள்ளம் அழகாக இருந்தால் அவருடைய வாய்ச் சொற்களும் மிகப் பண்பட்ட சொற்களாகவே வெளிவரும். இந்தச் சொற்கள் அன்பை வெளிப்படுத்தும். அதை உரைப்பவருடைய முகமும் புலப்படுத்தி நிற்கும்.

மனித உடலமைப்பிலே 'முகம்' ஒரு இன்றியமையாத உறுப்பாகும். ஏனெனில் பார்த்தல், கேட்டல், பேசுதல், முகர்தல் என்னும் உணர்வுகளை வெளிப்படுத்தும் பொறிகள் முகத்தில் தான் அமைந்துள்ளன. கண்கள் எல்லாவற்றையும் காண்பதற்கு உதவுகின்றன. காதுகள் எல்லாவற்றையும் கேட்பதற்கு உதவுகின்றன. வாய் எல்லாவற்றையும் பேசுவதற்கு உதவுகிறது. மூக்கு எல்லாவற்றையும் முகர்வதற்கு உதவுகிறது. அதனால் முகம் இப் பொறிகளின் செயற்பாட்டாலும் பொலிவு பெற்றுள்ளது.

மனித உடற் கூற்றிலே இவ்வுறுப்புக்களை மனிதர் சரியாகப் பராமரியாது விட்டால் பல நோய்களுக்கு ஆளாக நேரிடும். பார்வை, கேள்வி, பேச்சு என்ற மூன்று திறன்களும் மனிதனுடைய அறிவு நிலையை எடை போடும் ஆற்றல்களாகும்.

தொடர்ச்சி 30ம் பக்கம்

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main







# நவரசநாயகன் முத்துராமன்

1981 - அக்டோபர்- 16 -ந்தேதி -காலை 6.30 மணி ஊட்டி - கால்ப் காட்டேஜ் ஆயிரம் முத்தங்கள் - படத்திற்கு ஒப்பனை செய்து கொண்டிருந்தேன்.

உதவியாளர் ஓடிவந்து “சார்,முத்துராமன் சார் தெருவில் மயக்கமா கிடக்கறார் சார் என்றான். ஓடிச்சென்று காரில் ஏற்றி ஊட்டி டாக்டரிடம் காட்ட, உயிர்போய் அரைமணி ஆகிவிட்டது என்றார்.

மீண்டும் காட்டேஜ்... காரிலிருந்து உடம்பை நிமிர்த்தி இறக்கும்போது அவர் மூச்சுக்காற்று குபுக்கென என்மேல் பட, அய்யோ உயிரோட இருக்கறவரை செத்துப்போயிட்டார்னு டாக்டர் சொல்லிட்டாரே“ அண்ணா, அண்ணா எழுந்திருங்கண்ணா“- என்று நானும் நடிகை ராதா, அவர் அம்மா, மூவரும் யூகலிப்டஸ் ஆயிலை அவர் உடம்பு முழுக்க பூசி தேய்த்தவாறு கதறினோம். அவர் பேசவில்லை. போய்விட்டார்.

ரத்த அழுத்த நோய் பல ஆண்டுகளாக அவருக்கு... படத்தில் ராதாவுக்கு அப்பாவாக நடிக்க வந்தவர்- நான் நேற்று காலை ஓடியதைப் பார்த்து ஆர்வத்தில் ஓடியிருக்கிறார். ஊட்டியில், 7000 அடி உயரத்தில் அதிகாலையில், பனிமூட்டம் அதிகம் இருக்கும்போது, ஆக்சிஜன் மிகவும் குறைவாக இருக்கும். அதனால் ஓடியவர் மூச்சுத்திணறி விழுந்து விட்டார்...

நெஞ்சில் ஓர் ஆலயம் - படம் கண்ணியமான இந்தக் கலைஞனை திரும்பிப் பார்க்கவைத்தது... காதலிக்க நேரமில்லை- தூக்கி நிறுத்தியது..
வங்காள நடிகரைப் போல் கம்பீரத்தோற்றம், காந்தக்கண்கள், கணீரென்ற குரல்,கனிவான உள்ளம், எவரையும் குறை சொல்லாத, எல்லோரையும் நேசித்த- சகோதரக் கலைஞன்- இதோ நம்மை விட்டு அவசரமாகப் புறப்பட்டுப் போய்விட்டார்.
தாங்க முடியாத சோகத்துடன் இந்தச்செய்தியை சென்னையிலுள்ள அவர் வீட்டுக்குத் தெரிவித்தோம்.
தாயே உனக்காக - காவல் தெய்வம் -ராஜ ராஜ சோழன்- காரைக்கால் அம்மையார்- திருமாங்கல்யம் - தீர்க்க சுமங்கலி என அவரும் நானும் 15 படங்களுக்கு மேல் சேர்ந்து நடித்தோம்.
ஒரு மூத்த சகோதரனாக என் மீது அன்பைப் பொழிவார்.
அதிமுக அமைச்சராக அன்று இருந்த ஆர். எம். வீ.அவர்கள் மூலம் அரசு போக்குவரத்து மினி பஸ் ஒன்றை ஏற்பாடு செய்து, டி.ஜி.பி. ஆக இருந்த பரமகுரு அவர்கள் அனுமதியுடன், வழியில் பரிசோதனைத் தடைகள் தவிர்த்து- காலையிலிருந்து எதுவும் சாப்பிடாமல்- மாலை 4 மணிக்கு - ஊட்டியிலிருந்து புறப்பட்டு மறுநாள் விடியற்காலை 5.00 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தோம்.

சிவாஜி அண்ணனும் திரளாக, திரை உலகத்தினரும் காத்திருந்தனர். சென்ற வாரம் சிரித்துக்கொண்டு ஊட்டி போனவர், சடலமாய்த் திரும்பிய கோரக்காட்சியைக் கண்டதும், மயங்கிச் சரிந்து விட்டார் திருமதி. சுலோசனா.
“டேய் தம்பி ! அந்தக் காலத்தில் முருகன் வேஷத்தில, நாடக மேடையில நடிச்சிட்டு இருக்கும்போது, விஸ்வநாத தாஸ் உயிரை விட்டமாதிரி, முத்துராமன், படப்பிடிப்புக்குப் போய் “ஜாக்கிங்“ பண்ணும்போது உயிரை விட்டிருக்கான். நல்ல சாவு. யாரும் வருத்தப் படாதீங்க“- என்று சிவாஜி கூறியது -அதிர்ந்து இருண்டு போயிருந்த எங்களுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.முத்துராமன் தமிழ் உச்சரிப்பு காதுக்கு இனிமை. சொல்வளம் மிக்க நடிகர். திருவிளையாடல் திரைப்படத்திலும், ராஜராஜ சோழன் திரைப்படத்திலும் அவரது வசனங்கள் கம்பீரமானவை. சிறந்த கலைஞன். உரிய இடம் தமிழ் சினிமாவில் கிடைக்கவில்லை. இப்பவும் அவர் நடித்த படங்களை விரும்பிப் பார்ப்பேன்.
நடிகர் சிவகுமாரின் பதிவில் இருந்து ......

## பழமொழிகளில் பண்பாடு

தொடர்ச்சி 29 ம் பக்கம்

அது மட்டுமன்றி இந்த ஆற்றல்களை இழக்கும் நிலையும் ஏற்படலாம். விழிப்புலன் இழப்பு, செவிப்புலன் இழப்பு, பேச்சாற்றல் இழப்பு என இந்நிலை இன்று பெரிதும் துன்பமான வாழ்க்கையையே தருவதாகவும் அமைந்துள்ளது. குழந்தைப்பருவநிலையிலே இம்மூன்றும் ஒழுங்காக இருப்பதைச் சீர் செய்துவிட வேண்டும். இப்பொறிகளில் ஏற்படும் நோய்த்தாக்கங்கள் உடனடியாக நீக்கப்பட வேண்டும். மேலும் கல்விப் பயிற்சியின் போது இம் மூன்று பொறிகளும் பெரிதும் பயன்படுபவை. கற்றலின் போதும் கற்பித்தலின் போதும் இந்த உறுப்புக்கள் பெரிதும் உதவுவன. ஒரு விடயத்தைப் பார்ப்பதற்கும் ஒரு செய்தியைக் கேட்பதற்கும் அது பற்றிப் பேசுவதற்கும் இவை இன்றியமையாதவை.

எனவே இப்பழமொழி பல்வேறு நிலைகளை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. நமது முன்னோர்கள் இவற்றையெல்லாம் கணித்தே இந்த முதுமொழியைப் பதிவு செய்துள்ளனர். நமது பண்பாட்டை இன்று ஆராய்வோர் இச் செய்திகளை உள்வாங்கியே ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும். உலகில் ஏனைய மொழிகளிலும் பழமொழிகள் உள்ளன. ஆனால் அவை இத்துணை ஆழமான கட்டமைப்பை உடையனவா என்பதும் ஆய்வுக்குரியதே. குறிப்பாகப் புலம் பெயர் நாடுகளில் வாழும் எமது மூன்றாம் தலைமுறை இப் பழமொழிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவு நிலைகளைத் தெளிவாக உணர வேண்டும். முகப்புத்தகம் காட்டும் முகத்தைவிடப் பழமொழி காட்டும் முகம் தொன்று தொட்டுவரும் எமது பழைமையான பண்பாட்டை மிக அழகாக எடுத்து விளக்கியுள்ளதை உணரவேண்டும்.

(தொடரும்)



ஸ்ரீ கனகதுர்க்கா
அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445
0177 20 16 941
Tel: 02304/ 16721 Robert koch Str.5- 58239 Schwerte

Milin Impex GmbH
தமிழர்களுக்குத் தேவையான எல்லா உணவுப்பொருட்களின் மொத்த மலிவு விற்பனையாளர்கள்
Dortmund நகரில்
Geschäftszeiten: Dienstag, Mittwoch, Freitag 10:00 bis 19:00 UhrMontag & Donnerstag 07:00 bis 17:00 Uhr Samstags 09:00 bis 16:00 UhrSonn. und Feiertags: Geschlossen

மேலதிக விபரங்களுக்கு
Web :www.milinimpex.de
பசுமையான மரக்கறிகள் கடலுணவுப் பொருட்கள் இவற்றின் இறக்குமதியாளர்கள்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288





24 படத்துக்கு இசையமைக்க ஏ ஆர் ரஹ்மான் ஒப்புக் கொண்டது மற்றும் அவர் கதை கேட்ட விதம் குறித்துப் பேசிய நடிகர் சூர்யா, ரஹ்மானுக்கென்றே ஒரு கதை சொன்னார். அந்தக் கதை: 24 படத்தின் கதையை என்னிடம் விக்ரம் குமார் 4 மணி நேரம் முழு ஸ்க்ரிப்டாக சொல்லி முடித்ததும் எழுந்து நின்று கைத்தட்டினேன். இப்படி பிரமித்துப் பாராட்டியது இதுதான் முதல் முறை.

## சூரியா இசைப்புயலுக்கு சொன்ன கதை...

அடுத்து இந்தப் படத்துக்கு ரஹ்மான்தான் இசை என்று முடிவு செய்து அவருக்கு ஒரு எஸ்எம்எஸ் அனுப்பினேன். அவரும் ஒரு தேதி கொடுத்து 30 நிமிடம் டைம் கொடுத்தார். எனக்கு பெரிய வியப்பு... எனக்கு 4 மணி நேரம் சொன்ன கதையை ரஹ்மானுக்கு எப்படி 30 நிமிடங்களில் விக்ரம் குமார் சொல்லப் போகிறார் என்று. ஆனால்அரை மணி நேரம் மட்டுமே தந்த ரஹ்மான், கடைசியில் 6 மணி நேரம் கதை கேட்டார். பின்னர் இசையமைக்க ஒப்புக் கொண்டார். அவருக்காக ஒரு சின்ன கதையைச் சொல்கிறேன். ஒரு குழந்தை ஒரு சாக்லெட் கடைக்குள் நுழைந்து அங்கிருந்த சாக்லெட் பாட்டில்களை எல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தது. பின்னாலேயே வந்த அவளது அம்மா, உனக்கு வேண்டிய சாக்லெட்டை எடுத்துக் கொள் என்று அந்த குழந்தையிடம் சொன்னார். ஆனால், அந்த குழந்தையோ எந்த சாக்லெட்டும் எடுக்கவில்லை. ஆனால் சாக்லெட்டுகளையே பார்த்துக் கொண்டிருந்தது. கடைக்காரர் தொடர்ந்து வற்புறுத்தி சாக்லெட் எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

ஆனால், அந்த குழந்தை திரும்பவும் சாக்லேட் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு, ஆனால் சாக்லெட்டையே பார்த்துக் கொண்டிருந்தது. பொறுமையிழந்த அந்த கடைக்காரர் தனது கையில் ஒரு கொத்து சாக்லெட்டை எடுத்து அந்த குழந்தையின் கையில் திணித்தார். அந்த குழந்தையும் சிரித்தபடி அதை பெற்றுக் கொண்டு கடையை விட்டு வெளியே வந்தது. அப்போது, அந்த குழந்தையின் அம்மா, அவளைப் பார்த்து ஏன் முதலில் சாக்லேட் வேண்டாம் என்று அடம்பிடித்தாய் என்று கேட்டதற்கு, அந்த குழந்தை "என்னுடைய கை மிகவும் சிறிய கை. என் கையால் எடுத்தால் கொஞ்சம்தான் கிடைக்கும். ஆனால், கடைக்காரரின் கை பெரியது. அவரது கையால் எடுத்து கொடுத்தால் நிறைய சாக்லெட்டுக்கள் கிடைக்கும்," என்றது. நாம் கடவுளிடம் எது கேட்டாலும் குறைவாகத்தான் கேட்போம். ஆனால், கடவுள் நமக்கு தரும்போது நாம் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே தருவார். அதுபோலத்தான் ஏ.ஆர்.ரஹ்மானும். நாம் அவரிடம் எதையும் எதிர்பார்த்து கேட்க முடியாது. ஆனால், அவர் நாம் எதிர்பார்த்ததைவிட நிறையவே தருவார்," என்றார். லேசான புன்னகையோடு இந்தக் கதையைக் கேட்டு ரசித்தார் இசைப் புயல் ரஹ்மான்!



## "நான் ஆசிர்வதிக்கப்பட்டவள் போல உணர்கிறேன்,"

- எமி ஜாக்ஸன்.

ரஜினியுடன் 2.ஓ, விஜய்யுடன் தெறி படங்களில் நடித்ததன் மூலம் என் கனவு நனவாகிவிட்டது. நான் ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றார் நடிகை எமி ஜாக்ஸன். ரஜினிகாந்த் - ஷங்கர் கூட்டணியில் உருவாகும் 2.O-வின் (எந்திரன் படத்தின் 2-ம் பாகம்) படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது. இந்தப் படத்தை ரூ. 350 கோடி செலவில் லைக்கா புரொடக்‌ஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இந்திய சினிமா வரலாற்றில் இவ்வளவு செலவழித்து எடுக்கப்படும் முதல் படம் இதுதான்.

ரஜினிக்கு வில்லன் வேடத்தில் பாலிவுட் நடிகர் அக்‌ஷய் குமார் நடிக்கிறார். கதாநாயகியாக எமி ஜாக்சன் நடிக்கிறார். ஏ.ஆர். ரஹ்மான் இசை அமைக்கிறார். வசனத்தை எழுத்தாளர் ஜெயமோகன் எழுதியுள்ளார். ஆஸ்கர் விருது பெற்ற ரசூல் பூக்குட்டியும் பணியாற்றுகிறார்கள். இந்தப் படத்தில் பணியாற்றுவது குறித்து நடிகை எமி ஜாக்ஸன் கூறுகையில், "சென்ற மாதம் ரஜினி - அக்‌ஷய் குமார் தொடர்புடைய ஆக்‌ஷன் காட்சிகள் எடுக்கப்பட்டன. இதுவரை படப்பிடிப்பு மிக நல்ல அனுபவமாக உள்ளது.
மே மாதம் மீண்டும் 2.0 படப்பிடிப்பில் கலந்து கொள்கிறேன். இந்தப் படத்தில் நடிகர் கதாபாத்திரத்தில் நடிக்கவில்லை. நான் வியந்து பார்த்த நடிகர் ரஜினிகாந்த். அவருக்கு அடுத்து நான் ஆச்சர்யமாய்ப் பார்த்தது விஜய்யை. இந்த இருவருக்கும் ஜோடியாக நான் நடித்துவிட்டேன். இப்போது நான் ஆசிர்வதிக்கப்பட்டவள் போல உணர்கிறேன்," என்கிறார்.







## யார் கடவுள்




Hückelhoven நகரில் புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் ஆசியா சமுத்திரம் Parkhofstraße-101

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்

பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயையான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.

Vijay tv agent

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

VIJAY

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை

Ria Money Transfer
MoneyGram International Money Transfer
VALUTRANS MONEY TRANSFER



உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

# EurAsian - Tours

LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965

VALUTRANS MONEY TRANSFER
துரித பண மாற்றுச் சேவை!

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!
info@eurasian-tours.com

# Jasmine Silk House

என்றும் மலிவாக தரமாக திருமணப்
பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள்,
பஞ்சாபிகள்,அனைத்தும் புத்தம்,
புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!

HP:0173 1937 325
Tel:02102 844744
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
T.Mohanadas
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

# ASIA BAZAR

Ria Money Transfer
MoneyGram
VALUTRANS MONEY TRANSFER

துரித பண மாற்றுச் சேவை!
ஆசிய, ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...

உரிமையாளர்:
பா. கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282

புதிய இலங்கை உணவகம்
Dortmund நகரில்...

# NEW CEYLON IMBISS

இலங்கை உணவை
சுத்தமாக சுவையாகச்
சுவைக்க நாடுங்கள்

புதன் விடுமுறை
Tel: 0231 72 52 859
0171 6157 130

தினமும் ஒரு சலுகை!!!
Tagesangebote

திங்கள் முதல் செவ்வாய்
வரை மற்றும்
வியாழன் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும்
விடுமுறை நாட்களில்
16.00 -22.00 மணி வரை
Annen Str.1
44137 Dortmund

வீட்டுக்கடன்: 1,3 % லிருந்து வங்கி கடன்: 1000 € = 1,65 € மாத வட்டி

# SEFA 24

Mein Allfinanzberater

இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
நீங்கள் வீடு வேண்டப் போறீர்களா?
நீங்கள் வங்கிக் கடன் எடுக்க போறீர்களா?
இலவச ஆலோசனைக்கு எங்களை நாடுங்கள்!

எங்கள் வங்கிகள்:
COMMERZBANK, Postbank, Deutsche Bank, DSL Bank, ING DiBa, Sparkasse, Volksbanken Raiffeisenbanken

0231 546 015 20

SEFA24 Sozial-Ethnische Finanzagentur GmbH | Rheinische Str. 85, 44137 Dortmund | 0231 546 015 20 | info@sefa24.de

யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
மரக்கறி கடலுணவுப் பொருட்களின் மொத்த இறக்குமதியாளர்கள்

# StaR - Impex

Asia & Afro Großhandel & Einzelhandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

Tel:0231 860 26 96
Fax: 0231/8602698
Mobil: 0172/2183703
e-mail: star-impex@live.de

StaR Impex :
Inh :K.Sivasubramaniam
Kipper Str.3 44147 Dortmund Germany